# நெருப்பாய் ஒரு நிலவு



எஸ். லதா சரவணன்

# நெருப்பாய் ஒரு நிலவு

## 1

**வெ**ண்மையான டைல்ஸ் பதிக்கப்பட்ட தரையில் தன் முகத்தைப் பார்த்தபடியே எதிரில் வந்த யார் மேலும் இடிக்காமல் கவனமாய் செல்வாவின் டேபிளுக்கு வந்தான் பிரபு. குப்பையாய் குவிக்கப்பட்ட காகிதங்களுக்கு நடுவில் எதையோ பொறுக்கிக் கொண்டிருந்த செல்வா பிரபுவின் வருகையால் ஈர்க்கப்பட்டு நிமிர்ந்தவன், அவனின் அற்புதமான உடையலங்காரத்தைப் பார்த்து,

''என்னடா புது மாப்பிள்ளை மாதிரி ஜம்முன்னு வந்திருக்கே, எனக்குத் தெரியாம யாரையாவது கல்யாணம் பண்ணிக்கிட்டியா!''

''ச்சீ..! ஒரு பொண்ணைப் பார்த்து அட்லீஸ்ட் ஒரு வருஷமாவது ஊரெல்லாம் சுத்தினதுக்கு அப்புறம், லைட்டா போரடிக்கும் பார்த்தியா அப்போதான் கல்யாணமின்னு ஒரு கொள்கையோட இருக்கேன். அதனால கண்டிப்பா என் மேரேஜ் எல்லோருக்கும் தெரிஞ்சுதான் நடக்கும். இது வேற விஷயம்!'' கண்ணடித்தான் பிரபு.

''அது என்னவோ?'' - செல்வா.

''இன்னைக்கு ஒரு முக்கியமான இன்டர்வியூ இருக்குன்னு எடிட்டர் சொன்னார். அங்கே ஏதாவது என் லெவலுக்கு மாட்டலாம் இல்லையா?''

''ஏன்டா அலையறே? அப்படி பெண்கள் கிட்டே என்னதான் இருக்கு?''

''நானென்ன உன்னை மாதிரி சாமியாரா? நீ எழுதிற கட்டுரைக்கு எத்தனை பெண்கள் பாராட்டு கடிதம் எழுதுறாளுங்க. நானாயிருந்தா அவளுங்கள்ல யாராவது ஒருத்தியை பிக் பண்ணிட்டுப் போயிருப்பேன்.''

''சரிதான்..!''

''எனக்கு என்னடா மச்சான் குறைச்சல் கேமிராவை தோளில் மாட்டிக்கிட்டு ஒரு போஸ் கொடுத்தா போதும். அவ அவ என்னைக் கொத்திகிட்டு போறதுக்கு. என் பர்ஸனாலிட்டியை மட்டமா கணக்கு போடாதே!''

''ஆமாமா பெரிய அஜீத்குமார்னு மனசில நெனைப்பு.''

''உனக்கு எப்பவுமே பொறாமை அதிகம்டா..''

''ஸார் உங்க இரண்டு பேரையும் எடிட்டர் அய்யா கூப்பிடறார்'' பவ்யமாய் சொல்லிவிட்டுப் போனான் ப்யூன்.

''நீ போ ராஜ் நாங்க உடனே வர்றோம்'' விளையாட்டுப் பேச்சை விடுத்து இருவரும் விறைப்பானார்கள். எடிட்டர் சக்திவேல் என்ற பெயர் பலகையை சுமந்து இருந்த அறைக்குள் அனுமதியுடன் உள்ளே நுழைந்து ''குட்மார்னிங் ஸார்'' என்று கோரசாய் குரல் எழுப்பினார்கள்.



''மார்னிங் பாய்ஸ்'' என்ற சக்திவேல் பத்திரிகைத் தொழிலில் பழம் தின்று கொட்டை போட்டவர். போட்டிகள் நிறைந்த உலகில் தரமான ஒரு பத்திரிகையை நடத்துவது என்பது அத்தனை இயல்பில்லையே. தங்களது ரேட்டிங்கை உயர்த்திடவும் விற்பனையைப் பெருக்கியும் கிசுகிசு, மூணாம் தர விஷயங்களைப் பற்றி பத்தி பத்தியாய் விளக்கம்... ஹீரோயின் ஆடைக் குறைப்பு குளோஸப்கள், இவையெல் லாம் இல்லாமல், மக்களின் நலனிற்காய் நடத்தப்படும் பத்திரிகைதான் 'தீப்பிழம்பு'. அதன் எடிட்டர் தான் சக்திவேல். சமூகத்தில் சிறந்த மனிதர், இரக்க சுபாவமும் கருணை உள்ளமும் கொண்டவர்.

''ம்..ம்... உட்காருங்க இரண்டு பேரும்!'' என்று எதிரில் இருந்த நாற்காலியைக் காட்டினார் தன் முன்பக்க வழுக்கையைத் தடவியபடியே.

இருவரும் மர நாற்காலியை ஆக்ரமித்துக் கொள்ள, ''செல்வா, போனவாரம் நீ வேலையில்லாப் பட்டதாரிகளைப் பற்றி எழுதிய ஆர்ட்டிக்கல்ஸுக்கு நிறைய லெட்டர்ஸ் எல்லாம் வந்திருக்கு.''

''தேங்க்ஸ் ஸார்.''

''எனக்கெதுக்குப்பா தேங்க்ஸ் சொல்றே! உன் எழுத்துக்களில் ஒரு ஜீவன் இருக்கு. அது படிக்கிறவங்க, உணர்வுகளைத் தட்டி எழுப்புது. இளைஞர்கள்தான் எதிர்காலமின்னு சொன்ன விவேகானந்தருடைய கூற்றை நீங்கள் எல்லாம் உண்மையாக்குறீங்க..''

''இப்போ நீங்க போகப் போற இடமும் சமூகத்திற்கு ரீச் ஆகணும். இந்த விசிட்டிங் கார்டுல இருக்கிற அட்ரஸுக்கு

போய் ஒரு பேட்டி எடுக்கணும். அங்க மேகலான்னு ஒரு லேடி இருப்பாங்க. உங்களுக்கு வேண்டிய உதவியை அவங்க செய்வாங்க. இதுவரையில் இந்த இடத்தைப் பற்றி யாரும் பேட்டி எடுத்தது இல்லை.''

''அதுமட்டுமில்லை செல்வா இது அற்புதமான கட்டுரையா வெளியே வரணும். அது உன் கையில தான் இருக்கு. போட்டோஸ் கவர் செய்ய உன்னோட நம்ம பிரபுவை கூப்பிட்டுப் போ. இந்தாங்க கன்வேயன்ஸ்'' என்று ஒரு கணிசமான தொகையைத் தந்தார்.

''சரி சார்... நாங்க கிளம்புறோம். லாயர்ஸ் மீட்டிங்கில் நடந்த பேச்சையெல்லாம் ரிக்கார்ட் பண்ணி ஜோசப்கிட்டே கொடுத்து இருக்கேன் ஸார். அதை பிரிண்ட் போட்டு புரூப் பார்த்திடுங்க ஸார்.''

''கண்டிப்பா செல்வா..''

தன் அறைக்குச் சென்று வேண்டியவற்றை கலெக்ட் செய்த பிறகு, கழுகுப் பார்வையோடு அந்த கார்டை நோக்கிய பிரபுவை அலட்சியப்படுத்தி தன் சட்டைப் பைக்குள் அதைப் போட்டுக்கிட்டு நுழைந்தான் செல்வா.

வண்டியை உசுப்பிட அது கணவனின் கொஞ்சலுக்கு சிணுங்கும் இளம் மனைவியைப் போலத் தயாரானது.

''செல்வா! இப்பவாவது சொல்லுடா நாம எங்கே போறோம். எடிட்டர் அத்தனை பில்ட்ப் கொடுத்தாரே!''

''பிரபு எல்லாம் உன் அலங்காரத்திற்கு ஏற்ற இடம்தான்.''

''லேடீஸ் ஆஸ்டலா?''



''நீதான் நேரடியா பார்க்கப் போறீயே? அதுவரையில் சஸ்பென்ஸ்.''

''உன் சஸ்பென்ஸ்ல தீயை வைக்க!''

வாய் விட்டுச் சிரித்தான் செல்வா. வண்டி நின்ற இடம் கண்டு முகத்தை சுழித்தான் பிரபு.

''இறங்குடா மச்சான்!''

''என்னடா செல்வா இங்கே ஏன் கூட்டிட்டு வந்தே? ஏதாவது ட்ரீட்மெண்ட் எடுக்கப் போறீயா?''

''பிரபு எடிட்டர் இங்கேதான் பேட்டி எடுக்கச் சொல்லியனுப்பினார்.''

''நோ நான் இங்கே வரமாட்டேன்.''

''வேண்டாம் கொடுத்த வேலையை ஒழுங்கா செய்யலைன்னா உன்னை டிஸ்மிஸ் செய்துடுவாங்க. அப்புறம் பூவாவுக்கு லாட்டரிதான் பரவாயில்லையா?''

''அய்யய்யோ... நீ சுடுகாட்டுக்கே கூப்பிட்டாலும் வர நான் தயாரா இருக்கேன். சரியா.. சிரிக்காதேடா... என் வயிறு எரியுது. நீயும் அந்த ஆளும் சேர்ந்திட்டு என்னைப் பழிவாங்கிட்டீங்களே, நைட்டே ஒரு வார்த்தை சொல்லி இருந்தா, சாதாரணமா டிரஸ் போட்டு இருப்பேன்..''

''புலம்பாம வாடா..!''

வாசலில் ஒரு கொட்டாவியோடு உட்கார்ந்து இருந்த வாட்ச்மேனிடம் அடையாள அட்டையைக் காட்டிவிட்டு ஹாலைக் கடந்து சென்று, 'என்னைத் தட்டு' என்று ஆங்கிலத்தில்

எழுதியிருந்த கதவை மூன்று விரல் மடக்கி இருமுறைத் தட்டினான் செல்வா.

''யெஸ் கம்மின்..'' என்ற குரலைத் தொடர்ந்து,

''மிஸஸ்.. மேகலா.. பத்மநாபன்..''

''யெஸ், மை செல்ஃப்.''

''குட்மார்னிங் மேம். வி ஆர் ஃப்ரம் பிரஸ்.''

''வெல்கம்.. நீங்க வருவீங்கன்னு உங்க எடிட்டர் மிஸ்டர் சக்திவேல் போன் பண்ணினார். ப்ளீஸ் சிட்டவுன்.''

''நன்றி மேடம். என் பெயர் செல்வா. இது பிரபு.. எங்க போட்டோ கிராஃபர்.''

ரொம்ப முக்கியம் முனகினான் பிரபு.

''ஒன் மினிட்.. என்ன சாப்பிடறீங்க, ஹாட் ஆர் கோல்டு?''

''கொஞ்சம் சில்னுன்னு ஆர்டர் பண்ணுங்க மேடம் நான் ரொம்ப சூடா இருக்கேன்.''

''என்னது?''

''வெயில்ல வந்ததைத்தான் அப்படி சொல்றேன்.''

''சும்மாயிரு பிரபு.''

மேகலா தன் தொண்டையை செருமியபடி இண்டர்காமில் இரண்டு குளிர்பானங்களுக்கு ஆர்டர் பண்ணினாள். மேகலாவிற்கு குறைந்தது நாற்பத்தைந்து வயதிருக்கும். ஆனால் பார்வைக்கு சற்று மூப்பாய் தெரிந்தார். பழைய சோடா புட்டி கண்ணாடி போட்டது வேறு கண்ணை இன்னமும் பெரிசாய்க் காட்டியது.

டேபிளில் மினி டேப்ரிக்கார்டர் சுழல ஆரம்பித்தது. விதியே என்று பிரபு தன் காமிராவினால் அந்த பெண்மணியை பல கோணங்களில் உள் வாங்கினான்.

''இந்த டிரஸ்ட் ஆரம்பிச்சு எத்தனை வருடங்கள் ஆகிறது?''

''22 வருடங்கள் ஆகிறது. நானும் என் கணவரும் 82ல் கல்யாணம் செய்துகிட்டோம். எங்களுக்கு குழந்தை இல்லை. இயல்பிலேயே சேவை மனப்பான்மை உள்ள என் கணவர் இந்த சேவா சங்கத்தை துவங்கினார். அவர் ஒரு சிறந்த மனநல மருத்துவரும் கூட!''

''மேடம் சேவா சங்கம்ங்கிற பெயரில், இவர்களுக்கு ஏன் ஆதரவு தருகிறீர்கள். இந்த எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது?''

''அநாதை இல்லம், முதியோர் காப்பகம், ஆதரவற்ற பெண்களுக்கு என எத்தனையோ இல்லங்கள் இருக்கு. இங்கே இருக்கிற ஒவ்வொருத்தருக்கும் எதிர்காலம் ஏதாவது ஒரு வகையில் பிரகாசமா இருக்கும். ஆனா, இந்த மாதிரி தன்னையே யாருன்னு அடையாளம் தெரியாதவங்களுக்கு, எத்தனை வளர்ந்தாலும் இரண்டு வயது குழந்தைகளுக்கு மட்டுமே உள்ள முதிர்ச்சி இவங்களுக்குத்தான் ஆதரவு தேவைன்னு முடிவு செய்து துவங்கிய இல்லம்தான் இது.''

''வெல்சன்ட் மேடம். ஆனா இங்கே இருக்கிற நோயாளி களுக்கு எந்த முறையில் ட்ரீட்மெண்ட் தர்றீங்க?''

''இங்கே ஒவ்வொருத்தரும் ஒரு ரகம். கஷ்டம்தான். இவங்களை இரவும் பகலும் செக் பண்ணிட டியூட்டி டாக்டர்ஸ் உண்டு. மருந்துகள் மாத்திரைகளுக்கு சில

பார்மஸிகள் ஹெல்ப் பண்றாங்க. நல்ல பல உள்ளங்களால என்னால இந்த இல்லத்தை நடத்த முடியுது.''

''மேடம் இப்படி ஒரு இல்லம் நடத்த பணம் ரொம்பவும் முக்கியம் செலவுக்கு எல்லாம்?''

''என் கணவர் நல்ல பிஸினஸ் மேன். இந்த இல்லம் இருக்கிற இடம் அவருடைய பரம்பரை வீடு. மற்ற சொத்துக்கள், தெரிந்த நல்ல உள்ளங்களின் உதவி இதெல்லாம் சேர்ந்துதான் இத்தனை நாள் நல்லபடியா நடந்து வருகிறது.''

''மேடம்... இத்தனை நாள் வரை இந்த இல்லத்தைப் பற்றி அதிகம் வெளியே தெரிவிக்காம இருந்ததற்கு காரணம்..''

''என் கணவர்தான்'' அவர் நெற்றியில் ஒரு விரல் அளவிற்கு தீட்டப்பட்ட விபூதியும் கழுத்தில் மிக மெல்லிய தங்கச் சங்கிலி இவையெல்லாம் அவரை கைம்பெண்ணாய் காட்டினாலும், மனதளவில் அவர் கணவரோடு வாழ்கிறார் என்று உணர வைத்தார் மேகலா.

''அப்பவும் சரி, அவருக்கு ஒரு கை கொடுக்கிறது இன்னொரு கைக்கு தெரியக் கூடாதுன்னு பாலிசி உள்ளவர். அவர் இறந்த பிறகுதான்..!''

''என்னாச்சு மேடம்?''

''டூ மன்த்ஸ் முன்னாடி நடந்த விபத்திலே..!'' கண்ணாடியை எடுத்து நாசூக்காய் கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டார்.

''ஐ'யம் ஸாரி மேடம்..'' - செல்வா.

''பரவாயில்லை.. இப்ப நிதி நிலைமை ரொம்ப மோசமா இருக்கு. அதனால ஒரு பப்ளிசிட்டிக்காக மட்டும் இல்லாம சோஷியல் ஒர்க்கா நினைச்சு உங்க எடிட்டர்கிட்ட பேசினேன். அவரும் ஒத்துக்கிட்டார்.''

''கட்டாயம் மேடம்... இல்லம் நல்லபடியாக நடக்க என் வாழ்த்துக்கள்... ரூம்ஸ் எல்லாம் பார்க்கலாமா?''

''தாராளமா வாங்க!'' அவர் முன்னே நடக்க, காலி செய்த குளிர்பான பாட்டிலை நகர்த்தி விட்டு இவர்களும் எழுந்தனர்.

''டேய் பிரபு, அங்கே என்னடா பராக்கு பாத்துக்கிட்டு இருக்கே.''

''நம்ம எடிட்டர் கடைசியிலே இப்படி என்னை பழி வாங்கிட்டாரேடா அந்தாளுக்கு எப்பவுமே என் பர்சனாலிட்டி மேல ஒரு கண்ணு. வழுக்கைத் தலைவன் எவ்வளவு பர்சனாலிட்டியா வந்தேன். கடைசியிலே இப்படி மெண்ட்டல் ஆஸ்பிட்டல் வாசல்ல வந்து நிறுத்திட்டானே!''

''தயவு செய்து உன் புலம்பலை நிறுத்திவிட்டு வர்றீயா?''

''சிறைச்சாலை போல் ஒவ்வொரு அறையும் இரும்பு கம்பிகள் கொண்டு மூடப்பட்டு இருந்தது. முதல் இரண்டு அறைகளைக் கடந்து செல்லும் போது நண்பனை கைப்பிடித்து பின்னுக்கு இழுத்தான் பிரபு.

''என்னடா?''

7'O clock கொண்டு பளபளவென்று மழித்திருந்த முகத்தை தொட்டுக்காட்டி, ''ம்ப்ச் எல்லாமே வேஸ்ட்டா போயிடுச்சேடா'' என சோகமாய்ச் சொல்ல வெகு சிரமப்பட்டு தன் சிரிப்பை அடக்கிக் கொண்டான் செல்வா.

''மேடம் இந்த செல்லில் இருப்பவர்கள் எல்லாம் இங்கேயெப்படி கொண்டு வரப்பட்டார்கள்?''

''சிலர் உறவுகளால், சிலர் அநாதையாய் இருப்பவர்கள் என்று முன்பின் அறியாதவர்கள் கூட அழைத்து வருவார்கள்.''

''இந்த செல்லில் இருக்கிற பொண்ணு பேரு பத்மா, கல்யாணமாகி எத்தனையோ கஷ்டங்களைப் பட்டுட்டா. பெண் குழந்தை வேண்டாமின்னு புகுந்த வீட்டு ஆளுங்க செய்த கொடுமையில் ஒருநாள் இப்படி ஆயிட்டா..''

''ரமான்னு பேரு இந்தப் பொண்ணுக்கு.. கல்யாணம் பண்ற வயசுப் பொண்ணை கண்ணுக்கு நேரா விபத்தில் பறி கொடுத்தவ அன்றைக்கு இருந்து இப்படி ஆயிட்டா..''

''டெய்லி மார்னிங் இவங்க எல்லாருக்குமே பிசிக்கல் எக்சர்சைஸ் சொல்லித் தருவோம். அப்புறம் பிரேயர், பிரேக்ஃபாஸ்ட் சின்னச் சின்ன வேலை, லன்ஞ், உறக்கம், நடைபயிற்சின்னு ரொட்டீனா தொடரும்.''

அதேபோல் ஒவ்வொரு செல்லிலும் உள்ளவர்களை சுருக்கமாக ஐந்து நிமிடங்கள் பேசினார் மேகலா. ''இத்தோட இந்த வார்ட் முடியுது. இங்கே ஒரு போட்டோ எடுக்கட்டுமா மேடம்.''

''ஷ்யூர்..!''

''பிரபு இங்கே ப்ளோ-அப் பண்ணி மேடமோட சேர்த்து ஒரு ஸ்டில் எடுடா..'' கூப்பிட்ட குரலுக்கு பதில் வராமல் போகவே திரும்பியவன், முதல் வார்டின் ஆரம்பத்திலேயே, நீல நிற சீருடை அணிந்த பெண்ணிடம் பிரபு பேசுவதைக் கண்டு



மேகலாவிடம் ''ஒரு நிமிடம்'' என உரைத்துவிட்டு பிரபுவிடம் நகர்ந்தான்.

''மாமா மாமா என்னை ஒரு போட்டோ எடுக்கறீயா?'' என்று பிரபுவிடம் கெஞ்சியது அந்தப் பெண்.

''ச்சீ போ!'' என்று அவன் விரட்ட மிரண்டு ஒதுங்கினாற் போல் ஒதுங்கி அவன் தலைமுடியைக் கலைத்து விட்டு ஓடியது.

''கடவுளே என்னை ஏம்பா இப்படி சோதிக்கிறே?''

''என்னடா பிரபு பொண்ணு மாட்டிக்கிச்சு போல?'' என்று கண்ணடிக்க.

''சும்மாயிரு செல்வா. நீ வேற என்னை வெறுப்பேத்தாதே.''

''சரி சரி வா.. அவங்க வெயிட் பண்ணிக்கிட்டு இருக்காங்க ஒரு ஸ்டில் எடு.'' பிரபுவின் பார்வை மேகலாவிடம் சென்றது. கலைந்த தலையும் கசங்கிய பெங்காலி காட்டன் புடவையின் சுருக்கங்களை சீராக்கியபடி இருக்க, ''நான் நினைக்கிறேன் செல்வா, இந்தம்மாவுடைய புருஷன் இவங்க தொல்லை தாங்காமத்தான் போயிட்டாருன்னு நினைக்கிறேன். நீயென்ன சொல்றே?''

''உன் திருவாயை மூடிக்கிட்டு வான்னு சொல்றேன்..'' பிரபுவை தரதரவென்று இழுத்துப் போனான் செல்வா.

''இப்போ நாம பாக்கப் போற பொண்ணு போதை மருந்து பழக்கம் உடையவள். பட்டதாரி ஆக வேண்டிய பொண்ணு இந்த பழக்கத்திற்கு அடிமையாகி தன் கற்பை பறி கொடுத்திட்டு இப்படி பைத்தியமாயிட்டா.. இரண்டு மாசத்திற்கு முன்னாடி கொண்டு வந்தாங்க. இப்ப எவ்வளவோ பரவாயில்லை.''

''முன்பு மாதிரி அழுகையில்லை, கத்தல் இல்லை. எதையும் வெறிச்சிப் பார்ப்பது இல்லை. ஆனா சில நேரங்களில் தன் கட்டுப்பாட்டை இழந்திடுவா.''

''எந்த மாதிரியான நேரத்திலே?'' - பிரபு.

''அன்னிய ஆண்களைப் பார்க்கும்போது மட்டும்..'' பிரபு மிரள, ''பயப்பட வேண்டாம், ப்ளீஸ் சிலீப்பிங் டோஸ் கொடுத்து தூங்க வைச்சிருக்கோம்.''

''இங்கே இருக்கிறே அத்தனை பேருக்கும் உண்மையான அன்பும், மருந்து மாத்திரைகளும்தான் குணப்படுத்தும் மிஸ்டர் செல்வா. ஆனா பாவம் இந்த மாதிரி ஆளுங்களை எல்லாம் கவனிக்கக் கூட ஆளே இல்லை.''

''மனநோய் பாதிக்கப்பட்டவங்களை பாக்கிறது கூட, பாவமா நினைச்சு ஒதுக்கிடறாங்க. சொந்த பந்தமே இப்படி சுமையா நினைச்சு விரட்டும்போது, மற்றவங்க எப்படி நேசிப்பாங்க. அதனாலதான் தெருவுக்கு ஒருத்தர் இந்த மாதிரி இருக்குறாங்க.''

பேசியபடியே அடுத்த செல்லை அடைந்தனர். ''இவதான்..'' மேகலா சுட்டிக் காட்டிய திசையில் ஈ ஒன்று சுதந்திரமாய் தன் வாய்க்குள் நுழைவதைக் கூட அறியாமல் வாயைப் பிளந்தபடி உறங்கிக் கொண்டிருந்த பெண்ணிடம் பார்வையைப் போட கண்கள் வெளியேத் தெரித்து விழுவதைப் போல் பார்த்த செல்வா, ''மேடம்.. இவ.. இவ.. நீரஜாதானே?'' அதிர்ச்சியின் விளிம்பில் ஏறக்குறைய கத்தியே விட்டான்.



# 2

**வி**ழிகளில் வியப்பைத் தேக்கியபடி ''இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?'' என்றார் மேகலா.

''மேடம், நாங்க இரண்டு பேரும் தஞ்சாவூர்ல ஒரே காம்பௌண்டில குடியிருந்தவர்கள். கொஞ்ச காலமா எங்க குடும்பத்திற்குள்ளே காண்டாக்ட்டே இல்லை. ஆனா இவளை இந்த நிலைமையிலே பார்ப்பேன்னு நான் சத்தியமா எதிர்பார்க்கலை. மேடம் இவளை இங்கே கொண்டு வந்து சேர்த்தது யாருன்னு சொல்ல முடியுமா?''

''இங்கே நின்று பேச வேண்டாம். வாங்க ஆபீஸ் ரூம் போகலாம்.''

ரூமிற்கு வந்தவுடன், ''ஒரு நிமிடம்!'' என்று உரைத்துவிட்டு திரும்பியவரின் கையில் தடிமனான லெட்ஜர் இருந்தது. அதில் நடு பக்கம் பிரித்து விரலை வைத்து விரட்டி ''தனசேகர், அடையார் என்று இருக்கிறது?''

''அவரு?''

''நீரஜாவுடைய சித்தப்பா. புல் அட்ரஸ் இருக்கு வேணுமா?''

''அவசியம் வேணும் மேடம். வேறு ஒரு விஷயம், நீரஜாவை ட்ரீட் பண்ற டாக்டரை நான் பார்க்கலாமா?''

''அவர் நாளை மாலை ஆறு மணிக்கு வருவார். அப்போ வந்து பாருங்களேன்.''

''ரொம்ப நன்றி மேடம். தெரிஞ்சோ தெரியாமலோ நீங்க எனக்குப் பெரிய உதவி பண்ணி இருக்கீங்க? நீரஜாவைப் பத்திரமா பார்த்துக்கோங்க மேடம்..''

''அது என் கடமை செல்வா, இந்தப் பேட்டி எப்போ வெளியே வரும்.''

''இன்னும் ஒரு வாரம் அதற்குப் பிறகு வரும். நாங்க கிளம்பறோம் மேடம்.'' மனமில்லாமல் அங்கிருந்து நகர்பவனை ஆச்சரியமாய் பார்த்தான் பிரபு.

''பிரபு ஆபீஸ்ல எனக்கு லீவு சொல்லிடு. எடிட்டர் கேட்டா நாளை கண்டிப்பா வந்திடுவேன்னு சொல்லு.''

''டேய் என்ன ஆச்சுடா.. இப்படி திடீர்னு அம்போன்னு விட்டுட்டு போறே..''

''பேசாதேடா. நான் நைட்டுக்கு வந்து சொல்றேன்'' நண்பனின் பதிலுக்குக் கூட காத்திராமல் கிளம்பி விட்டான் செல்வா. 'எல்லாம் என் நேரம்' என்று தன்னையே நொந்தபடி, தன்னைத் தாண்டி சென்ற ஆட்டோவைக் கைகாட்டி நிறுத்தி அதன் கவர்ச்சிக் குலுக்கலில் பங்கெடுத்துக் கொண்டான் பிரபு.

மனதில் பல்வேறு எண்ண ஓட்டங்களுக்கு இடையில் வண்டியைச் செலுத்தினான் செல்வா. தஞ்சாவூர் பெரிய கோவில் தெருவில் பக்சத்து பக்கத்து வீடுகளில் வசித்தவர்கள் தான் நீரஜாவின் குடும்பத்தினரும், செல்வாவின் குடும்பத் தினரும்.

நீரஜாவின் தந்தையும், செல்வாவின் தந்தையும் அலுவலகம் ஒன்றில் குமாஸ்தாவாய் வேலை பார்த்து வந்தார்கள். பழகுவதற்கும் இனிமையாகவும் எளிமையாகவும் இருந்த



அவர்களின் குடும்பமும், கருவண்டு கண்களும், ஹிப்பி தலையுமாய், குறும்பு செய்த நீரஜாவை செல்வாவின் தாய் சரோவிற்கு ரொம்பவே பிடித்துப் போனது.

செல்வாவின் வீட்டு செல்லப் பிள்ளை அவள். எப்போதும் இவன் வீட்டில் தான் வாசம். குழந்தைகளின் பாசம் பெரியவர்களையும் இணைத்தது. நல்லது கெட்டது என சந்தோஷங்களையும், துக்கங்களையும் பகிர்ந்து கொண்டார்.

நீரஜா பள்ளி இறுதியாண்டில் நுழையும்போது செல்வா ஜர்னலிசம் பயின்றான்.

''அம்மா.. அம்மா..!''

குரல் எழுப்பியபடியே வீட்டிற்குள் நுழைந்தவன் ஹாலில் காலிபிளவர் பக்கோடாவை தின்றபடி டி.வி. பார்த்துக் கொண்டிருந்த நீரஜாவின் தலையில் தட்டினான்.

''ஆன்ட்டி அண்ணா அடிக்கிறாங்க!'' அவன் அடித்த இடத்தை தடவியபடியே கூறிய நீரஜாவிற்கு ஆதரவாய் இன்னொரு தட்டில் காலிபிளவர் பக்கோடாவோடு வந்தாள் சரோஜா.

''ஏம்மா! இந்த வாலுக்கு டிபன் தராதேன்னு எத்தனை முறை சொல்றேன்.''

''ஏன்டா? குழந்தையைப் போய் திட்டறே?''

''திட்டறேனா? குழந்தையாம் குழந்தை பாலை பாட்டில்ல ஊத்திக் கொடுங்கம்மா.. எனக்கு முன்னாடி இவ சாப்பிட்டா எனக்கு டிபனே கிடைக்கலையே!''

''அண்ணா!''

''உனக்கு எப்பவும் அவளை கிண்டல் பண்றதுதாண்டா வேலை!''

''பின்னேயென்னம்மா! ஆனுவல் எக்ஸாம் ரிசல்ட் நாளைக்கு வர்றது கொஞ்சம் கூட டென்சனே இல்லாம டீவி பாக்குறா?''

''நான் நல்லா எக்ஸாம் எழுதியிருக்கேன். அப்புறம் ஏன் பயப்படணும். கட்டாயம் பாஸ் பண்ணிடுவேன்... உங்களை மாதிரி கோட் அடிக்க மாட்டேன்.''

''யாரை?'' மீண்டும் அவன் அடிக்க கை ஓங்க.. சரோஜாவின் முதுகிற்குப் பின்னால் பதுங்கினாள் நீரஜா.

சொன்னாற் போலவே நீரஜா ஸ்கூல் பர்ஸ்ட் வந்து பாஸாகினாள். தஞ்சாவூரிலேயே நல்ல கல்லூரியில் பார்ம் வாங்கிட, செல்வா தான் கூட்டிப் போனான்.

அன்று காலையில் நீரஜாவின் தந்தை பூபதி செல்வாவை அழைத்து, ''நீ எங்கேயும் முக்கியமாய் வெளியே போக வேண்டியது இல்லேன்னா நீரஜாவை காலேஜ் கூட்டிட்டு போறீயா செல்வா?''

''கட்டாயம் அங்கிள் எத்தனை மணிக்கு போகணும்.''

''பத்து மணிக்கு!''

''அந்த வாலை கிளம்பச் சொல்லுங்க'' ஒப்புக் கொண்டபடியே, பார்ம் வாங்கி அட்மிஷன் வாங்கும் வரையில் அவளுக்கு உதவியதோடு, கல்லூரிக்கும் காலையில் கூட்டிட்டுப் போய் வந்தான்.



எண்ணங்களில் உண்மையும், புனிதமும் இருந்தால் கெட்டதில்கூட நல்ல ஒரு விஷயத்தைக் கண்டுபிடிக்கத் தோன்றும். ஆனால், பெரும்பாலும், தப்பான கண்ணோட்டத்திலேயே பேசிய சிலர், நீரஜா செல்வாவின் அன்பை திரித்துக் கூற சரோ நடுங்கினாள்.

''அண்ணா... நம்ம ஊர் ஜனங்க வாய் பற்றிதான் தெரியுமே, செல்வா பரவாயில்லை ஆண் மகன். ஆனா நீரஜா வயசுப் பொண்ணு. நாளைக்கு ஒரு இடத்தில் வாழப் போறவ. அவளுக்கு ஏதாவது கெட்ட பெயர் வந்தா என்னாலே தாங்க முடியாது.''

''அட விடும்மா, நரம்பில்லாத நாக்கு நாலும் பேசும். அதற்கு எல்லாம் கவலைப்பட்டா வாழவே முடியாது. நாம நம்ம பிள்ளைகளை முழுமையா நம்பணும். மனசிலே எந்த வில்லங்கமும் இல்லாமல் பட்டாம்பூச்சி மாதிரி பறக்கிற குழந்தைகளோட இறக்கை பிச்சி காயப்படுத்தணுமா..''

''அதுக்கில்லைண்ணா!''

''புரியுதும்மா.. என்னை விட நீரஜாவை நீதான் பாக்குறே.. அவ மேல உள்ள அக்கறையில் பேசறே! இதை குழந்தைகள் கிட்டே சொன்னா எத்தனை வேதனை அடைவாங்க. நாம நமக்காகத்தான் வாழணும். என்ன சிவம்.. தங்கச்சிகிட்டே எடுத்துச் சொல்லுங்க.''

''நீ தேவையில்லாம மனசைப் போட்டுக் குழப்பிக்காதே!'' கணவரின் பேச்சில் சமாதானம் அடைந்தாள் சரோஜா.

ஆனால், தீ நாக்குகளைப் போல் இறைவனும் அவர்களைப் பிரிக்க முடிவு செய்து விட்டார் போலும். பூபதிக்கு சென்னைக்கு

மாற்றல் ஆகிவிட்டது. நீரஜாவின் படிப்பையும் பாதியில் நிறுத்தி சென்னை கலைக் கல்லூரியில் சேர்க்க ஏற்பாடும் செய்தாகி விட்டது.

அத்தனை நாட்கள் ஒட்டி உறவோடு இருந்த உறவுகள் பிரிந்து போனதை எண்ணி இரு குடும்பமும் வேதனையில் துடித்தன.

''நான் ஆன்ட்டியை விட்டு வரவே மாட்டேன்'' என்று அழுது அடம் பிடித்த நீரஜாவை சமாளிப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது செல்வாவிற்கு.

''ஏய் மண்டு ஏன் அழுவுறே? இதோ இருக்கு சென்னை. நினைச்சா வர மாட்டேனா என்ன?''

''நான் போறேன் அண்ணா'' கண்களில் கண்ணீரோடு விடைபெற்ற நீரஜாவை அதற்குப் பிறகு பார்க்கவில்லை அவன். ஊருக்கு போய் சில நாட்கள் வந்த கடிதமும் நின்று விட, இவனும் டிரைனிங் போய்விட தொடர்பும் விட்டுப் போனது.

கடந்த முறை ஊருக்கு போனபோது கூட சரோஜா அங்கலாய்த்துக் கொண்டாள். ''என் வீடே கதின்னு ஆன்ட்டி ஆன்ட்டின்னு காலைச் சுத்தி வந்த பொண்ணு லெட்டர் கூட போடலையே. டேய் தம்பி நீயும் சென்னையில் தானே இருக்கே! போய் ஒரு எட்டு பாரேன்..''

தாய் சொல்லும் முன்னரே அவனும் போய் பழைய முகவரியில் பார்த்து விட்டான். எந்தத் தகவலும் இல்லை. யாரும் இருப்பதாய் கூட சொல்லவில்லை. பழைய அலுவலக முகவரியில் கேட்டால் பூபதி வேலையை விட்டு சென்று விட்டதாய் சொல்லி விட்டனர்.



அதன் பிறகு, இப்போதுதான் அவளைப் பார்த்தான். மனம் பாறையாய் கனத்தது.

குறும்பாய் சிமிட்டிய கண்களில் ஒளியில்லை. சிரிப்பில்லை. மொழியில்லை. ஜடமாய், தன்னையே அறியாமல் பைத்திய மாய் அவளைக் காண்பான் என்று செல்வா கனவிலும் எதிர்பார்க்கவில்லையே! கடவுளே அந்த ஒன்றுமறியா பிஞ்சு உள்ளத்திற்கு என்ன நடந்தது?

பதைபதைப்போடு அடையார் சிக்னலைத் தாண்டியவன் அந்தத் தெருவை அடைந்தான். பச்சை பெயிண்ட் அணிந்து ஆலமர நிழலொன்றில் குளித்துக் கொண்டு 18ம் நெம்பர் கொண்ட அந்த வீட்டின் முன் வண்டியை நிறுத்தினான் செல்வா.

ஒரு நிமிட வேக நடையில் கிரீல் கதவைத் திறந்து பார்சரை அழுத்த உள்ளே இரண்டு குருவிகளின் கொஞ்சலுக்குப் பின், அழுக்கு வேஷ்டியுடனும், கைவைத்த பனியனுடன் கதவிற்கு பின்னால் ஐம்பது வயதைக் கடந்த மனிதர் நின்றிருந்தார்.

தன் முன் நின்ற இளைஞனைக் கண்டு புருவம் சுருக்கி, ''நீங்க...?'' என்றார்.

''ஸார் இங்கே,, தனசேகர்ன்னு..''

''நான்தான்..''

''ஸார்... நான் தீப்பிழம்பு பத்திரிகை நிருபர், செல்வா..!''

''உங்க இரத்தம் உறிஞ்சும் ஆடுகள்... கட்டுரையை நான் படிச்சிருக்கேன் மிஸ்டர்.. செல்வா.. வெளியூரில் தமிழர்கள் வேலை என்ற பெயரில் படும் அவலங்களை அழகாக எடுத்துச் சொல்லியிருந்தீர்கள்.. ப்ளீஸ் வெல்கம்.''

''நன்றி ஸார்!''

''உட்காருங்க!''

குளிர்ந்த நீர் நிறைந்த டம்ளரை அவனிடம் நீட்ட, அதைப் பெற்றுக் கொண்டவன், ''ஸார், உங்ககிட்டே நீரஜா பத்தி பேசணும்!''

''தம்பி நீரஜாவை உங்களுக்கு..?''

''தஞ்சாவூரில் நானும் அவங்களும் பேமிலி பிரண்ட்ஸ்.''

''ஓஹோ பக்கத்திலே சரோஜான்னு ஒரு ஆன்ட்டின்னு நீரு கூட அடிக்கடி சொல்லுவாளே! அவங்களா?''

''ஆமா ஸார்.''

''தம்பி! நான் ஒரு வகையில் அவங்களுக்கு தூரத்து உறவு. நீரஜாவிற்கு சித்தப்பா முறை. பூபதி இந்த ஊருக்கு வந்த கொஞ்ச நாளில் வேலையை விட்டுட்டு என்னோட பிஸினஸ் பார்ட்னரா சேர்ந்தார். நீரஜாவும் நல்ல கல்லூரியில் படிச்சா. எல்லாம் நல்லபடியா போச்சு. ஆனா இப்போ நீரஜா..''

''பைத்தியக்கார ஆஸ்பிட்டலில்! அங்கே அவளைப் பார்த்து பதறித்தான் உங்களைப் பார்க்க வந்தேன், ஸார்.''

''எல்லாம் விதி தம்பி! டிகிரி முடிச்சி நல்லபடியா வாழ வேண்டிய ஒரு பொண்ணு, கொஞ்சம் மனசை பறி கொடுத்ததினாலே தானும் அழிஞ்சு அவ குடும்பத்தையும் அழிச்சிட்டா.''

''என்னதான் ஸார் நடந்தது. நீரு ரொம்பவும் நல்ல பொண்ணு. அவளை இந்த நிலைமைக்கு ஆளாக்கினவங்களை சும்மா விடக் கூடாது ஸார்'' என்றான் உணர்ச்சி பொங்க.

''அவங்களை தண்டிப்பதால நடந்தது இல்லைன்னு ஆயிடுமா தம்பி. எல்லாம் விதி.''

''மனிதர்களின் அறியாமைக்கும், துரோகத்திற்கும் விதிங்கிற கண்ணுக்குத் தெரியாத ஒரு விஷயத்து மேலே ஏன் ஸார் பழி போடறீங்க? என்னால அவளுக்கு உதவி செய்ய முடியுமான்னு பாக்குறேன்.. நல்ல நிலைமையிலே இருந்தவ என் தங்கை மாதிரி ஸார்'' கலங்கிய நிலையில் அவன் கூறியதைக் கேட்கவும், உள்ளே எழுந்து சென்றவர், திரும்பிய போது கையில் சிகப்பு நிற டைரி ஒன்று முளைத்து இருந்தது.

''இது நீரஜாவுடைய டைரி சொந்த அண்ணன் மகளாகவே இருந்தாலும் அவளோட அந்தரங்கத்திலே மூக்கை நுழைக்க நான் விரும்பலை. அதனால நான் இதைப் படிக்கலை. உங்களுக்கு உதவியா இருக்குமான்னு பாருங்க..''

''ஸார் அங்கிளும்.. ஆன்ட்டியும்?''

''அது ரொம்பவும் கொடுமையான விஷயம் தம்பி..'' அவர் சொல்லி முடித்த சமயம் செல்வாவின் கண்கள் குளமாயிருந்தன.

''அப்போ நான் கிளம்பறேன் ஸார்.. இனிமே நீருவைப் பார்த்துக்க வேண்டியது என் பொறுப்பு.''

''தம்பி இன்னொரு விஷயம்.. நீருவுக்கு நல்லது செய்யறதா நினைச்சு, அவசரப்பட்டு எதுவும் செய்ய வேண்டாம். எந்த மானத்தை பெரிசா மதிச்சு நீரஜாவைப் பெத்தவங்க இரண்டு பேரும் இறந்தாங்களோ அதுக்கு பங்கம் வர்ற மாதிரி பத்திரிகையில் போட்டு அவ வாழ்க்கையை கெடுத்திட வேண்டாம்.''

''அய்யா நீரு என் தோழி. இந்த முயற்சியில் அவளுக்கு எந்தத் தீங்கும் வராது. நான் வரேன் ஸார்..'' அவரிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டான் செல்வா.

## 3

''மணி பதினொன்று ஆகுது. இன்னும் தூங்காம லைட்டைப் போட்டுக்கிட்டு என்னையும் தூங்க விடாம பண்ணறே? அப்படி என்ன தாண்டா செய்யுறே?'' நண்பனின் தோளில் தட்டினான் பிரபு.

''அதிருக்கட்டும். நீயேன் இன்னிக்கு ரொம்பவும் லேட், எங்கே போய் சுத்திட்டு வர்றே?''

''ஏய், என்னைப் பத்தி இத்தனை மட்டமா கணக்குப் போடாதே. கடமையே கண், காது, மூக்குன்னு இருக்கிறவன் நான். அந்த கிழட்டுப் பிசாசு எல்லா போட்டோவையும் இன்னைக்கே பிரிண்ட் போட்டுத் தரணுமின்னு சொல்லிடுச்சு அதனாலதான் இவ்வளவு லேட்டு.''

''என்னைப் பத்தி ஏதாவது கேட்டாரா?'' - செல்வா.

''கேட்காம இருப்பாரா? நீதான் அவரோட தத்துப் பிள்ளையாச்சே. கட்டுரையை இரண்டு நாளுக்கு உள்ளே முடிச்சித் தந்திடச் சொன்னார்.''

''உனக்கு வயித்தெரிச்சல்!''



''அய்யா ராசா அந்தாளு உம்மேல காட்டறது பாசமின்னு நினைச்சியா. மூக்கு ஒழுகிகிட்டு இருக்குமே அவர் பொண்ணு அதை உன் தலையில கட்டத்தான் தெரிஞ்சுக்கோ!''

''ச்சீ போடா!''

''என்னடா! எலிப் பொறிக்குள்ளே வடையை வைக்கிறது எதுக்கு எலியை பிடிக்கிறதுக்குத்தானே அதே மாதிரி உனக்கு பொறுப்பு கொடுக்கிறதும் உன்னை வளைச்சிப் போடலாமின்னு தான்!''

''பெரிய மனுஷனைத் தப்பா பேசாதே!''

''நீ வேணுன்னா பாரேன், ஒரு நாளில்லை ஒரு நாள் அந்த மூக்குக்கு நீ கர்ச்சிப்பா மாறலை நான் என் பேரையே மாத்திக்கிறேன்..''

''எப்படி பிரபுங்கிற பேரை பருப்புன்னு மாத்திக்குவியா?''

''சரிடா மச்சான். விளையாட்டு போதும், காலையிலே ஆஸ்பிட்டலில் அந்த பெண்ணைப் பார்த்ததும் ஷாக் ஆனியே அந்தப் பொண்ணு யாரு செல்வா?''

''நானும் அவளும் நல்ல பிரண்ட்ஸ்டா. தஞ்சாவூரில் ஒரே காம்பௌண்டில் குடியிருந்தவங்க. அவங்க பேமிலியே ரொம்பவும் தங்கமானவங்க. அத்தனை நல்ல பொண்ணை இப்படி பார்க்க மனசு தாங்கலை.''

''என்னடா ஆச்சி அவளுக்கு? யாரோ அந்த பெண்ணோட சித்தப்பாவை பார்க்கணுமின்னு போனீயே?''

''பார்த்தேன் பிரபு அவர்தான் நீரஜாவுடைய இந்த டைரியைக் கொடுத்தார்.''

''செல்வா கேட்கிறேன்னு தப்பா நினைக்காதே.. அடுத்து உன்னோட மூவ் என்ன?''

''நீருவை நல்ல டாக்டர்கிட்டே காட்டணும். அவளை இந்த நிலைமைக்கு தள்ளியவர்களை தண்டிக்கணும்.''

''இதெல்லாம் நமக்குத் தேவையா செல்வா.''

''நான் யாருக்காக செய்யப் போறேன். என் நீரஜாவுக்குத் தானே!''

'என் நீரஜா' என்ற வார்த்தையில் நிமிர்ந்த பிரபு, ''செல்வா, நீ அவளை லவ் பண்றியா?'' என்றான்.

''முட்டாள் லவ் பண்ணாத்தான் அவளுக்கு நல்லது செய்யணுமின்னு இல்லை.''

''அப்ப மனிதாபிமானமா?'' விடாமல் கேட்டான் பிரபு.

''நல்ல நட்புக்கு காணிக்கைன்னு வைச்சுக்கோயேன்.''

''வர வர உன் லாஜிக்கே புரியலைடா!''

செல்வா தன் முன்னால் பளபளப்பாய் மின்னிய டைரியை வருடியவன் பிரிக்க பிரபுவும் அவனுடன் ஒட்டிக் கொண்டான். முதல் பக்கத்திலேயே புடவையில் வசீகரமாய் புன்னகைத்த நீரஜா இன்றைய சிநேகாவை நினைவூட்டினாள். எழுதப்பட்ட எழுத்துக்கள் அவன் மனதில் கோர்வையாய் விரிந்தன.

உதக மண்டலக் குளிரை ஒட்டுமொத்தமாய் கண்களில் வாங்கியவள், பன்னீரில் குளித்தாற் போல் வாசனை பரவிய உடலை சல்வாரில் மறைத்தபடி, முதல் நாள் கல்லூரிக்குள் நுழைந்தவளின் மனதிற்குள் ராகிங் எனும் பயபந்து உருள



மெல்ல மெல்ல நடந்தவளைச் சுற்றி வளைத்துக் கொண்டது ஒரு கூட்டம்.

''அம்மணி பேரென்ன?''

''நீ.. நீரஜா..!''

''நீ.. நீரஜாவா? என்ன கோர்ஸ்?''

''பி.ஏ. இங்கிலீஷ் லிட்... செகண்ட் இயர்...''

''ஓ.. ஆங்கிலக் குருவியா? எங்கே கொஞ்சம் கூவு பார்க்கலாம்.''

அவள் மலங்க மலங்க விழிக்க, ''ஏய்! சொன்னபடி செய்யலைன்னா, உன்னை கட்டிப் பிடிச்சிடுவேன்'' என்று அந்தக் கும்பலின் துச்சாதனன் முன்னே வர வயிற்றில் பயபந்து உருளை பின்னோக்கி நகர்ந்தாள்.

கண்கள் குளமாகிட, தன்னை யாரும் காக்க முன்வர மாட்டார்களா என்ற திகைப்பில் சுற்றும் முற்றும் நோக்கினாள். அவளின் மருண்ட விழிப் பார்வை, விமலை என்னவோ செய்தது. மற்றப் பெண்களை விடவும் ஏதோவொரு ஈர்ப்பு அவளிடம் ஏற்பட்டதைப் போல் தோன்றியது. ஏனோ அவளிடம் நன்மதிப்பை பெற வேண்டுமென்று எண்ணி கூட்டத்தில் முன்னாடி வந்தான்.

''டேய்.. டேய்.. லேடீஸ்கிட்டே எப்படி பிகேவ் பண்றதுன்னு உனக்குத் தெரியாதா தள்ளுடா இடியட், நம்ம காலேஜ் பொண்ணுகிட்டே யாராவது வம்பு பண்ணா நாம தடுக்கணும். அதை விட்டுட்டு, நாமே தப்பா நடக்கலாமா?'' சுற்றியிருந்தவர்களை விலகி விட்டு, நீரஜாவிடம் வந்தான் விமல்.

''பயப்படாதீங்க மிஸ்! அவங்க ஏதோ விளையாட்டுத் தனமா பேசிட்டாங்க.. ரொம்ப டயர்டா இருக்கீங்களா சூடா ஒரு கப் காபி சாப்பிடறீங்களா? கேண்டீன் போலாமா?''

''வே.. வேண்டாம்.. நான் க்ளாசுக்குப் போறேனே!'' விம்மலுடன் ஓட்டம் பிடித்தாள் நீரஜா. போகும் அவளையே கண்களில் போதையோடு பார்த்தான் விமல்.

''என்னடா மச்சான்?''

''ஆள் சூப்பரா இருக்கா இல்லே சுந்தர்!''

''கண்ணு வைச்சிட்டே சரி! ஆனா பார்த்தா ரொம்பவும் சாதுவா இருக்காளே! இவளை எப்படி உன் வழிக்கு கொண்டு வருவே.''

''டேய் இந்த விமல் நினைச்சா யாரையும் பின்னாடி வரவைப்பேன். இவ எல்லோரையும் விட ஸ்பெஷலா இருக்காடா.. என்னமோ ஒண்ணு ஈர்க்குது. ஈரம் படிந்த உதடுகளா, மருண்ட விழிகளா, வழுவழுவென்ற உடலா எதுன்னு தெரியலை. ஆனா அவளைப் பார்த்தாலே ஒரு போதை ஏறுது!''

''என்ன விமல் ரொம்ப ரசிக்கிறே. வழக்கம் போல எங்களுக்கும் பங்கு உண்டா இல்லை..''

''இது எனக்கு மட்டும்தான்டா.. மச்சான்.''

''ஜமாய்டா மாப்பிள்ளை உனக்கென்ன உங்கப்பா ஒரு பெரிய பிசினஸ் மேன். எந்தப் பிரச்சனை வந்தாலும் பணத்தாலேயே அடிப்பார். அனுபவி ராஜா அனுபவி!'' நண்பர்களின் ஆதரவை எண்ணி இதழில் புன்னகையை பரவ விட்டான் விமல்!



பளிங்கு கற்கள் போல பளபளத்து கொண்டிருந்த அந்த பங்களாவின் ஏஸி அறையில், மெத்தையில் உறக்கம் வராமல் நீரஜாவின் நினைப்பில் புரண்டு கொண்டிருந்தான் விமல்.

ஏகப்பட்ட தொழிலுக்கு ராஜாவான சோமசுந்தரத்தின் ஒரே மகன். சிறு வயதிலேயே தாய் இறந்ததால், அதிக செல்லம் கொடுத்து மகனை வளர்த்தார். அவன் மனம் கோணாமல் கேட்டது எல்லாம் மறுக்காமல் அவனுக்கு அளிக்கப்பட்டது.

வளர வளர கூடாத சிநேகமும் வளர்ந்தது. பணம் கை நிறைய புரண்டதால் எல்லாம் இணைந்து அவனைத் தவறான வழியில் நடத்தியது. சோமசுந்தரமும் அவனைக் கண்டிக்க வில்லை.

மனைவி இறந்த பின் அவரின் உறவிற்கு பல பெண்களை தேடினாலும், யாரையும் உரிமையாய் ஏற்கவில்லை. அது தனக்கும் தன் சுதந்திரத்திற்கும் தடையென கருதியதால், அந்த மாதிரி விஷயத்திற்காகவே பண்ணை வீட்டை வைத்திருந்தார்.

விமலும் அதை அறிந்து வைத்து இருந்தான். அவ்வப்போது குருப் ஸ்டடி என்னும் பெயரில் தன் நண்பர்களுடன் அவனும் செல்வது உண்டு. அங்கு அனைத்தும் நடக்கும். அது வீட்டு வேலையாட்களின் மூலம் சோமசுந்தரத்தின் காதிற்குப் போனபோதும் இந்த வயசில் இதெல்லாம் சகஜம் என்று விட்டுவிட்டார்.

கண்டிக்க ஆளில்லாமல் போக விமல் தன்னிஷ்டபடி நடக்கத் தொடங்கினான். கல்லூரிக் காலத்தில் அவன் வலையில் பெண்களை விழ வைப்பதே பொழுதுபோக்காய் இருந்தது. அவன் அழகு, பணம் கண்டு சிலர் தானாய் வந்தனர். சிலரை இவனே வலியச் சென்று பிடிப்பான். குறிப்பிட்ட நாளில்

அவளை மற்ற நண்பர்களுக்கும் விருந்தாக்கி விடுவான், அந்தப் பெண் அறியாமலே. பிறகு அவளை கைகழுவி விடுவான்.

ஆனால் மற்ற பெண்களைக் காட்டிலும் நீரஜாவிடம் இருந்து ஏதோ அவனை ஈற்றது. அவளுடன் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்று மனது படபடத்தது. எப்படியாவது அவளை தன்வசப்படுத்த வேண்டுமென்று யோசித்தபடி படுத்திருந் தான்.

விமலின் கட்டளைப்படி யாரும் நீரஜாவைத் தடுப்பது இல்லை. முதல் நாள் வம்பிற்கு வந்தவர்கள் கூட, சிநேகமாய் புன்னகைத்தார்கள். அதற்குப் பிறகு, விமலிற்கு நன்றி கூற வேண்டும் என்று தோன்றியது நீரஜாவிற்கு! அவள் கண்கள் அவனைத் தேடின. ஆனால் யாரிடமும் அவனைப் பற்றி விசாரிக்கப் பயந்து கம்மென்று வந்து விடுவாள்.

ஆனால், சரியாய் ஒரு வாரம் கழித்து நீரஜாவின் கண்ணில் பட்டான் விமல். அவனிடம் பேசவேண்டுமென்ற ஆவல் எழுந்த போதும், நண்பர்களுடன் இருந்ததால் வெறும் பார்வையை மட்டும் வீசினாள். விமல் அவளை சட்டை செய்யவே இல்லை.

''டேய் பட்சி.. உன்னைப் பார்த்திட்டே போதுடா!''

''தெரியுது. உடனே ரெஸ்பான்ஸ் பண்ணா நான் அவ மனசிலே நிக்க மாட்டேன்!''

''என்னவோ விமல் உன் லாஜிக்கே புரியலை. ஆனா உன்னைத் தான் பெண்கள் மொய்க்கிறாங்க.''

''அது அவன் ராசிடா!'' அனைவரும் சிரித்தனர்.

மற்றொரு நாளில்,



நூலகத்தில் புத்தகம் படித்துக் கொண்டிருந்த நீரஜாவின் முன் தடிமனான ஆங்கிலப் புத்தகம் ஒன்றைக் கையில் பிடித்துக் கொண்டு அமர்ந்த விமல் நீரஜாவை கவனியாதவன் போல் பார்வையை சுழற்ற,

ஏதேச்சையாக நிமிர்ந்த நீரஜா ''ஹலோ!'' என்றாள்.

அப்பொழுதுதான் நிமிர்ந்தவன் போல், ''ஹாய்.. நீ நீரஜாதானே.. என்னம்மா பயமெல்லாம் விட்டுடுச்சா.''

''ஓ.. நான் உங்களைத்தான் தேடிக்கிட்டே இருந்தேன்.''

''என்னையா ஏன்?''

''நன்றி சொல்லிட மிஸ்டர்.''

'விமல்? சரி நன்றி எதுக்கு?''

''அன்னைக்கு எனக்கு ஹெல்ப் பண்ணதுக்கு!''

''நீன்னு இல்லம்மா யாரா இருந்தாலும் நான் அதை செய்திருப்பேன்!'' என்று வழக்கமான ஹீரோவின் பாணியில் டயலாக் அடித்தான் அவன்.

''அன்னைக்கு ரொம்பவே பயந்திட்டேன். கைகாலெல்லாம் உதற ஆரம்பிச்சிடுச்சு.''

''இப்ப மட்டும் என்னவாம் வேடன் முன்னாடி பதுங்கிற பறவை மாதிரி கையைக் கட்டிக்கிட்டு!''

''நோ.. நோ.. உங்ககிட்ட எனக்கு பயமேயில்லை விமல்.''

''அப்படின்னா நாம இனிமே பிரண்ட்!'' அவன் கையை நீட்டிட இவள் சிறு தயக்கத்திற்குப் பின் கை கொடுத்தாள்.

மிருதுவான அந்த விரல்களை சற்று அழுத்தத்துடன் பற்றினான் விமல்.

''நீரஜ்! நம்ம பிரண்ட்ஷிப்புக்கு ஆதாரமா நாம இரண்டு பேரும் இன்னைக்கு ஈவ்னிங் ஹோட்டல் போறோம். டிபன் சாப்பிட.. சரியா?''

''எதுக்கு? விமல் யாராவது பார்த்தா?''

''யார் பார்த்தா நமக்கு என்ன? நம்ம மனசில ஒண்ணு மில்ல.. இல்லை கம்டியர்!'' வசீகரப் புன்னகையுடன் அழைத்தான் அவன்.

இப்படியே வளர்ந்த அவர்களின் நட்பு, தொலைபேசியில் விருப்பு வெறுப்புகளை பரிமாறிக் கொள்ளும் அளவிற்கு வளர்ந்தது. பார்க் ஒன்றில் டென்ஷனாய் நடந்தபடி இருந்த விமலை நெருங்கினாள் நீரஜா.

''என்ன விமல் ஏதோ பேசணுமின்னு!''

''உட்கார் நீரஜ். எனக்கு ஒரு முக்கியமான விஷயம் பேசணும். ஆனா அதை நீ எப்படி எடுத்துப்பேன்னு தெரியலை.''

''என்ன விமல் ஏதாவது..'' கேட்கும் போதே மனம் பதைபதைத்தது.

''நீரஜ். நான் பெரிய இடத்துப் பையன். அம்மா இல்லை. அப்பாவின் செல்லம் அதிகம். என்னைச் சுற்றிலும் நண்பர் கூட்டம். சிலர் என்னிடம் உள்ள பணத்திற்காக, சிலர் என் கூட பழகுறதையே லட்சியமாக உள்ளவங்க.''

''இவங்க எல்லாருக்கும் என்னிடம் எதிர்பார்ப்புகள் அதிகம். நான் இவங்களை வெளியிடங்களுக்கு அழைத்துப் போகணும். ஹோட்டல், பீச், கிளப்புன்னு இப்படி நிறைய! இதுநாள் வரையில் நான் அர்த்தமில்லாத வாழ்வு வாழ்ந்திட்டு இருந்த நான் இப்போதான் சில நாளாத்தான் எனக்காக பேசி பழகிட சிரிக்க ஆரம்பித்து இருக்கிறேன்.''

அவள் ஏதும் பேசாமல் விமலின் பேச்சை மட்டும் கூர்ந்து கவனித்தாள்.

''நீரஜ், வாழ்க்கையிலே எல்லாம் இருந்தும் எதுவுமே இல்லாம இருக்கேன். சொத்து, பணம், கூப்பிட்ட குரலுக்கு வேலை செய்ய ஆட்கள், ஆனா எனக்கு தலைவலின்னா ஆதரவா தைலம் தடவிட கூட ஆள் இல்லை. சோர்ந்த நேரம் தோள் தட்டி நானிருக்கிறேன் உனக்குன்னு சொல்ல யாருமில்லை.''

சற்றே நெகிழ்ந்த அவன் குரலில் தாக்குண்டவளாய் அவன் தோளில் மென்மையாய் கைபதித்தாள் நீரஜா.

சட்டென அந்தக் கையைப் பற்றி நெஞ்சின் மேல் வைத்துக் கொண்டான் விமல். ''நீரஜ உடைச்சுச் சொல்லணும்னா உன்னைப் பார்த்த நாளில் இருந்தே என் மனசிலே ஒரு தெளிவு வந்திட்டது.''

''ஒவ்வொரு விநாடியும்.. உனக்காக என் மனசு ஏங்க ஆரம்பிச்சுது. ஆனா உன்கிட்டே வெளிப்படையா அதை சொல்ல, தயக்கமா இருந்தது. நீ சொல்லு நீரஜ் என்னை நீ ஏத்துப்பியா?''

நீரஜா விமலின் நடிப்பில் மனம் இளகினாள். எப்பேர்ப் பட்ட இரும்பு இதயமாய் இருந்தாலும் விமலின் பேச்சில் இளகி விடுமே! நீரஜா எம்மாத்திரம். ''கவலைப்படாதீங்க விமல், உங்களுக்கு நானிருக்கிறேன்!'' என்றாள்.

''நன்றி நீரஜா..'' என்று சந்தோஷப்பட்ட படியே அவளின் கையைப் பற்றி முத்தமிட்டான். இவள் சிலிர்த்தாள்.

## 4

**கா**லேஜின் ரோமியோ வலிய வலிய பெண்களே பின்னால் சுற்றும் மன்மதன், பணக்காரன் என் அன்பிற்காக ஏங்கித் தவம் கிடக்கிறானே! என்ற எண்ணமே தித்திப்பாய் இனித்தது நீரஜாவிற்கு.

எப்போதும் கற்பனையிலேயே சஞ்சரித்தாள். டைரியில் தங்களின் முதல் சந்திப்பில் இருந்து சகலமும் எழுதினாள். இப்படியே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் அவர்களின் காதல் வளர்ந்தது. தன் காதலைப் பற்றி வெளியே யாரிடமும் அவள் சொல்லவில்லை.

அன்று கல்லூரி முடிந்து மாணவிகள் சென்று கொண்டிருக்க நீரஜா கார்டனில் நுழைந்தாள். அவளுக்கு முன்பாகவே விமல் வந்து அங்கே காத்திருந்தான்.

''ஸாரி விமல். பிரண்ட்ஸை அனுப்பி வெச்சிட்டு வர்றதுக்குள்ளே நேரமாயிடுச்சு.''

''இட்ஸ் ஓ.கே. காதலில் காத்திருப்பது சுகமின்னு நீ படிக்கலையா டார்லிங்.''



''விமல் எப்போது பட்டம் பெற்றீர்கள்?'' கிண்டலாய் கேட்க.

''நீரஜ் நாளைக்கு என் பிறந்த நாள்.''

''அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.''

''வெறும் வாய் வார்த்தையால் வாழ்த்துக்களைச் சொல்ல நிறைய ஆட்கள் உண்டு கண்மணி. எனக்கு இதயப்பூர்வமாய் நீ மட்டுமே தரக் கூடியதாய் வேண்டும்.''

''என்ன அது?''

அவள் இடையைப் பற்றி அணைத்துக் கொண்டான். கழுத்து வளைவுகளில் இதழ் பதித்து, முகம் திருப்பிட, நீரஜாவின் கண்கள் லயிப்பில் மூழ்கிக் கிடந்தது. ஒரு வெற்றிப் புன்னகையில் அவளின் அதரங்களை சுவைத்தான்.

முகம் சிவந்த அவளை மறுபடியும் அணைத்தபடியே, ''பரிசுக்கு நன்றி டியர்!'' காதோரம் கிசுகிசுத்தான்.

''நீங்க ரொம்ப மோசம் விமல்'' அவன் விலாவில் இடித்தாள்.

''இந்த அருமையான பரிசைக் கொடுத்த என் இனிய காதலிக்கு நானும் ஒரு பரிசு தரப் போகிறேன்.''

''என்ன அது?''

''சஸ்பென்ஸ். நாளைக்கு நாம இரண்டு பேரும் ஒரு இடத்திற்குப் போறோம்.''

''வெளியே எல்லாம் வேண்டாம் விமல் யாராவது பார்த்திட்டா பிரச்சனை!''

''மக்கு! நானென்ன உன்னை நடக்க வெச்சா கூட்டிட்டுப் போகப் போறேன். கார்லேதானே போகப் போறோம்.''

''அது சரி ஆனா வீட்டில் என்ன சொல்றது?''

''டோன்ட் வொர்ரி டியர். ஈவ்னிங் ஆறு மணிக்கு திரும்பிடலாம் பிராமிஸ்! ஏதாவது பிரண்ட் வீட்டுக்கு ஸ்பெஷல் கிளாசுக்குன்னு சொல்லு.''

அரை மனதாய் தலையசைத்தாள். ஆனால், காலையில் கிளம்பும் போது ஒரே குறுகுறுப்பாய் இருந்தது. இனம் புரியாத பயம் ஒன்று உருண்டது. அதிலும் அம்மா அக்கறையோடு கிளம்பியவளைத் தடுத்து இரண்டு வாய் தோசையை ஊட்டியபோது ச்சே இத்தனை அன்பு மிக்கவர்களைப் போய் ஏமாற்றுகிறோமே என்று மனது கதறியது.

ஆனால் காதல் இது அனைத்தையும் மறக்க வைத்தது. காதல் ஒரு போதையென்பது எத்தனை உண்மை.

''விமல் நம்ம கல்யாணம் எப்ப?'' மகாபலிபுரம் ரோட்டில் வெண்ணையாய் வழுக்கிக் கொண்டிருந்த காரில் விமலின் தோளில் சாய்ந்தபடியே கேட்டாள் நீரஜா.

''ரொம்ப அவசரமா டியர்.''

''விமல்..!''

''டோன்ட் வொர்ரி.. நான் அப்பாகிட்டே பேசிட்டேன். அவர் ஒரு பிஸினஸ் விஷயமா கொலம்பியா போறார். ஸோ, அதுக்குப் பிறகு பேசி முடிவு பண்ணலாம்'' என்று சொன்னான்.

''ஏன் விமல் உங்க அப்பா நம்ம கல்யாணத்துக்கு ஒப்புக்குவாரா?''



''அவர் ஒத்துக்கிட்டாலும் சரி, இல்லேன்னாலும் சரி, நீதான் என்..!'' கண் சிமிட்டினான்.

''சரி ஸ்வீட் விஷயம் சொல்லியிருக்கேன் எனக்கு எதுமில்லையா?''

''என்ன வேணும்?''

''நீதான்..''

''அய்யே ஆசையைப் பாரு! எல்லாம் கல்யாணத்திற்கு அப்புறம்தான்'' என சுட்டு விரலை நீட்டி எச்சரிக்க, சிரித்தவாறே வண்டியை ஓரம் கட்டினான். ''கம் டியர்..'' அவளின் இடுப்பு வளைவில் கையை நுழைத்து கடற்கரை பக்கம் அழைத்துச் சென்று வற்புறுத்தி தண்ணீரில் நனைத்தான்.

''என்ன விமல் இது துணியெல்லாம் நனைச்சிட்டீங்க.. இனி நான் எப்படி வீட்டுக்குப் போவேன்.''

''ஏன் வீட்டுக்கு போகணும் இங்கேயே என் கூடவே இருந்துடு.''

''விளையாடாதீங்க விமல்!''

''டயம் ஒண்ணு தானே ஆகுது. அதுக்குள்ளே டிரஸ் காய்ந்து விடும். அப்புறம் இங்கே எனக்கு ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருக்கு அங்கே போய் லஞ்ச் முடிச்சிட்டு கிளம்பலாம் சரியா?''

''கெஸ்ட் ஹவுசிற்கா?'' என்று தயங்கியவள், சில நிமிட இடைவெளிக்குப் பிறகு ''விமல் என்னை சீக்கிரமா வீட்டில் விட்டுடணும் சரியா?''

''ஷ்யூர் டியர்..'' அவனும் ஆமோதிக்க நனைந்த ஆடைகளைப் பிழிந்து விட்டு, காரில் மீண்டும் பயணமானார்கள்.

''வாவ் இந்த வீடு ரொம்ப பிரமாதமா இருக்கு விமல்.''

''நீரஜ் நம்மோட ஃபர்ஸ்ட் நைட் இங்கேதான்'' அவன் கண்ணடிக்க...

இவள் வெட்கப்பட்டாள்.

''சரிடா கண்ணம்மா, உடம்பெல்லாம் ஒரே மண்ணா யிருக்கு. நல்ல தண்ணீரில் குளிச்சிட்டு உடைகளை அலசி காயவை.''

''அப்போ.. டிரஸ்.''

''நீ என் ஏவாள் இல்லையா?''

''விமல்!''

''முறைக்காதே. கீழே ரூமில் என் குர்தா இருக்கு உடை காயும் வரை அதைப் போட்டுக்க..''

''தலையை ரொம்பவும் வலிக்குது ஏதாவது மாத்திரை இருக்குமா?''

''ஓ.. இருக்கே!'' அங்கிருந்த மேசையிலிருந்து ஒரு மாத்திரைப் பட்டையை எடுத்து அதன் சட்டையை உரித்து அவளிடம் நீட்டிட, ''இதென்ன மாத்திரை விமல் ஸாரிடான் இல்லையா?'' என்றாள்.

''இது எங்க கம்பெனி ரெடி பண்றது. எந்த பாதிப்பும் இல்லை'' என்று அவளிடம் ஒன்று கொடுத்து தன் வாயிலும் ஒன்றை அடைத்துக் கொண்டான்.

''நீங்க ஏன் மாத்திரை போடறீங்க?''



''எனக்கு மட்டும் தலைவலிக்காதா டியர்'' அவள் மூக்கை செல்லமாய் இழுத்துவிட்டு படி இறங்கினான்.

தண்ணீர் உடலில் இறங்க இறங்க சொல்லவொண்ணா புத்துணர்ச்சி உடலின் மற்ற முக்கிய பாகங்களை மறைக்குமாறு அந்த இளம் பச்சை வண்ண டர்க்கி டவலை இறுகக் கட்டினாள். அரை மயக்கம் கண்களைத் தழுவ தள்ளாடியபடியே வந்தவளை அணைத்தான் விமல்.

''எனக்கு மயக்கமா இருக்கு விமல்.''

''எங்கூட இருக்கேயில்ல டார்லிங். ஸ்மிம் பண்ணதில் டயர்டா இருக்கும். வா ரெஸ்ட் எடு'' மென்மையாய் மலரைக் கையாள்வதைப் போல கைகளில் ஏந்தினான். பஞ்சாய் இருந்த மெத்தையில் அவளைக் கிடத்தினான்.

டவலின் முடிச்சில் கையை வைக்க நீரஜா தடுமாறியபடியே தடுத்தாள். ''வேண்டாம்.. விமல் ப்ளீஸ்'' பலவீனமான குரல் அவள் காதிற்கே கேட்கவில்லை. போதையில் மூர்க்கமான அவனிற்கு எப்படி கேட்கும் அவள் இளமையை கொஞ்சம் கொஞ்சமாய் உறிஞ்சிக் கொண்டிருந்தான் அவன்.

இன்பமயமான அவஸ்தை ஒன்று உடலில் தோன்றியது. எத்தனை நேரம் காற்றில் மிதப்பதைப் போல் உணர்ந்தாளோ, கண் விழித்து நடந்ததை அறிந்து மனம் பய பூச்சினை பூசிக் கொண்டது.

''நீரஜ் இப்போ என்ன நடந்திட்டு இருக்குன்னு அழுவுறே.. நாமிருவரும் ஒத்துதானே இது நடந்தது..''

''ஆயிரம்தான் நீங்க சொன்னாலும் நடந்தது எத்தனை பெரிய தவறு தெரியுமா? விமல், கல்யாணத்தில் ஆயிரம்

சீதனங்கள் கைமாறினாலும் ஒரு பெண் தன் கணவனுக்கு தர சீதனம் கற்பு. நான் அதையே..!'' அழுதாள் நீரஜா.

''ஏய் லூசு.. நீ எந்தக் காலத்தில் இருக்க. பெயரில் இருக்கிற மார்ட்டன் பேச்சில் இல்லையே டியர்.. நான் இருக்கேன்டா செல்லம். பீ ரிலாக்ஸ் இந்தா இந்த ஜூஸைக் குடி..''

வறண்ட நாக்கிற்கும், உடலிற்கும் அந்த பழரசம் இதமாய் இனித்தது. மீண்டும் அதே போதை நிலை. அரை மயக்கத்தில் அவனின் அணைப்பிற்குள் ஒண்டினாள்.

அடுத்தடுத்த பக்கங்களில் உருகி உருகி சில காதல் கவிதைகளும் சிற்சில சம்பவங்களும் எழுதப்பட்டு இருந்தன.

காலையில் இருந்து எதிர்பாராமல் ஏற்பட்ட வியப்பும், அலுப்பும் சேர்ந்து செல்வத்தின் வாயில் அவன் அனுமதி இல்லாமலேயே கொட்டாவி வெளியானது. டைரியை மூடி வைத்துவிட்டு கண் அயர்ந்தான் செல்வம்.

## 5

அடுத்த இரண்டு நாட்களும் நிமிர முடியாதபடி வேலை இருந்தது. அது இடைத் தேர்தல் சமயம் என்பதால் பரபரப்பாய் இருந்தது. இரண்டு நாட்களும் பத்திரிகைகளில் அதைப் பற்றியே செய்திகள் வந்து கொண்டிருந்தது. கட்சிகள் ஒவ்வொன்றைப் பற்றியும் சர்வே வேறு எடுக்க வேண்டியதாய் இருந்ததால் நண்பர்கள் இருவரும் கடமையில் கண்ணாய் இருந்தனர்.

''மேடம் நான் செல்வம் பத்திரிகையில் இருந்து பேசறேன்..''

''சொல்லுங்க, நான் மேகலாதான் பேசறேன்.''

''மேடம் நீரஜா?''

''நல்லாயிருக்கா தம்பி.. நேத்து கூட டாக்டர் வந்து ஜெனரல் செக்கப் பண்ணிட்டுப் போனார்.''

''என்ன சொன்னார்?''

''ஓரளவிற்கு பரவாயில்லை. ஆனா கோயமுத்தூர்ல ஒரு சைக்காட்ரிஸ்ட் இருக்காராம். அவரைக் கூப்பிட்டா இன்னும் பெட்டர் ட்ரீட்மென்ட் செய்யலாம்னு சொன்னார்.''

''அதுக்கு உடனே ஏற்பாடு பண்ணுங்க மேடம்.''

''செல்வம்...'' சொல்ல எதிர்புறம் ஒரு சிறு தயக்கத்திற்குப் பின் மேகலா பேச்சைத் தொடங்கினாள். ''தம்பி உங்களுக்குத் தெரியாதது இல்லை. நிதி நிலைமை இப்பவே சரியில்லை, மேற்கொண்டு இங்கே செலவு செய்ய.''

''ஐம் ஸாரி மேடம், நீரஜாவிற்கு ஆகும் செலவை நான் ஏத்துக்கிறேன். நீங்க டாக்டரை வரவழைக்க ஏற்பாடு பண்ணுங்க.''

''சரிங்க தம்பி.''

''நன்றி மேடம்.'' போன் இணைப்பைத் துண்டித்துவிட்டு, பிரபுவின் பக்கம் திரும்பினான், ''என்ன பிரபு?''

''செல்வா உன்னை என்னால புரிந்து கொள்ளவே முடியலைடா? யாரோ ஒரு பெண்ணிற்காக எத்தனை பிரயாத்தனப்படறே? நீ அவளை நேசிச்சியா?''

''முட்டாள், ஒருத்தருக்கு உதவிட அவங்க உறவாத்தான் இருக்கணும்ன்னு இல்லை. எண்ணங்களும், தியாகங்களும் சுருங்கிய பலூனாய் இருக்கக் கூடாதுடா, நீரஜாவிற்கு செய்யறதை நான் என் கடமையா நினைக்கிறேன். அண்ணான்னு என்னையே சுத்திச் சுத்தி வந்தவடா..''

''சரி விடுடா.. இப்படியொரு கருணை உள்ளம் கொண்டவன் எனக்கு நண்பன்னு சொல்லிக்கவே நான் பெருமைப் படறேன்.''

அன்றிரவு மறுபடியும் டைரியை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்கள்.

தனக்கு வேண்டாம் என்று இலைகளை உதிர்த்துக் கொண்டிருந்த பூவரச மரத்தின் அடியில் முகாமிட்டுக் கொண்டிருந்த விமல் அண்ட் பிரண்ட்ஸை நோக்கி வந்து கொண்டிருந்தாள் நீரஜா. ''டேய் மச்சான், உன் ஆளு வர்றாடா?''

''என் ஆளா? யாரு மச்சி அது?'' க்ரே கலர் கூலிங் கிளாசை தலைக்கு நேரே தூக்கிவிட்டு அடிக்கண்களால் அவளைப் பார்த்தான் விமல்.

''என்ன விமல் வழக்கமா விஷயம் முடிந்ததும் கழட்டி விட்டுடுவியே... இவ என்ன இன்னமும் தொடர்கிறாள்?''

''நீங்க எல்லாம் தள்ளிப் போங்கடா..'' என பக்கமிருந்தவர்களை கிளப்பினான்.

''கம் டியர்.. டுடே யுவர் லுக்கிங் வெரி க்யூட். மறுபடியும் பிறந்த நாள் கொண்டாட ஆசையா இருக்கு.''



''யூ.. நாட்டி.. விமல் நான் உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்!''

''என்ன? நாம எங்கேயாவது அவுட்டிங் போறோமா?''

''எப்பவும் அதே நினைப்புதானே உங்களுக்கு? உங்கப்பா ஊரிலிருந்து வந்திட்டாரு இல்லே!''

''ம்.. ஏன்?''

''என்ன சொன்னார்?''

''எதைப் பற்றி?'' அலட்டாமல் கேள்வி கேட்டவனை திகைப்பாய் பார்த்தாள்.

''நம்ம கல்யாணம் பற்றி!''

''முதலில் படிப்பு முடியட்டும் நீரஜ்.''

''ஆனால், அதுவரை காத்திருக்க முடியாது விமல்.''

''வாட்..!''

''நான் இப்போ.. கன்சீவ் ஆகி இருக்கேனோ சந்தேகமா இருக்கு.''

''கங்கிராட்ஸ். இப்போ நான் என்ன பண்ணனும்.''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்.''

''உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா எனக்காக பத்தொன்பது வருஷமா யு.எஸ்.ஸில் ஒருத்தி காத்துக்கிட்டு இருக்காளே அவளை என்ன செய்ய? எந்தக் கடலில் தள்ள?''

''விமல் நீங்க சொல்றது?''

''நூறு சதவீதம் உண்மை.''

''அப்போ என் நிலைமை?''

''எத்தனையோ தடுப்பு சாதனங்கள் இருக்கு. இல்லேன்னா எனக்கு தெரிஞ்ச லேடி டாக்டர் ஒருத்தர் இருக்காரு அவர்கிட்டே கூட்டி போகட்டுமா?''

''விமல் என்ன பேசறீங்க, இது உங்க பிள்ளை. இதை அழிக்கச் சொல்ல.. எப்படி மனம் வருது?''

''அப்படிப் பார்த்தா இந்த காலேஜில் பாதி பேர் எனக்கு பொண்டாட்டிதான்'' அவன் கிண்டலாய் சிரிக்க,

''நீங்க சொன்ன வார்த்தையை நம்பித்தானே, நான் உங்க விருப்பத்திற்கு கட்டுப்பட்டேன்..'' விம்மல்கள் வெடிக்கக் கதறினாள்.

''நீரஜா அழுத குழந்தைக்கு இனிப்பைக் காட்டி அழுகை நிறுத்தறது இல்லை. இதுவும் அதைப் போலத்தான். அதுசரி, நான் உன்னைக் கல்யாணம் செய்துக்கிறேன்னு சொன்ன ஒத்த வார்த்தையை நம்பி என்னோட படுக்கையை பகிர்ந்துக்கிட்டே. நீ நாளைக்கு இதே வார்த்தையை வேற ஒருத்தன் சொன்னா அவன் கிட்டேயும் போகமாட்டேன்னு எப்படி நம்புறது. குப்பைக்கும் கோபுரத்திற்கும் வேறுபாடு இல்லையா?''

''விமல்?'' அலறினாள் நீரஜா.

பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் அடி வயிற்றில் சூடு வைத்தாற் போல் சுரீரென்று இருந்தது. இயல்பிலேயே சற்று இளகிய மனம் கொண்ட அவளால் இந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியவில்லை.

''என்ன டியர் விட்டா எரிச்சிடுவே போலிருக்கு.''



''நான் உன்னை சும்மா விட மாட்டேன் விமல்.''

''தாராளமா உன்னால் என்ன செய்ய முடியுமோ செய் கண்ணம்மா.. அப்பப்போ தலைவலின்னா மாத்திரையா முழுங்கினீயே அதெல்லாம் என்னென்னு நினைச்சே? போதை மாத்திரை. இந்த நிலைமையிலே நம்ம விஷயத்தை நீ வெளியிலே சொன்னாலும் யாரும் நம்ப மாட்டாங்க. போதை மருந்தை ஏத்திக்கிட்டு எவன் கிட்டயோ கெட்டு போயிட் டேன்னுதான் சொல்வாங்க'' எகத்தாளமாய் பேசிய அவனையே வெறித்தாள்.

பூமி பிளந்து அப்படியே அந்த நயவஞ்சகனை விழுங்கி விடாதா என்ற நப்பாசையில் அவனைப் பார்க்க அவனோ அவளை நோக்கி உற்சாகமாய் கையை அசைத்துவிட்டு வண்டியைக் கிளப்பினான். செய்வதறியாது திகைத்து நின்றாள் நீரஜா.

'உயிராய் இருப்பதாய் நடித்துவிட்டு, அவன் தேவை தீர்ந்ததும் குப்பையை வீசுவதைப் போல் எத்தனை அழகாய் ஒதுக்கிவிட்டான். இனி என் நிலைமை என்ன? வயிற்றில் குழந்தையை சுமந்து கொண்டு, கேவலப்படுவேனோ, கடவுளே எத்தனை அன்போடும், கனவுகளோடும் என்னை வளர்த்த என் பெற்றோர்களுக்கு எவ்வளவு பெரிய கேவலத்தை உண்டு பண்ணிவிட்டேன்.' நெற்றியில் அறைந்தபடி அழுதாள். அதன் பிறகு டைரியில் ஒன்றும் எழுதியிருக்கவில்லை.

''அப்புறம் என்னதாண்டா ஆயிருக்கும். நீரஜாவிற்கு ஏன் இப்படியொரு நிலைமை.''

''தனக்கு நேர்ந்த அவமானத்தை வெளியிலே சொல்ல முடியாம பெற்றோர்களுக்காக கல்லூரிக்கு நடைபிணமாய் சென்று வர அங்கே தொல்லைகள் தொடர்ந்தன.

விமலுடன் பழகியதை சிலர் மறைமுகமாய் கிசுகிசுத்தனர். சிலர் இவளுக்கு கேட்கும்படியே பேசினர். அம்மாதிரி சமயங்களில் எல்லாம் தலைகுனிந்தபடி அவ்விடம் விட்டு நகர்ந்து விடுவாள். ஆனால் எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாய் விமலின் நண்பர்களில் ஒருவன் பேசியதுதான்.

''நீரஜா... உன்கிட்டே பேசணும்?''

''என்ன கதிர்?''

''விமல் உன்னை இப்படி ஏமாத்தி இருக்கக் கூடாது. அதுக்காக நான் ரொம்பவும் வருந்துகிறேன். அன்பான, அழகான உன்னை இத்தனை சீக்கிரம் கைகழுவிட்டானே. அவனைப் பழிவாங்க ஒரு யோசனை சொல்லவா?''

''என்ன?'' என்பது போல் கதிரைப் பார்த்தாள் நீரஜா.

''அவன் கண் முன்னாடி நம்ம இரண்டு பேரும் ஜாலியா இருந்தா...''

''ஷட்டப் கதிர்! ஒரு பெண்கிட்டே இதை மாதிரிப் பேச உனக்கு வெட்கமாயில்லை.''

''ஏய் என்னம்மா எகிர்றே? போன மாசம் வரை விமல் கூட சுத்திட்டு இருந்தே. இப்போ என் கூட சுத்துறேன்னு சொன்னா உன்னோட கிரேடு என்ன குறைஞ்சா போயிடுமாயென்ன?''

''கதிர் ப்ளீஸ் நான் ஏற்கனவே நொந்து போயிருக்கேன். மேலும் என்னை நோகடிக்காதீங்க!'' அழுகையோடு வேகமாய் நடந்தாள்.



கல்லூரிக்குள் போவதையே நிறுத்தி சண்டித்தனம் செய்தவளை பெற்றோரிடம் சந்தேகம் உண்டானது. அவளிடம் ஏற்பட்ட மாற்றங்களும் ஊர்ஜிதப்படுத்திட, அரட்டி மிரட்டி கேட்டதில் உண்மையை தெரிவித்து விட்டாள் நீரஜா.

''அடக் கடவுளே - பாவம்டா அவ!'' பரிதாபப்பட்ட பிரபுவிடம்,

''அத்தோட, அவ பிரச்சனை முடியலைடா.. பெண் இப்படி தப்பு செய்து விட்டாலேங்கிற வேதனையில், மானம் போச்சு, மரியாதை போச்சு, இனிமே எப்படி உயிரோட இருக்கப் போறோம்.. ஊராரின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளாக வேண்டியது வருமேயென்ற தவிப்பில் நீரஜாவோட கண்ணு முன்னாலேயே தீயை வைச்சுகிட்டு உயிரை விட்டுட்டாங் களாம்.''

''கடவுளே!''

''கண்ணுக்கு கண்ணா வளர்த்த பெத்தவங்க தன் கண்ணெதி ரிலேயே துடிதுடிச்சு செத்த அந்த அதிர்ச்சியிலே நீரஜாவும் மனநிலை பாதிக்கப்பட்டுட்டா. கருவும் கலைஞ் சிடுச்சு!''

''ச்சே! ரொம்ப பாவம்டா. அந்த பொண்ணு. அவளுக்கு கட்டாயம் ஏதாவது செய்யணும் செல்வா. எனக்கு ஒரு யோசனை போதை மருந்து சீரழிவு பற்றி ஒரு ஆர்டிக்கல் எழுது. நான் நீரஜாவுடைய போட்டோஸ் தயார் பண்றேன். எப்படியாவது இதுக்கு விமல்தான் காரணங்கிறதை நிரூபிச்சிடலாம்.''

''வேண்டாம்'' என அழுத்தமாய் சொன்ன நண்பனை திகைப்பு அகலாமல் பார்த்தான் பிரபு.

''ஏன் பிரபு அப்படி பாக்குறே?''

''நீரஜாவுக்கு என்னால் முடிந்த நல்லதை செய்யணுமின்னு பேசுனே இப்போ..!''

''நான் நீரஜாவுடைய சித்தப்பாவிடம் அவளைப் பற்றி விசாரிக்கப் போனப்போ அவர் சொன்னது பத்திரிகையில எழுதி அவ பேரை சீரழிக்க வேண்டாமின்னு சொன்னார். நீ சொன்ன முறையில் விமலை நெருங்கினா அவன் கிட்டே இருக்கிற பண பலத்திலே நம்மை நசுக்கவும் செய்வான்.''

''அப்போ இதுக்கு என்னதான் வழி?''

''அதைத்தான் நானும் யோசிக்கிறேன்.''

பிரபு திடீரென தலையை குலுக்கி ''செல்வா என்கிட்டே ஒரு சூப்பர் ஐடியா இருக்கு.''

''யாருக்கும் ஏன் அந்த விமலுக்குமே சந்தேகம் வராத வகையில் நாம விமலை நெருங்கப் போறோம்.''

''எப்படிடா?''

''இது எலக்ஷன் டைம். சர்வே எடுக்கறேன்கிற பேரில் நாம ஏன் நீரஜா படிச்ச காலேஜுக்குப் போகக் கூடாது.''

''குட் ஐடியா. ஆனா எந்த காலேஜ்?''

''ஏன்டா? சிட்டியிலே ஆர்ட்ஸ் காலேஜில் கோ எஜுகேஷன், விமல் மாதிரி பணக்காரப் பசங்க படிக்கிற கல்லூரியை விரல் விட்டு எண்ணிடலாமே! இரண்டு நாள் அலையணும். நீரஜா எழுதியதைப் பார்த்தால் நிச்சயமா விமலுக்கு ஒரு டைம் இருக்கும். எப்படியும் பிடிச்சிடலாம்'' பிரபுவின் கண்களில் தொனித்த நம்பிக்கை ஒளி செல்வாவினுள் சுடர் விட்டது.



# 6

'அச்சச்சோ நேரம் கடந்து விட்டதே. ச்சீ... இன்றைக்கு எல்லாமே தாமதம்தான்'' அழகான நெற்றியை சுருக்கியபடியே ஸ்டீரிங்கை வளைத்தாள். அவளின் கார் போய் சேரும் இடம் வரையில் அவளைப் பற்றிய அறிமுகம்.

ரோஸ்வுட்டில் குழைத்த தேகம். திராட்சை கண்கள் ஒட்ட வைத்ததைப் போன்ற ராசி, செதுக்கிய உதடுகள், முகத்தில் ஓடிப் பிடித்து விளையாடிய முடிக் கற்றைகளில் ஒன்றிரண்டு ப்ரவுன் கலர் சாயம் பூசியிருக்க திக்கோஸாவின் ஓவியமாய் ஜொலித்தாள்.

தாறுமாறாய் எதிரே வந்த வண்டி சடேன் பிரேக் போட்டு நிற்க, ஸந்தனா அதிர்வு குலுக்கலோடு நிறுத்தினாள் ஸந்தனா. காதில் போட்டு இருந்த இயரிங்ஸ் குலுங்கி நின்றன.

''யூ இடியட் வண்டியை வானத்திலே ஓட்டறதா நினைப்பா'' கோபத்தோடு இறங்கியவள் அந்த கருப்பு நிற காண்டஸாவில் இருந்து இறங்கிய இளைஞனைக் கண்டதும் கோபத்தில் சிவந்த அவள் முகம் தாமரையாய் மலர்ந்தது. ''என்ன ஸந்தனா பயந்திட்டியா' என்றான் அந்த இளைஞன்.

''நீ எப்பத்தான் மாறுவே ஆனந்த் இன்னமும் அந்த குரங்குத்தனமான சேட்டை எல்லாம் விடலை இல்லையா?''

''இல்லேம்மா... எப்பவும் பழசை மறக்கக் கூடாது!''

''உத்தமம்தான்.. அங்கிள் எப்படி இருக்கார்?''

''ம்... உங்கப்பாவும், எங்கபபாவும் பார்ட்னருங்கன்னுதான் பேரு. உன்னைப் பார்க்கவே முடியலை. எங்கே ஹாஸ்பிட்டல் கிளம்பியாச்சா?''

''எஸ்.. இப்போதானே டிரைனிங் போகுது.''

''ஓகே மேடம்.. நீ வந்து ஒரு மாசம் ஆகுது. எனக்கு டிமிக்கி கொடுத்திட்டே இருக்கே. இந்த ஸண்டே ப்ரியா இருக்கியா?''

''ஸாரி ஆனந்த் செமினார் இருக்கு. என்னால வர முடியாது.''

''ஸந்தனா வீட்லே நமக்கு நிச்சயதார்த்த ஏற்பாடுகள் நடக்குது நினைவிருக்கா?''

''ஸோ வாட்? அதனால நீ சொன்னதுக்கு எல்லாம் தலையாட்ட முடியுமா ஆனந்த் எனக்கு சுயமான புத்தி இல்லையா?''

''ஸந்தனா நீ என்னை அவாய்ட் பண்ணுவது போல இருக்கு.''

''டிரை டூ அண்டர்ஸ்டாண்ட் ஆனந்த், நாம என்ன யெங் ஏஜ் லவ்வர்ஸா. கோயமுத்தூர்ல இருந்து பெரிய சைக்கார்டிரிஸ்ட் ஒருத்தர் வர்றார். அவர்கிட்டே பேச வேண்டியிருக்கு.''

''எல்லாம் கல்யாணம் வரையில் வைத்துக் கொள் ஸந்தனா. அப்புறமும் தவிக்க விடாதே!''

''பார்க்கலாம்!'' என்று சொல்லி அவன் அசடு வழிந்ததை ரசித்தபடியே, ''பை, ஆனந்த் வீ வில் மீட் அகெய்ன்'' என்று இருவரும் ஒரு சேர கையசைத்து விட்டு அவரவர் காருக்கு சென்றனர். காரின் உள் லாக்கரில் இருந்த ஸந்தனாவின் புகைப்படத்தை வெளியே எடுத்த ஆனந்த் அப்படியே அவளின் புகைப்படத்திற்கு அழுத்தமாய் முத்தம் பதித்தான்.

பத்திரிகை அலுவலகம்.

செல்வா மறுநாள் பிரிண்ட் போட வேண்டிய விளம்பரங் களை எல்லாம் தொகுத்து பிரிண்டிற்கு அனுப்பிவிட்டு, அவன் எழுதிய கட்டுரைக்கு வந்த விமர்சனக் கடிதங்களைப் பார்வையிட்டபடி இருந்தான்.

''கீதா'' என்ற பெண் தான் ஒவ்வொரு முறையும் அவன் கட்டுரை கவிதைகளை விமர்சிப்பதும் பாராட்டுவதும், அவளின் கடிதங்களைக் கொண்டே தமிழார்வமும், சமூக பொறுப்பும் நிரம்பக் கொண்டவள் என்பதை உணர்ந்தே இருந்தான். சென்னை லீ மெரிடியன் ஓட்டலில் நடைபெறும் ஒரு புத்தக வெளியீட்டு விழாவிற்கு வருகை தரும்படி அழைப்பிதழும் அனுப்பியிருந்தாள்.

அதை எடுத்து டேபிளில் பத்திரப்படுத்தினான். அப்போது உள்ளே நுழைந்த பிரபு, ''என்னடா மச்சான் என்னைப் பார்த்ததும் எதையோ மறைக்கிறே?''

''படுபாவி. ஒரு இன்விடேஷன்..''

''யாரு அனுப்பியது?''

''கீதா!''

''யாரு? உன் தீவிர ரசிகையா? அது ஏன்டா பொண்ணுங்க உனக்கு மட்டும் மடங்குது?''

''லூசு மாதிரி பேசாதே. நீ போன விஷயம் என்னாச்சு?''

''என்கிட்டேயிருந்து எதையும் மறைக்க முடியாதுடா... விமலைப் பற்றிய தகவல்கள் மட்டுமில்லே அவனோட போட்டோவையே கொண்டு வந்திருக்கேன்.''

''இஸிட்..!''

''எஸ்..'' பிரபு வீசிய புகைப்படத்தில் வசீகரமான இளைஞன் சிரித்தான். ''பிரபு இவனைப் பார்த்தா எனக்கே ஆசையா இருக்கு. பாவம் மத்த பொண்ணுங்க என்ன பண்ணுவாளுங்க?''

''போட்டோ எப்படி கிடைச்சிது?''

''வாட்ச்மேன் கிட்ட ஒரு பிட்டைப் போட்டேன். பாதி நியூஸ் கிடைச்சிது. பையன் சரியான பிளே பாய். காலேஜ் ஹீரோ வேற. எப்பவும் நாலு பேரோடதான் சுத்துவானாம்.''

''அப்புறம் பிரின்சியைப் பார்த்து ஒரு ஸ்நாப் அடிச்சு நிர்வாகம் அப்படி இப்படின்னு புகழ்ந்தேன். விமலோட அப்பா அந்த காலேஜ் சேர்மனில் ஒருவர். ஒரு ஆண்டு விழாவில் எடுத்த போட்டோவை காமிச்சு விவரம் சொன்னார்.''

''இவர் பையன் விமல் கூட நம்ம மாணவன்தான்னார்.''

''இத்தனை பெரிய ஆள் பற்றி ஒரு கவர் ஸ்டோரி போடணுமின்னு அட்ரஸையும் கறந்திட்டேன். குரூப் போட்டோவில் இருந்து இவனை மட்டும் தனியா எடுத்து பிரிண்ட் போட்டேன்.''

''தேங்க்ஸ்டா..''

''முட்டாள். நீ என் நண்பன். உனக்காக இது கூடச் செய்ய மாட்டேனாயென்ன? சரி இதுக்கு மேலே என்ன பண்ணப் போறே?''

செல்வா பதில் சொல்வதற்குள் அவன் செல் அலறியது.

''ஹலோ..!''

''நான் மேகலா பேசறேன். செல்வாதானே?''

''ஆமா மேடம்..''

''தம்பி, கோயம்புத்தூர் டாக்டர் ஒரு செமினார்க்காக சென்னை வர்றாராம். அவர்கிட்டே ஒரு அப்பாயிண்ட் மென்டும் வாங்கிட்டேன். அன்னைக்கு நீங்க வந்தா ரொம்பவே பேவரா இருக்கும்.''

''ரொம்ப தேங்க்ஸ் மேடம். நீங்க ரொம்ப பெரிய ஹெல்ப் பண்ணியிருக்கீங்க!''

''இது என் கடமை தம்பி.'' போனை கட் பண்ணியவன் பிரபுவிடம் விஷயத்தைக் கூறிட அவனும் சந்தோசித்தான்.

''ஸார் உங்களை எடிட்டர் கூப்பிடறார்.''

''ரமேஷ் இந்த கடிதங்களை டெஸ்பாட்ச்சில் சேர்த்திடுங்க. அடுத்த இஷ்யூ கட்டுரை ஆபரேட்டர் கீர்த்தனா கிட்டே தந்து இருந்தேன். ரெடி பண்ணிட சொல்லு.''

''எஸ் ஸார்.''

செல்வா அனுமதி கேட்டு எடிட்டரின் அறையில் நுழைந்தான்.

''ஸார்..''

''வாப்பா.. நான் ஒரு முக்கியமான வேலையா மும்பை போறேன். வர பத்து நாள் ஆகும். அதுவரையில் நீ ஆபீஸைப் பார்த்துக்கணும்..''

''ஸார்... எத்தனையோ சீனியர் ஸ்டாப்ஸ் எல்லாம் இருக்காங்க. அவங்களை எல்லாம் விட்டுட்டு..''

''எனக்கு உன் மேல் தானே முழு நம்பிக்கை இருக்கு..''

''ஸார்!''

''பொறுப்பைத் தாங்கவும் ஒரு வலிமை வேணுமே..''

''எப்போ கிளம்பறீங்க?''

''நாளை மறுநாள்.''

''சரி ஸார். ஹேப்பி ஜர்னி..'' சொல்லிவிட்டு தலையை தேய்த்தபடி வெளியே வந்தான் செல்வா.

ஸந்தனா தான் படித்துக் கொண்டு இருந்த மேகஸினை மூடி வைத்து, காலையில் தோழி தந்த கவரைப் பிரித்தாள். ஸந்தனா இயல்பிலேயே நல்ல தமிழ் ஆர்வம் கொண்டவள். தன் புத்தக வெளியீட்டு விழாவிற்கென பத்திரிகை வைக்க வந்த தோழி அற்புதமான கருத்துக்களை கொண்ட கவிதையென்று இதை கையில் திணித்தாள்.

பேப்பர் கற்றைகளை கையில் எடுத்தாள். காற்றிடம் ஸ்நேகம் கொண்டு அனைத்தும் கையிலிருந்து நழுவி பறக்க, எக்ஸஸைப் போல் குனிந்து நிமிர்ந்து எல்லாவற்றையும் சேகரித்து கட்டிலில் வாகாய் அமர்ந்து வாசிக்க ஆரம்பித்தாள்.

பெண்ணுரிமையைப் போற்றும் பேராற்றலான கருத்துக்கள் ஒவ்வொரு வரியும், துள்ளித் திரியும் நவநாகரீக இளைஞர்



களைச் சாடும் முள் சாட்டைகள், காதல், நட்பு, நாட்டு நடப்பு, அரசியல், ஈழத்தினரின் கொடுமை என்று பதினைந்து கட்டுரைகளை உள்ளடக்கி இருந்தது.

அடியில் செல்வா என்று பெயரும் இடப்பட்டு இருக்க எத்தனை அற்புதமான கருத்துக்கள் என்று தன்னையும் மறந்து வாய் விட்டுப் பாராட்டினாள்.

உடனே தோழியை மொபைலில் அழைத்தாள். ''கீதா சூப்பர்டி. யாரு அந்த செல்வா? மனுஷன் சூப்பரா எழுதி இருக்காருடி. இத்தனை அற்புதமா.. ச்சே ஒரு தடவை அவரே பார்த்தே தீரணும்!''

''டோன்ட் வொர்ரி... நம்ம புத்தக விழாவிற்கு அவரையும் அழைச்சிருக்கேன்.''

ஸந்தனா துள்ளிக் குதிக்காத குறைதான். செல்வா முகம் தெரியாத அவன் மனதில் ஒரு பிரமிப்பு கலந்த நேசத்தை உருவாக்கிப் போனான்.

''செல்வா டாக்டர் எப்போ வர்றாராம்?''

''வர்ற ஞாயிற்றுக்கிழமை.'' தோசையை சாப்பிட்டபடியே கூறினான் செல்வா.

''புத்தக வெளியீட்டு விழாவிற்குப் போகப் போறீயா?''

''எங்கேடா? எடிட்டர் வேற ஊரில் இல்லே..''

''நம்ம பத்திரிகை சார்பிலே ரகுவை அனுப்பலாம்..'' கைகழுவியபடி எழுந்தான்.

''அட்டெண்டர் ரமேஷ், ஸார்..!'' அனுமதி கேட்டு நுழைந்தவனிடம்,

''என்னப்பா?''

''ஸார் உங்களைப் பார்க்க ஒரு லேடி வந்திருக்காங்க. பேரு கீதாவாம்..''

''உள்ளே அனுப்பு..''

ஸ்லிம்மாய் சுடிதார் அணிந்த பெண்ணைக் கண்டதும் நண்பனைப் பார்த்து நமுட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தான் பிரபு. கண்ணசைப்பில் அவனை அதட்டிவிட்டு, ''எஸ்!''

''இங்கே மிஸ்டர் செல்வா..''

''அய்யாதான்'' பிரபு கைகாட்ட...

''மைசெல்ப். ப்ளீஸ் சிட்டவுன் மேடம்..'' என்று இருக்கையைக் காட்டினான்.

''ஸார்.. நான்தான் கீதா.. உங்க பரம விசிறி!''

''தெரியுமே... ஒவ்வொரு திங்கள் காலையில் கண் விழிப்பதே உங்க கடிதத்தில்தான்!''

''நன்றி ஸார்... ஒரு அட்வர்டைஸ்மென்ட் தரணும். அது விஷயமா வந்தேன். அப்படியே உங்களையும் பார்த்திட்டு நேரடியா என் புத்தக வெளியீட்டு விழாவிற்கு அழைக்க வந்தேன்.''

''நன்றி மேடம். அவசியம் வர்றேன். என்ன விளம்பரம்?''

''என் தோழியின் நிச்சயதார்த்த அழைப்பிதழ் பிரிண்ட் போடணும்... இதோ..'' அவன் முன்பு நீட்டியவளிடம் பெற்றுக் கொண்ட செல்வா, ஒரு விநாடி அதிர்ந்து பின் முகம் மாறி.. ''நான் அவசியம் வர்றேன் மிஸ்.. கீதா'' என்றான்.

''நன்றி சார்.. நான் உங்களை எதிர்பார்ப்பேன்..'' என்று சொல்லிவிட்டு அவள் கிளம்ப, அதுவரையில் பொறுமையாய் காத்திருந்த பிரபு, ஆரம்பித்தான்.

''ஏன்டா இப்படி நிமிஷத்துக்கு நிமிஷம் மனசு மாறுறே? அந்த பொண்ணு வர்றதுக்கு முன்னாடி போகலைன்னே? இப்ப போகப் போறேங்கிறே?''

''முதல்ல இந்த இன்விடேஷனைப் பாரு. அப்புறம் பேசு!''

''என்ன இதில்?''

''டேய் இது?'' என்றான் மாப்பிள்ளையின் புகைப்படத்தைக் காட்டி ''விமல் என்கிற விமலானந்தன். எத்தனையோ பெண்களை கண்ணீர் கவலையுமா விட்டுட்டு, இப்போ புதுமாப்பிள்ளை பட்டம் கட்டப் போறான்.''

''விடக் கூடாதுடா இவனை!''

''பொறுமை பிரபு நான் இந்த விழாவிற்குப் போய் ஸந்தனாவைப் பார்த்துப் பேசப் போகிறேன். விமலைப் பற்றி அவளிடம் சொல்லி எச்சரிக்கை செய்யப் போறேன்.''

''அவ நம்புவாளா?''

''நம்ப வைப்போம். அதுக்குண்டான ஆதாரங்கள்தான் நம்ம கிட்டே இருக்கே!''

.''எஸ்! பாய்டா மச்சான். எனக்கு கொஞ்சம் முக்கியமான வேலை இருக்கு.''

''அப்படியென்ன வேலை?''

''தூக்கம் வருது..''

''ஸ்டுப்பிட் இது ஆபீஸ் டைம்..''

''ஸோ வாட்? உன் விஷயமாதானே அலைஞ்சேன்? வெயில்ல அலைஞ்சது தலைவலிக்குதுடா..''

''போய் தொலை. ஆனா மூணு மணிக்கு இங்கே இருக்கணும். பிரபு இதை அட்வர்டைஸ்மெண்ட் ஷெக்ஸனில் கொடுத்திடு..'' பிரபு கிளம்ப ஸந்தனாவிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று எண்ணியபடி சிந்தித்தான் செல்வா.

## 7

குறிப்பிட்ட நாளில் ஸந்தனா விமலானந்தனின் திருமண நிச்சயதார்த்த விழா முடிவு பெற்றது. வந்திருந்த சொந்த பந்தங்கள் அனைவரும் உணவருந்த புறப்பட்டு இருக்க, தோழிகள் ஈக்களாய் ஸந்தனாவை மொய்த்துக் கொண்டிருந்தனர்.

''ஏய் மாப்பிள்ளை ரொம்பவும் கலர்டி ஸந்தனா உனக்கு நல்ல மேட்ச்..''

''நீ அதைத்தானே பார்த்த அவர் நம்மாளை பார்த்த பார்வையை கவனிக்கலையே! விட்ட பார்வையாலே சாப்பிட்டுருவாரு போல.''

''இத்தனை அவசரம் ஏன்டி கல்யாணத்திற்கு இன்னமும் 2 மாத இடைவெளி தேவையா?''

''மாப்பிள்ளை பாடு திண்டாட்டம்தான்.''



தோழிகளின் இந்த விஷமப் பேச்சுக்களைக் கேட்டுச் சிரித்தாள்.

''டீ! ஸந்தனா. இந்த முத்துக்கள் பதிச்ச செட்டை எந்த கடையில் நீ வாங்கினே?''

''இது விமலோட பரம்பரை சொத்தாம். அங்கிள் தந்தது.''

''இதெல்லாம் இல்லேன்னாலும் ஸந்தனா அழகாதாண்டி இருப்பா.''

''ஆமாம் நிலா மாதிரி!''

''நிலா மகளே நாளைக்கு என் புத்தக வெளியீட்டு விழா இருக்கு. அதை மறந்திடாதே!' கீதா சொல்லவும் கொல்லென்ற சிரிப்பொலி பரவியது.

''ச்சீ மொதல்ல, நீங்க எல்லாம் போங்கடி..''

''பார்த்தீங்களாடி இன்னும் கல்யாணமே ஆகலை. அதுக்குள்ளே நம்மளையெல்லாம் போகச்சொல்றா. கல்யாணம் ஆயிடுச்சின்னா நீங்க யாருன்னு கேட்டாலும் கேட்பா? நாங்க வர்றோம் தாயே'' தோழிகளும் கிளம்ப தனிமையில் விடப்பட்டவளிடம் நெருங்கினான் விமலானந்தன்.

''ஸந்தனா இன்னைக்கு நீ ரொம்பவும் அழகா இருக்கே.''

''தேங்க்ஸ்.''

''இப்போ.. உனக்கு சந்தோஷம்தானே?''

''ம்..!''

''நான் ரொம்பவே ஹேப்பியா இருக்கேன். சொன்னா நீ நம்ப மாட்டே. நான் உன்னை ரொம்ப லவ் பண்றேன்

தெரியுமா. அப்பாகிட்டே பேசி அங்கிள்கிட்டே பர்மிஷன் வாங்க சொன்னதே நான்தான்.''

''ரியல்லி!''

''ஆச்சரியமா இருக்கா ஸந்தனா..'' அவள் கையைப் பற்றி உதடுகளுக்கு அருகே கொண்டு போக வெடுக்கென இழுத்துக் கொண்டாள் அவள்.

''ஏன் வந்தனா? உனக்கு என் மேல்..!''

''டோன்ட் பீ சில்லி ஆனந்த்! உண்மையில் சொல்லப் போனா கல்யாண விஷயத்திலே எனக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லை. அப்பா உன்னை பிடிச்சிருக்கான்னு கேட்டப்போ, உன்கிட்ட குறைன்னு சொல்ல எதுவும் இல்லைன்னு தோணிச்சு. அதனால சரின்னு சொன்னேன்.''

''அப்படின்னா..?''

''ஸாரி ஆனந்த் உன் மேல எனக்கு எந்த ஈர்ப்பும் இல்ல. ஒருவேளை கல்யாணத்திற்கு பிறகு ஏற்படுமோயென்னவோ?'' ஸந்தனாவின் அலட்சியமான பதிலில் முகம் சுருங்கிப் போனவன், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஒரு அசட்டுத்தனமான புன்னகையோடு வெளியேறினான்.

''ச்சே..'' எத்தனை பெரிய அவமானம். அவனின் தரிசனத்திற்காகவும், ஒற்றை விழிப் பார்வைக்காகவும் எத்தனைப் பெண்கள் காத்திருந்தனர். ஆனால், இவள் எதற்கும் மசிய மறுக்கிறாளே! போடி என்று அலட்சியப்படுத்தவும் முடியவில்லை. கணக்கில் அடங்காத சொத்து, சுண்டி இழுக்கும் அவளின் இளமையென்று, சரி போகிறாள்.



மூன்று முடிச்சு போடும் வரையில் தானே இவள் ஆட்டம் பாட்டம் எல்லாம், அதற்குப் பிறகு நாய்க்குட்டி மாதிரி என்னையே சுற்றி வருவாள். வர வைப்பேன். காலரை தூக்கி விட்டபடி நடந்தான் விமல்.

''என்ன கீதா விழாவிற்கு இன்னும் இரண்டு மணி நேரம் உண்டு இல்லையா. போகிற வழியில் எங்கள் மருந்து தொழிற்சாலை இருக்கிறது ஒரு எட்டு போய் பார்க்கலாமா?''

''ஓஹோ.. அங்கே விமல் இருப்பாரோ?''

''தெரியாது..! நான் அங்கிளைப் பார்க்கணும்!''

''இது ஒரு சாக்கு'' சொல்லிய கீதாவை செல்லமாய் கிள்ளினாள் ஸந்தனா.

கார் காம்பௌண்டில் நுழையும் போதே காவலாளி கைகூப்பி கேட்டைத் திறந்தான். தோழியை ஏஸி அறையில் அமர வைத்துவிட்டு, பாக்டரி நோக்கிப் போனாள் ஸந்தனா.

அங்கே சோமசுந்தரம் யாரிடமே கோபமாக கத்திக் கொண்டு இருந்தார்.

''ஸார் நாம தயாரிக்கிறது பேட்ரியாட்டிக் சிரப். தரம் தாழ்ந்தால் குழந்தைகளுக்கு..!''

''நீ ஒண்ணும் பேச வேண்டாம் மனோஜ். ஏற்கனவே நம்ம கம்பெனி மெடிசின்ஸுக்கு மார்க்கெட்டில் நல்ல பெயர் இருக்கு. அதனால எப்படியும் வித்திடும்.''

''ஸார் விலையையும் போன மாதமே ஏத்திட்டோம். இப்போ பொருளிலும் தரம் இல்லைன்னா..''

''நான் சொன்னதை செய்ய வேண்டியது மட்டும்தான் உங்க வேலை. போகலாம்.''

அவர் தலைகுனிந்து வெளியே வரவும் ஸந்தனா ஏதும் அறியாதவளாய் உள்ளே நுழைந்தாள்.

''அங்கிள் குட்மார்னிங்.''

''வெரி குட்மார்னிங் டியர்!''

''வெல்கம்.. என்ன திடீர்னு இந்தப் பக்கம்!''

''ப்ரண்டோட ஒரு முக்கிமான விழாவிற்கு போறேன். போகும் வழிதானே அப்படியே உங்களையும் பார்த்துட்டுப் போவேமேன்னு..''

''ஐ நோ டியர்... நீ விமலை எதிர்பார்த்து வந்திருப்பே..''

''நத்திங் அங்கிள். ஜஸ்ட் எ விசிட்.. அவ்வளவுதான்.''

''நீ ரூமில் வெயிட் பண்ணும்மா. நான் ஸ்டோர் ரூம் வரை போயிட்டு வந்திடறேன்!'' புன்னகையோடு நகர்ந்தாலும் இவள் ஏன் இங்கு வந்திருக்கிறாள் என்று எண்ணியபடியே நகர்ந்தார்.

சோமசுந்தரமும், ஸந்தனாவின் தந்தை கருணாகரனும் சேர்ந்து சில தொழில்களை நடத்தினார்கள். கருணாகரன் நகைக்கடை மற்றும் ரியல் எஸ்டேட் பிஸினஸை பார்ப்பார்.

சோமசுந்தரமோ மெடிக்கல் பேக்டரியையும் சிட் பண்டுகளையும் பார்த்துக் கொண்டார். நண்பர்கள் என்பதால் நட்பின் அடிப்படையில் கணக்குகளை கவனித்தார் கருணாகரன்.

ஆனால், இப்போது சோமசுந்தரம் செய்யும் கள்ளத்தனத்தினால் 68% பங்குதாரரான ஸந்தனாவின் தந்தையல்லவா பதில் சொல்ல வேண்டும். இதையெப்படி தவிர்ப்பது என்று யோசித்த ஸந்தனா, சற்றுமுன் சோமசுந்தரத்திடம் பேசிக் கொண்டிருந்த அந்த ஆளை நெருங்கினாள்.

''ஸார் நீங்கதானே மனோஜ்..''

''எஸ் மேடம்..''

''ஐயம் ஸந்தனா.. என்னை உங்களுக்குத் தெரியுமின்னு நினைக்கிறேன்.''

''கருணாகரன் ஸாரின் மகள். இந்த கம்பெனியின் ஒன் ஆப் தி போர்ட் டைரக்டர்..''

''குட்... இந்த கம்பெனி டைரக்டர்ங்கிற முறையிலே உங்ககிட்டே சில கேள்விகள் கேட்க ஆசைப்படறேன்..''

''ஷ்யூர் மேடம்..''

''தேங்க்ஸ். அங்கிள் உங்களைச் சத்தம் போடக் காரணம்..''

''மேடம், அது வந்து..''

''நான் எல்லா விஷயத்தையும் கேட்டுட்டேன் மிஸ்டர். மனோஜ் மறைக்க வேண்டாம். இங்கு புரொடக்ஷனில் பெரிய தப்பு நடக்குது. நாளைக்கு இதனால வர பிரச்சனைகளை ஃபேஸ் பண்ணப் போறது என் அப்பாதான். உண்மையை சொல்லிட்டா தேவலை. இல்லேன்னா உங்க மேலயும் நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.''

''அய்யோ.. மேடம். இது பெரிய இடத்து விவகாரம். நாளைக்குப் பிரச்சனை அதுயிதுன்னு வந்தா..''

''நானிருக்கிறேன்..''

''மேடம் நாம தயாரிக்கிற மருந்து குழந்தைகளுக்காக, அதற்கான பார்முலா நன்றாய் இருந்தாலும், தேவையான மூலப் பொருட்கள் எல்லாம் ரொம்ப தரம் தாழ்ந்ததா இருக்க. நானும் எத்தனையோ முறை சொல்லிப் பார்த்திட்டேன்.. ஆனா..''

''மிஸ்டர்.. மனோஜ் எனக்கொரு சின்ன உதவி செய்ய முடியுமா, இந்த மூலப் பொருட்களை இவங்க எங்கிருந்து வாங்கிறாங்கன்னு தகவல் தர முடியுமா?''

''மேடம், இந்த விஷயம் யாரும் அறியக் கூடாதுன்னு ஸாரே நேரடியா செய்யறார்.. இது சம்பந்தப்பட்ட அத்தனை தகவல்கள் ஸாரோட வீட்லே இருக்கிற சிஸ்டமில் லோட் ஆகியிருக்கு. பாஸ்வேர்ட் அவருக்கு மட்டுமே தெரியும்.''

''ஓஹோ.. நன்றி சார்.. கவலைப்பட வேண்டாம். இந்த பிரச்சனையை நான் வேறு விதமா ஹேண்டில் பண்ணிக் கிறேன்..'' அவள் நகரவும் மனோஜ் ஒரு பெருமூச்சோடு அடுத்த வேலையை கவனிக்கச் சென்றான்.

''என்ன ஸந்தனா இத்தனை தாமதப்படுத்திட்டியே? அப்பா திட்டப் போகிறார்.''

''இங்கே வந்ததற்கு நிறைய தகவல்கள் கிடைச்சிருக்கு. நியாயப்படி நான் உனக்கு நன்றி சொல்லணும்..''

''இங்கே வரலைன்னாலும் நீ எனக்கு நன்றி சொல்லுவியே!''

''புரியலையே!''

''உனக்கு ஒரு பெரிய வி.ஐ.பி.யை அறிமுகப்படுத்தப் போறேன்.''

''இப்போ எனக்கிருக்க மனநிலையில் உன் சஸ்பென்ஸை ரசிக்கிற மனசு இல்லை.''

''என்னாச்சு உள்ளே மாப்பிள்ளை இல்லையா?''

''ஸ்டாப்பிட் கீதா. டோன்ட் ராக் ரப்பிஷ்.'' ஸ்டீரிங்கை வளைத்த தோழியை வித்தியாசமாகப் பார்த்தாள் கீதா.

புத்தக வெளியீட்டு விழா என்று வரவேற்புரை குறித்து பெரிய பேனர் ஒன்று வாசலில் கட்டப்பட்டு இருந்தது.

சந்தனம், கற்கண்டு, ரோஜா என்று தட்டுகளில் அடுக்கப் பட்டு இருந்த இடத்தில் தாவணி அணிந்த இரண்டு பெண்கள் சிரித்தனர். வந்தோரின் முகவரியும், கையெழுத்தும் எழுதி வாங்கப்பட்டு, நாற்காலிகளில் அமர்ந்தனர். இரண்டு மணி நேர நிகழ்ச்சி முடிந்த பின் உணவு உபசரிப்பு நடந்தது.

''ஏன்டி யாரோ வி.ஐ.பி.யை அறிமுகப்படுத்தறேன்னு சொன்னியே வந்திட்டாங்களா?''

''ம்.. வா போகலாம்!'' யூஸன் த்ரோ கப்பில் கோக்கை பருகியபடி நின்றிருந்த பிரபு செல்வாவை உசுப்புவதற்குள் அவர்களிருவரும் அருகில் வந்துவிட்டனர்.

''வெல் ஹி இஸ் மிஸ்டர் செல்வா. இவரோட ஆர்ட்டிக் கல்ஸை படிச்சிட்டுதான் நீ ஆஹோ ஓஹோன்னு பாராட்டுனே..''

''ஸார் இவ?''

''ஸந்தனா, சைக்காஸ்ட்ரிஸ்டா ப்ராக்டிஸ் பண்றாங்க. இண்டஸ்டிரியலிஸ்ட் கருணாகரனின் ஒரே மகள். அவரின்

பார்ட்னர் விமலின் வருங்கால மனைவி சரியா?'' செல்வா தலைசரித்து கேட்க,

ஒற்றை புருவத்தை வில்லாக்கி ''என்னைப்பற்றி..?''

''தெரியும் மேடம்.''

''எப்படி?''

''அவனுக்கு மோடி மஸ்தான் வித்தை தெரியும்'' பிரபு சொல்ல அவ்விடமே கலகலப்பானது.

கீதாவிற்கு அழைப்பு வர இவர்கள் வசதியாய் ஒரு இடம் பார்த்து அமர்ந்தார்கள்.

''கீதா யாரோ வி.ஐ.பி.யை அறிமுகப்படுத்தப் போறேன்னு'' சொல்லவும்,

''மேடம் அப்போ எங்களைப் பார்த்தா விஐபி மாதிரி தெரியலையா?'' - பிரபு.

''அச்சச்சோ.. ஸார்.. நான் அப்படி மீனிங் பண்ணலை.''

''ஜஸ்ட் எ ஃபன் ஸந்தனா. இப் யூ டோன்ட் மைன்ட். நான் உங்ககிட்டே பர்சனலா பேசணும்..''

''பேசலாமே. அதுக்கு முன்னாடி இதிலே ஒரு ஆட்டோ கிராப் போடுங்க.'' பளபளப்பான நோட்டு ஒன்றை நீட்டினாள் ஸந்தனா.

''ஆட்டோகிராப் போடும் அளவிற்கு நான் இன்னும் வளரலை ஸந்தனா.''

''இல்லே ஸார். வளர்ச்சிங்கிறது பார்வையைப் பொறுத்தது இல்லே. மனசைப் பொறுத்தது. நெருப்பை கக்குற



எரிமலையுடைய சீற்றமும், சமுதாய அழுக்குகளை களையற உங்க வார்த்தை சாட்டைகளும் கிரேட்..''

''ஒரு நல்ல மனிதரோட அறிமுகம் கிடைத்ததில் மகிழ்ச்சி!''

''ஸந்தனா கொஞ்சம் தனியா பேசணுமின்னு...''

''ஷ்யூர்...'' இருவரும் சற்று தொலைவில் நகர்ந்தார்கள்.

பிரபு அந்த கீதாவிடம் பேசியபடி இருக்க, ''சொல்லுங்க ஸார்..''

''ஸார் வேண்டாம். கால் மீ செல்வா! ஸந்தனா எனக்கு சுத்தி வளைச்சிப் பேசத் தெரியாது. நாங்க இந்த நிகழ்ச்சிக்கு வந்ததற்கு காரணமே உங்க அறிமுகம் கிடைக்குமின்னுதான். உங்க பர்சனல் விஷயத்தில் தலையிடுவதாய் நினைக்க வேண்டாம். தயவு செய்து விமலோட நடக்க உள்ள கல்யாணத்தை நிறுத்திடுங்க...''

ஸந்தனா எவ்வித அதிர்ச்சியையும் முகத்தில் காட்டாததைக் கண்ட நண்பர்கள் இருவரும் திகைப்பானார்கள்.

''செல்வா, இன்னைக்குத்தான் முதன் முதலா என்னைப் பார்க்கிறீங்க? அதுக்குள்ளே என் மேல எப்படி ஸார் உங்களுக்கு அக்கறை வந்தது. விமல் பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை. அவர் மேல வீண் பழி சுமத்துவதா நான் நினைக்கலாம் இல்லையா?''

''மேடம் ஒரு பெண்ணுடைய வாழ்க்கை கெடக் கூடாதுங்கிற நல்ல எண்ணத்திலேதான் நான் சொன்னேன். விமல் நல்லவன் இல்லை என்பதை ஆதாரப்பூர்வமா என்னால நிருபிக்க முடியும்..'' அவன் வார்த்தைகளில் நேர்மை இருப்பதை உணர்ந்தாள் ஸந்தனா.

''பொறுப்பான பதவியில் இருப்பதால் உங்க பேச்சை நான் நம்பறேன். என் மனசிலும் சில தயக்கங்கள் இருக்கு. நீங்க ஏதோ ஆதாரம் இருக்குன்னு சொன்னீங்களே! அது என்னன்னு காட்ட முடியுமா?''

''கண்டிப்பா ஸந்தனா.. சிரமம் பாராமல் இப்பவே எங்களோட வர இயலுமா?''

ஒரு முழு நிமிடம் யோசித்தவள் தலையசைக்க, அடுத்த அரை மணியில் நீரஜாவின் முன் நின்றனர்.

## 8

தன் அருகில் நின்றவர்களைக் கூட கவனியாமல் விரல்களை மடக்கி மடக்கி மூடிக் கொண்டிருந்தவளை காட்டி ''இவ பெயர் நீரஜா. என் தோழி. இவ இந்த நிலைமைக்கு வர்றதுக்கு காரணம் உங்க எதிர்கால கணவன் விமல்!''

''இவ மட்டுமில்ல விமலோட பசிக்கு இரையாகி தங்களுக்கு ஏற்பட்ட கொடுமையை வாய்விட்டு சொல்ல முடியாம நடைபிணமாய், ஜடமாய் வாழ்பவர்களும் உண்டு.''

''விமலும், நீரஜாவும் ஒரே கல்லூரியில் படிச்சவங்க. குள்ள நரின்னு தெரியாம உண்மையான காதலோட பழகினா நீரஜா. ஆனா தன்னுடைய தேவை தீர்ந்தபின், அந்த அன்பை கொச்சைப்படுத்தி விரட்டினான் விமல்.''

''முட்டாள்தனமா வாழ்க்கையை இழந்திட்டு தவிச்சவளை, விதியும் தண்டிச்சது. பொண்ணு கெட்டுப் போன கவலையில் மனசு வெறுத்துப் போய் அவளோட பெற்றோர் நீரஜாவின் கண் முன்னாலேயே எரிஞ்சு சாம்பலாயிட்டாங்க! காதலிச்ச ஒரே குற்றத்திற்காக இன்னைக்கு பெத்தவங்களையும், எதிர்காலத் தையும் இழந்து, தன்னையே யாருன்னு அடையாளம் தெரியாமல் இருக்கா.''

''பணமும், அந்தஸ்தும் பாதுகாப்பா இருந்து அவனுடைய குற்றங்களை மேலும் மேலும் வளர்த்துக்கிட்டு இருக்கு. இன்று நீரஜா, நாளைக்கு நீங்க.. ஸந்தனா நாலு தடவை சத்தமா சொன்னா பொய்யை நம்பிடறோம். ஆனா ஆயிரம் முறை அழுது புரண்டாலும் உண்மையை நம்பாத உலகத்தில்தானே நாம வாழறோம்.''

''இரத்தம் சதையுமா உங்க கண் முன்னாடி இருக்கிறாளே இவ சுயநினைவோடு இருந்தப்போ எழுதப்பட்ட டைரி இது. இந்த உயிரில்லாத வார்த்தைகளை படிச்ச பிறகாவது நம்புங்க ஸந்தனா.''

தன் முன்னால் நீட்டப்பட்ட டைரியை பெற்றுக் கொண்ட ஸந்தனா, ''விமல் இத்தனை கொடூர குணம் உடையவர்னா அவரைத் தண்டிக்கிற முதல் ஆள் நானாத்தான் இருப்பேன்..'' ஸந்தனா வெளியேறினாள்.

செல்வம் ஒரு பெருமூச்சோடு மேகலாவின் அறைக்குள் நுழைந்தான்.

''வாங்க தம்பி! நீரஜாவைப் பார்த்தீங்களா?''

''ம் பார்த்தேன் மேடம். நீங்க சொன்ன அந்த டாக்டர் எப்போ வர்றாராம்..''

''அவருக்கு ஏதோ கான்பிரன்ஸ் இருக்காம். அதற்குப் பிறகு வர்றதா சொல்லி இருக்கார்.''

''தம்பி நீ எழுதின கட்டுரையால நம்ம ஆஸ்பிட்டலுக்கு ஒரு லட்சம் ரூபா கலெக்ட் ஆகியிருக்கு.''

''சந்தோஷம் மேடம். நீரஜாவைப் பற்றி..''

''கவலையேப் படாதீங்க தம்பி. நல்லவங்களுக்கு எல்லாம் நல்லதாத்தான் நடக்கும்.''

''அப்போ நான் கிளம்பறேன் மேடம்'' என்று அந்தம்மாளிடம் விடைபெற்றுக் கொண்டு வந்தவனின் எதிரில் நின்றான் பிரபு.

''வாடா, ஆமா ஸந்தனாவும், நானும் கிளம்பும்போது, கீதாவோட போனே இப்போதான் வர்றே. என்னாச்சு?''

''அதையேண்டா மச்சான் கேட்குறே! நீயும் ஸந்தனாவும் பேசிகிட்டு இருந்தீங்க...''

''சரி.. அந்த கீதாவை கரெக்ட் பண்ணலாம்ன்னு பார்த்தேன். அவ கூட காபி ஷாப்பிற்கு கூட்டிட்டு போய் கிட்டத்தட்ட ஐம்பது ரூபாய்க்கு செலவு பண்ணா அவ திமிரு கிளம்பறப்போ, பிரபு உன்னை விட உன் பிரண்டு ஹேண்ட்ஸமா இருக்கிறாருங்கிறா.. எனக்கு வந்ததே கோபம்.''

செல்வா சிரித்தான். ''நீ திருந்தவே மாட்டேடா!''

''அதை விடு ஸந்தனா என்ன சொன்னா?''

''நியாயமா நடப்பேங்கிறா? பார்ப்போம். எனக்கென்னமோ இந்தக் கல்யாணத்திலே அவளுக்கு இஷ்டமில்லேன்னு நினைக்கிறேன்.''

''எதை வைச்சு சொல்றே?''

''கல்யாணத்தை நிறுத்திடுன்னு சொன்னப்போ அவ முகத்தில் எந்த உணர்வும் இல்லை. எனக்கு என்னவோ அவ ஏற்கனவே ஒரு முடிவோட இருக்கான்னு தோணுது.''

''சரி, நீரஜாவுடைய டைரியையும் படிச்சிட்டு அவ என்னதான் சொல்றான்னு பார்ப்போமே!''

கிட்டத்தட்ட ஸந்தனாவும் அதே குழப்பமான மனநிலையில்தான் இருந்தாள். சோமசுந்தரத்தின் துரோகம் ஒருபுறம் என்றாலும், விமலின் நடத்தை வேறு எதுவாகிலும் இந்த கல்யாணம் நடப்பது அத்தனை நல்லதாய் படலை. தனியே யோசித்து குழம்புவதை விட அப்பாவிடம் சொன்னால் என்ன? என்ற எண்ணத்தில் கீழிறங்கினாள்.

தாயும் தந்தையும் ஏதோ ஒரு விவாதத்தில் தீவிரமாய் மூழ்கி இருக்க, இவளும் எதிரில் அமர்ந்தாள். ''என்னப்பா! ஏதோ முக்கியமா பேசறா மாதிரி இருக்கு.''

''நாங்க வேற எதைப் பற்றிப் பேசப் போறோம். எல்லாம் உன் கல்யாண விஷயம் பற்றித்தான்! பத்திரிகை வந்திடிச்சி! யார் யாருக்கு நேர்ல தரணும், போஸ்ட்டில் அனுப்பணுமின்னு லிஸ்ட் எடுத்திட்டு இருக்கோம்!''

''சரி அதுக்கு நேரம் காலம் இல்லை, இப்பவே மணி 11 ஆகுது. லேட் நைட் விழிச்சு ஏன் உங்க தூக்கத்தைக் கெடுத்துக்கணும்!''

''அம்மாடி! எத்தனை பெரிய பணக்காரனா இருந்தாலும் பெண்ணைப் பெத்திட்டா கரை சேர்க்கும் வரை தூக்கத்தையெல்லாம் நினைச்சுப் பார்க்க முடியுமா?''

''அப்பா ப்ளீஸ்! இதெல்லாம் இன்சார்ஜ் எடுத்து செய்ய நிறைய ஏஜென்சீஸ் இப்போ இருக்கு.''

''இருக்கலாம். நீ எங்களுக்கு ஒரே குழந்தைடா! உனக்காக மெனக்கெடுவதிலும், கண்ணும் கருத்துமாய் செய்வதிலும் எனக்கென்ன கஷ்டம் வந்துவிடப் போகுது!''

''அப்பா சோமசுந்தரம் அங்கிளைப் பற்றி உங்க அபிப்ராயம் என்ன?''

பத்திரிகைகளை அடுக்கியபடியே, ''அவன் என் நண்பன். நல்லவன். சின்ன வயசிலேயே நாங்க இரண்டு பேரும் பிரண்ட்ஸ். ஒருவேளை சாப்பாட்டுக்குக் கூட நாங்க கஷ்டப்பட்டு இருக்கோம். சிங்கள் டீயும், ஒரு பன்னும் எங்க லஞ்ச் ஆக இருந்திருக்கு.''

''கொஞ்சம் கொஞ்சம் தொழில் கத்துகிட்டு துணிஞ்சு கடைசி முயற்சியா இறங்கி, இன்னைக்கு இத்தனை தூரம் வளர்ந்திருக் கேன்னா.. அதுக்கு எங்க இரண்டு பேருடைய உழைப்புதான் காரணம்.''

''அப்பா, நீங்க இரண்டு பேரும் பார்ட்னர்ஸ். அந்த ரீதியில் மெடிக்கல் ஃபேக்டரியோட கணக்கு வழக்குகளை கவனிச்சிக் கொள்வதில்லையேன்?''

''எங்கேம்மா, கார்மெண்ட்ஸ், ஜ்வல்லரி ஷாப்பின்னு இது சம்பந்தப்பட்ட வேலைகளைக் கவனிக்கவே நேரம் சரியா இருக்கு. இதிலே அங்கே எங்கே போக?''

''இருந்தாலும் தொழில் முறை பங்குதாரரா நீங்க ஏன் மாதத்திற்கு ஒருமுறையாவது போகக் கூடாது.''

கையிலிருந்த பத்திரிகைகளை மேசையில் வைத்துவிட்டு மகளிடம் திரும்பினார் கருணாகரன்.

''ஸந்தனா... சோமுவைப் பற்றி யாராவது உன்கிட்டே தப்பா சொன்னாங்களாம்மா?''

''அப்பா?''

''இல்லை.. நம்பிக்கைதான். வாழ்க்கை, நாளைய வரை ஏன் அடுத்த நொடி உயிரோட இருப்பேன்னு நம்பிதான் வாழ்க்கையை நகர்த்துறேன். சோமுவும் நானும் நல்ல அண்டர் ஸாண்டிங்கில் தான் இருக்கோம். நான் போகலைன்னாலும், 1ந் தேதி ஆச்சின்னா! அடுத்த நிமிடமே என் பங்கு பணம் வங்கியில் சேர்ந்திடும்!''

''நான் பணத்தை மட்டும் பேசலைப்பா!''

''புரியுது ஸந்தனா.. அப்படிப் பார்த்தா, கார்மெண்ட்ஸ், ஜுவெல்லரி ஷாப் விஷயத்தில் அவனும் தலையிடு வதில்லையே!''

''அப்பா இது ரிஸ்க் இல்லாத தொழில். ஆனா மெடிசின் ஃபேக்டரி அப்படி இல்லை. ஏதாவது கோளாறுன்னா பெரிய பிரச்சனையை இழுத்து விட்டுடும். நீங்க தலையிடுவதால் சில விஷயங்களை அங்கிளுக்கு கைட் பண்ணலாம் இல்லையா?''

'இத்தனை நாள் இல்லாம திடீர்னு போய் நின்னா, சோமு ஏதாவது தப்பா எடுத்திட்டான்னா! தவிரவும், இதுவரையில் வெறும் நண்பனா, தொழில் பங்குதாரரா மட்டும்தான் இருந்தான். இப்போ அவன் சம்பந்தி ஆகப் போறான்.

இதனால நாளைக்கு உனக்கு எதுவும் பிரச்சனை வரக் கூடாதேம்மா! நாம் நல்லதைத்தான் விதைக்கிறோம். நல்லது தான் நடக்கும். கவலைப்படாம போய் தூங்கு!'' தந்தை எழுந்து சென்றுவிட,

மகள் தாயின் மடியில் சரிந்தாள். ''என்னம்மா இது! அப்பா எத்தனை பேசினாலும், புரிஞ்சுக்கவே மாட்டேங்கிறார்?''

''தனாம்மா! அப்பாவோட பிடிவாதம் தான் உனக்குத் தெரியுமே! ஒரு விஷயத்திலே நம்பிக்கை வைச்சிட்டாருன்னா கடைசி வரை மாறவே மாட்டார். நீ மனசை போட்டுக் குழப்பிக்காதே!''

''அதில்லைம்மா..''

''இதோ பாருடா! சரியோ தப்போ நீ அந்த வீட்டுலேதான் போய் வாழப் போறே! தேவையில்லாம சின்ன விரிசல் விழுந்துட்டா பின்னாடி அதைப் போக்குறது சுலபமில்லை.''

''இடைவெளியோட உன் வாழ்வு தொடங்கக் கூடாதும்மா. நீ படிச்சவ, புரிஞ்சு நடந்துக்கோ. ஏற்கனவே அப்பாவுக்கும் உடம்புக்கு முடியலை! அவருடைய பெரிய கனவே உன் கல்யாணம்தான். எதையாவது பேசி அதை கலைக்காதேம்மா.'' மகளின் தலையை வருடி விட்டு தாயும் சென்று விட,

மேசையின் மேல் குவிக்கப்பட்டு இருந்த திருமணப் பத்திரிகைகளை வெறித்து நோக்கினாள்.

## 9

**வெ**கு லாவகமாய் பெப்-யை அந்த காம்ப்ளக்ஸின் பேஸ்மெண்டில் பார்க் செய்து விட்டு, அணிந்திருந்த கூலிங் கிளாஸை பனியனுக்குள் சொருகினாள் ஸந்தனா.

குளிரூட்டப்பட்ட அறைக் கதவை திறக்க வரவேற்புப் பெண்ணின் ஐஸ்கிரீம் புன்னகையை ஏற்று, அமர்ந்தாள்.

''யெஸ் மேம்...''

''ப்ளீச்சிங்..!''

''வில் யூ ப்ளீஸ் வெயிட் டென் மினிட்ஸ்...''

''ஷ்யூர்..''

''அங்கே போடப்பட்டு இருந்த சோபாவில் அமர்ந்து ஃபேமினா புரட்டினாள். அது ஒரு நவீனமான பியூட்டி பார்லர். சுவரில் ஐஸ்வர்யாவின் புலோ - அப்கள், குழந்தைகளின் படம், உரிமையாளினி ஸந்தனாவிடம் சென்றாள்.

''ஹாய் ஸந்து..''

''ஹாய் வர்ஷினி... பிஸினஸ் நல்லாயிருக்கு!''

''அழகுக்கு ஆசைப்படும் வரையில் என் பொழைப்பு நலமே!'' பேசிய வர்ஷினி தன் பருத்த உடலை நீல நிற குர்தாவினுள் நுழைத்திருந்தாள். மைதா மாவிற்கு கைகால் ஒட்ட வைத்ததைப் போல் வெண்மையாய் இருந்தாள். பேசியபடியே நடந்தார்கள்.

''அப்புறம் கல்யாணம் எப்போ?''

''அடுத்த மாதம்..''

''உன் ஆளு ரொம்ப ஹேன்ட்சம்டி!''

அந்தப் பேச்சில் லயிப்பில்லாதவள் போல் வேறுபுறம் பார்வையை ஓட்டினாள் ஸந்தனா. அதற்குள் வர்ஷினியும் யாரையோ வரவேற்க நகர்ந்தாள்.

அழகு எத்தனை பெரிய வரம்! அதை காப்பாற்றிக் கொள்ளத்தான் பெண்கள் எத்தனை பிரயத்தனப்படுகிறார்கள். எத்தனை செலவு! அங்கே இருந்த ஒவ்வொரு நாற்காலியும் பெண்கள் சிகை, புருவம், என்று திருத்தியபடி இருந்தார்கள்.

நகங்களை சீராக்குதல், வெண்மையான முகப் பூச்சுடன் கண்களை மூடி இருத்தல், கால்களை அழகுபடுத்திட என யூனிபார்ம் அணிந்த அத்தனை பெண்களுமே பிஸியாய் இயங்கியபடி இருக்க, ஸந்தனாவின் பார்வை ஏதேச்சையாய் கண்ணாடித் தடுப்பின் வலது பக்கம் சென்றது.

அங்கே மெடிசின் ஃபேக்டரி சூப்பர்வைசர் மனோஜ் யாரிடமோ பேசியபடி, இருப்பது பட ஸந்தனா உடனே வெளியேறினாள். விவாதம் போல் இருவருக்கும் நடைபெற்ற வாதத்தில் சிலது மட்டும் காதில் விழுந்தது.

''என்ன பிரச்சனை மனோஜ்?''

''நத்திங் மேடம்!''

''என்ன ஸாரு மேடம் கேக்குறாங்க இல்லே? இந்தாளு அவங்க தங்கச்சி வளைகாப்புக்குன்னு 75,000 வாங்கினாரு. ஆனா வருஷம் ஒண்ணாப் போகுது இன்னமும் தரலை..''

ஸந்தனா சற்றும் யோசியாமல் தன் ஹேண்ட் பேகைத் திறந்து, செக் புக்கில் பணத்தை எழுதி அந்தாளிடம் தந்தாள்.

''வேண்டாம் மேடம் ப்ளீஸ்..''

''விடுங்க ஸார். நீதான் தரலை. மேடமாவது தரும்போது ஏன் தடுக்கறீங்க?'' அவன் பணம் கிடைத்த திருப்தியில் பறந்தான்.

''ஏன் மேடம்?''

''பரவாயில்லை! நீங்களும் என் ஸ்டாப்தானே! உங்களுக்கு ஒரு கஷ்டமின்னா எப்படி தடுக்காம இருக்க முடியும்.''

''மேடம்! இருந்தாலும், தொகை அதிகம், தங்கச்சியோட கல்யாணத்திற்கு லோன் எடுத்ததே இன்னமும் அடையலே. அதுக்குள்ளே வளைகாப்பு பிரசவமின்னு..!''

''நல்ல பொறுப்பான மனுஷன்தான் நீங்க! தேவைப் படுவதைக் கொடுக்காமல் அலைக்கழிப்பதுதான் கடவுளின் பொழுதுபோக்கு. மனோஜ் எனக்கு நீ ஒரு உதவி செய்யணும்?''

''சொல்லுங்க மேடம்.''

''மனோஜ். அப்பாவுடைய தொழில் விவகாரங்களில் இத்தனை நாள் நான் தலையிட்டதே இல்லை. ஆனா இப்போ அவசியம் வந்திருக்கு. முன்னாடி நீங்க சொன்ன மாதிரி மெடிக்கல் ஃபேக்டரியில் நடக்கிற சில மர்மமான நடவடிக்கைகளை எல்லாம் எனக்குத் தெரியப்படுத்தணும்.''

''மேடம்..''

''தயங்காதீங்க மனோஜ். இது உளவறிதல் இல்லை. சட்டத்திற்குப் புறம்பான காரியங்களை சமூகத்தின் பார்வைக்கு கொண்டு வர வேண்டியது நம்ம கடமை. இதனால உங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாம நான் பார்த்துக்கிறேன்.''

அவன் தலையசைத்தான். ''உங்களுக்கு நான் கடமைப்பட்டு இருக்கேன் மேடம்'' விடைபெற்றான் மனோஜ். சீக்கிரமே சோமசுந்தரத்தின் சாம்ராஜ்யம் ஆட்டம் காணப் போவதை உணர்ந்தாள்.

ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எதிர்வினை உண்டு. தீமைகள் எத்தனை முறை கோலோச்சினாலும், நன்மையே மகுடம் சூடும் என்பதே நியதி!

ஸந்தனா நன்றாக யோசித்து இறுதியாய் உறுதியாய் ஒரு முடிவிற்கு வந்து விட்டாள். இனி அதைச் செயலாக்கிடும் முறையை அமலாக்கிட வேண்டும், பிரபுவிற்கும் செல்வா விற்கும் அழைப்பு விடுத்து மூவரும் ஒரு பொது இடத்தில் சந்திப்பதாய் முடிவும் செய்யப்பட்டது.

ரெஸ்டாரண்ட் ஒன்றில் முக்கோண வடிவ டேபிளை ஆக்ரமித்து இருந்தார்கள் மூவரும். ''நான் கூப்பிட்டதை மதித்து வந்ததற்கு ரொம்ப நன்றி!''

''அழகான பொண்ணுங்க திட்டுனாலே மணிக் கணக்கா ஆர்வமா கேட்போம். நீங்க சாப்பாடெல்லாம் வாங்கி தர்றீங்க. மிஸ் பண்ணுவோமா!''

பிரபுவின் கிண்டலில் சிரித்தாள் ஸந்தனா. செல்வாவிற்கு அவள் என்ன மனநிலையில் இருக்கிறாள் என்றே புரிய வில்லை.



மஞ்சள் நிற மென்மையான ஒளி, காதுகளை உறுத்தாத இசை, கலர் கலராய் நீரைத் தெளிக்கும் பவுண்டேஷனை யெல்லாம் நோட்டமிட்டபடியே, மெனுகார்டை எடுத்து ஆர்டர் பண்ணினாள்.

''மூன்று சிக்கன் சூப், நான்- பனீர் பட்டர் மசாலா, சிக்கன் ரைஸ், கோபி மன்சூரியன், வேற ஏதாவது வேணுமா செல்வா?''

''போதும். இதுவே அதிகம்.''

''ரொம்ப தேங்க்ஸ் ஸந்தனா..!''

''எதுக்கு?''

''இல்லே! பார்க்க ஆள் நூடுல்ஸ் மாதிரி இருக்கீங்களே வெறும் வெஜ்தான் ஆர்டர் பண்ணுவீங்கன்னு நினைச்சேன். பரவாயில்லை வெயிட்டா ஆர்டர் பண்ணி இருக்கீங்க!''

''டேய்!''

''பிரபுவை ஏன் அடக்குறீங்க? செல்வா... இன்பேக்ட் மனசிலே நினைக்கிறதை எல்லோராலும் பேச முடியறதில்லே.''

அதற்குள் பேரர் வந்து ஆர்டர் செய்தவைகளை வைக்க மௌனமாய் உணவருந்தினார்கள். ஒவ்வொருத்தர் மனதிலும் தேவையில்லாமல் குழப்பங்களும், கேள்விகளும் எழுந்தன.

''ஸந்தனா நாம பேசிய விஷயத்தைப் பற்றி என்ன முடிவு செய்திருக்கீங்க?''

''அதைப்பற்றிப் பேசத்தானே உங்களை இங்கே வரச் சொன்னேன்.'' தன் ஹேண்ட் பேகைத் திறந்து, திருமணப் பத்திரிகையை அவர்களிடம் நீட்டினாள்.

செல்வா அதை வாங்காமல் ''அப்போ நாங்க சொன்ன எதையும் நீங்க நம்பலே..''

''தப்பு செல்வா! நம்பினதாலேதான் இதுவரையில் வந்திருக்கேன்!''

''புரியலை!''

''கல்யாணத்தை நிறுத்த நான் என்ன காரணத்தை சொல்லட்டும்?''

''என்ன பேசறீங்க ஸந்தனா? நீரஜாவுடைய டைரி உங்க கிட்டே இருக்கு. அதைக் காட்டியே கல்யாணத்தை நிறுத்தலாமே!''

''அப்படி செய்தால், விமல்ங்கிற கிளையை மட்டும்தான் வெட்ட முடியுமே தவிர, சோமசுந்தரங்கிற ஆணிவரை அசைக்க முடியாதே?''

''அப்படீன்னா?''

''செல்வா, சோமசுந்தரம் நடத்திற மெடிக்கல் ஃபேக்டரியில் நிழல் மறைவான காரியங்கள் நடக்கிறதா தகவல் கிடைச்சிருக்கு. அதையும் ஆதாரப்பூர்வமா நிரூபிக்கணும். அதுக்கு நெருங்கின உறவா நான் அங்கே போயே ஆகணும்.''

''ஆனா ஸந்தனா உங்கப்பாவும் தொழிலில் ஒரு பங்குதாரர்தானே அவர்கிட்டே பேசலாமே!''

''அதையும் நான் முயற்சி செய்து பார்த்திட்டேன். அப்பாவுக்கு அங்கிள் மேல நல்ல நம்பிக்கை உண்டு. இருக்கிற இரண்டு பிஸினஸைக் கவனிக்கவே நேரம்



போதாததால மெடிக்கல் ஃபேக்டரி பக்கம் போறதே இல்லை. தவிரவும் மாதா மாதம் வரவேண்டிய பங்கும் சரியா வரும்.''

''சரி ஒரு மாதத்திற்கு ஒருமுறை ஆவது கணக்கு வழக்குகளை மட்டும் பார்க்கலாமே!''

''சந்தேகமின்னு வந்தாதானே கணக்கு பார்க்கத் தோணும்.. நானும் ஜாடை மாடையா அப்பாகிட்டே பேசினேன். அவர் காதிலேயே போட்டுக்கலை.''

''இதனால உங்க லைப்பே பாதிக்குமே!''

''ஒண்ணை சாதிக்கணும்னா இன்னொண்ணை இழந்து தானே ஆகணும். அப்பாவோட உடம்புக்கு ஏற்கனவே முடியலை. என் கல்யாணம் அவருடைய கனவு. அது கலைவது பெரிய பாதிப்புன்னா? அங்கிளின் திரைமறைவு வாழ்வைப் பற்றி தெரிஞ்சா அவ்வளோதான்... அதை அவரால தாங்கவே முடியாது.''

''அப்போ இதுக்கு என்னதான் வழி?''

''கல்யாணங்கிற பேர்ல அவங்க கண்ணைக் கட்டி சில ஆதாரங்களைத் திரட்டி அவங்க சாம்ராஜ்யத்தையே அழிக்கப் போறேன். அதுக்கு உங்க இரண்டு பேருடைய உதவியும் தேவை.''

''நீங்க ஏதோ வில்லங்கமா யோசிக்கிற மாதிரி தெரியுது!''

''செல்வா முதல்ல விமலைக் கொஞ்சம் கொஞ்சமா குழப்பணும். நீரஜா மாதிரி டெலிபோன்ல பேசி மிரட்டி அலைய விடணும். இந்தக் கல்யாணத்தின் நாள் நெருங்கு

வதற்குள் சோமசுந்தரம் பத்தின டாக்குமென்ட்ஸ் கிடைக்கு தான்னு பார்க்கணும். அப்போசான் அப்பாவை நம்ப வைக்க முடியும்.''

''எங்க உதவி உங்களுக்கு எப்பவும் உண்டு'' இருவரும் கோரஸாய் கூறிட, சாப்பிட்ட உணவிற்கு பணத்தை தந்துவிட்டு டிப்ஸூம் தந்து கிளம்பினார்கள் மூவரும்!

நண்பர்கள் இருவரையும், அலுவலகத்தில் இறக்கி விட்டுவிட்டு, ''அடுத்த முறை நம் சந்திப்பு கொஞ்சம் ரகசியமா இருக்கணும்'' என்று விடைபெற்றாள் ஸந்தனா.

''பிரபு, ஸந்தனா வித்தியாசமான பொண்ணா தெரியறா இல்லே!'' அலுவலகத்தில் தன் அருகில் நின்ற நண்பனிடம் கேட்டான் செல்வா.

''எப்படி! எனக்கு தெரிஞ்சு எல்லோருக்கும் போல அவளுக்கும் இரண்டு கண்ணும் ஒரு வாய் அப்படின்னு சரியாத்தானே இருந்தது.''

''டேய்! நான் அவளோட அணுகுமுறையைப் பற்றிச் சொன்னேன்.''

''ரொம்பப் புகழாதே. ஏமாந்தா நம்மளையும் போட்டுத் தள்ளிடுவா போலயிருக்கு!''

''ச்சீ.. உண்மையை எடுத்துச் சொன்னதும் நமக்கு உதவிதானேடா செய்யுறா! இந்த விஷயத்திலே நாமளே விலகினாலும் அவ பின் வாங்கமாட்டா!''

''அப்போ கிளிப்பு வாங்குவாளா?''

''டேய் முதல்ல இப்படி கடிக்கறதை நிறுத்திட்டு கொஞ்சம் ஆபீஸ் வேலையும் பாரு.''

''பார்த்துத்தானே ஆகணும் தலை எழுத்து!'' என அலுத்துக் கொண்டே தன் இருப்பிடம் சென்றான் பிரபு.

## 10

கடலைமாவைப் பூசி விட்டு ஊற வைத்த முகத்தை குளிர்ந்த நீரில் கழுவி டவலால் ஒற்றிய பின், கைபேசி அழைக்க 'டிஸ்பிளேயில்' ஏதோ ஒரு புது எண் தோன்றிட, யோசனை யோடு ''ஹலோ'' என்றாள்.

''மேடம் நான் ஃபேக்டரியில் இருந்து மனோஜ் பேசறேன்!''

''சொல்லுங்க நான் ஸந்தனாதான்!''

''மேடம் நான் திரும்பத் திரும்ப சொல்றேன்னு தவறா நினைக்காதீங்க. இங்கே நிலைமை ரொம்பவும் எல்லை மீறிப் போயிடுச்சு.''

''புரியும்படி சொல்லுங்க.''

''மேடம் நம்ம ஃபேக்டரிக்கு 18 கி.மீ. தள்ளி சோமசுந்தரம் ஸார் இரண்டு வருஷத்திற்கு முன்பு ஒரு குடோன் ஒன்று வாங்கி இருந்தார். அங்கே ஏதோ அன்டர்கிரவுண்ட் வேலைகள் நடப்பதாய் பேச்சு வந்தது.''

''நானும் சந்தேகப்பட்டு நேற்று மாலை யாரும் அறியா வண்ணம் போய்ப் பார்த்தேன். சொன்னா நம்ப மாட்டீங்க.

அங்கே போதை மருந்துகள் ஸ்டாக் இருக்கு. அப்படின்னா, நம்ம பேக்டரியில் தயாரிப்பில் உள்ள மாத்திரைகளில் இந்த போதை வஸ்துவும் தயாரிக்கணும் இல்லையா?''

''இஸிட்..''

''மேடம் அங்கே உள்ளதையெல்லாம் போட்டோ எடுத்திட்டேன். மேற்கொண்டு சாம்பிளா இரண்டு மூணு பீஸ் எடுத்தும் வைத்திருக்கேன். மேற்கொண்டு என்ன செய்யற துன்னு தெரியலை. அதனால்தான் உங்களுக்குப் போன் பண்ணினேன்.''

சில விநாடிகள் மௌனித்த ஸந்தனா, ''மனோஜ் நீங்க மாலை 6 மணிக்கு நான் சொல்லும் இடத்திற்கு வந்திடுங்க. நான் அங்கே வச்சு என்ன செய்யலான்னு சொல்றேன்.''

''எஸ் மேடம்..'' லைனை கட் பண்ணியவள் உடனே செல்வாவின் எண்ணிற்கு பேசினாள். ''செல்வா நான் ஸந்தனா..''

''சொல்லுங்க!''

''செல்வா ஒரு சின்ன க்ளூ கிடைச்சிருக்கு. உங்களை மீட் பண்ண முடியுமா?''

''எப்போ? எங்கே?''

''ஈவ்னிங் உங்க ரூமில்!''

''என் ரூமிலா?''

''எஸ். நம்மோட சந்திப்பு கொஞ்சம் ரகசியமானதா இருந்தா நல்லது. ஏன்னா விஷயம் அந்த மாதிரி!''

''வெல். ஓகே ஸந்தனா அட்ரஸ் நோட் பண்ணிக்கோங்க.. முருகேசன் மேன்சன், தி.நகர். பக்கத்தில் ஒரு தனி வீடு வாங்க. நான் வெயிட் பண்றேன்'' போனை வைத்தவனை பிரபுவிடம் விளக்கம் சொல்லிவிட்டு கிளம்பினான்.

''விமல்..!''

''என்ன டாடி?''

''ஏன்டா, இத்தனை நாள்தான் பொறுப்பில்லாம ஊரைச் சுத்தினே. இனிமே கல்யாணம் ஆகப் போகுது. ஆபீஸிற்கு வந்து வேலையைக் கவனி.''

''நோ டாடி.. இன்னும் கொஞ்ச நாள் நான் ப்ரீயா இருந்திடறேன்.''

''விமல் ஸந்தனா ரொம்பவும் கிளவர். கருணாகரனுக்கு நம்ம பேரில் நல்ல அபிப்ராயம் உண்டு. குறைஞ்சது கல்யாணம் வரையில் ஆவது அதைக் கெடுக்காம இருக்கிறது உத்தமம்.''

''பாரினில் படிச்சவன்னுதான் பேரு. ஆனா அவ ரொம்பவும் கர்நாடிக்.''

''டேய்! பொண்ணுங்க எல்லாம் அப்படித்தான். மார்டன் பெண்கள் எல்லாம் உன் பிரண்ட்டா டிரீட் பண்ணிக்கோ. ஸந்தனா ஒரு தங்கச் சுரங்கம். ஏடாகூடமா நடந்து அவளை மிஸ் பண்ணிடாதே.''

தந்தையின் எச்சரிக்கையில் தோளைக் குலுக்கியவன், ''இப்போ நான் என் செய்யணும்?''

''கல்யாண நாள் நெருங்குது! ஸந்தனாவிற்கு புடவை நகைகள் எல்லாம் நம்ம சார்பில் வாங்கணும். உங்கம்மா

இருந்தா அவ செய்வா! இப்போ நம்மதானே செய்யணும். போ வீட்டுக்குப் போய் அவளைக் கூட்டிட்டுப் போடா..''

விமல் ஒருவிநாடி யோசித்தவன் ஸந்தனாவிடம் போனில் கேட்டான். வரமாட்டேன் என்று சொல்லுவாள். நேரிலேயே சென்று கூப்பிடலாம். முடிவு செய்தவனின் கிரெடிட் கார்டை பர்சினுள் திணித்து விட்டு காரைக் கிளப்பினான் விமல்.

''ஹாய் டியர்!'' சப்பாத்தியை குருமாவில் குளிப்பாட்டி வாய்க்கு கொண்டு சென்றவள் இவனைக் கண்டவுடன் முகம் சுளித்தபடி சிரித்தாள்.

''சாப்பிடறியா, விமல்?''

''வேண்டாம்.. சாப்பிட்டேன்.. அங்கிள் இல்லையா?''

''ஆபீஸ் கிளம்பறார்..''

''கண்ணம்மா, இரண்டு ஜூஸ் கொண்டு வாங்க.''

''மாம்பழச் சாற்றை வாங்கிப் பருகும் சமயம் கருணாகரன் இறங்கி ''வெல்கம் மை பாய்.. என்ன இந்தப் பக்கம் காத்தடிக்குது.''

''அங்கிள் கல்யாணப் புடவை, நகை வாங்கனும். அப்பா சொன்னார். அதுக்காக ஸந்தனாவை கூட்டிட்டு போகலான்னு வந்தேன்.''

''வெரிகுட், என் பையன் விளையாட்டுத்தனமாய் இருக்கான்னு சொல்றான் உன் அப்பன். ஆனா நீ இத்தனை பொறுப்பா இருக்கியே! ஸந்தனா நீ தம்பி கூட போயிட்டு வாம்மா.. நான் ஆபீஸ் கிளம்பறேன்.''

அப்பா இப்படி இவனிடம் மாட்டி விட்டு போயிட்டாரே. சரி போட்ட நாடகம் நல்லபடியாய் நடக்க வேண்டுமே என்று, சகிப்போடு சல்வார் துப்பட்டாவை சரி செய்தபடி கிளம்பினாள்.

காரில் கிளம்பிய உடனே, ''குமரன் போகவா, நல்லி போகவா ஸந்தனா!''

''எங்கேயாவது போகலாம். கலெக்ஷன்ஸ் எங்கே நல்லாயிருக்குமின்னு பாரு.''

சென்னை சில்க்ஸ் வாசலில் நிறுத்தி வண்டியைப் பார்க் பண்ணிவிட்டு, ஸந்தனாவின் கையைப் பற்றியபடி உள்ளே நுழைந்தான்.

''மே ஐ ஹெல்ப் யூ..'' என்ற கார்டை பாக்கெட்டில் தாங்கிய வெள்ளை சட்டைக்காரர் ஒருவர் பணிவுடன் கேட்க, 'சில்க் ஸாரிஸ்..'

''தேர்ட் ப்ளோர் சார்..'' என்றார்.

லிப்டின் கதவைத் திறந்து உள்ளே நுழைய மூன்றாவது மாடியின் தளத்தில் துப்பியது இருவரையும்!

ஆகாய வண்ணத்தில் ஆரஞ்சு நிற பூக்கள் வேலைப்பாடுகள் கொண்ட வெண்மை புறாக்களை வரிசையாய் ஒட்ட வைத்தாற் போன்ற பார்டர் அட்டகாசமாய் இருந்தது. விலை 20 ஆயிரத்தை தொட்டது.

''இன்னொன்று எடுத்துக்கோ ஸந்தனா.''

''முகூர்த்த புடவை போதுமே!''

''ப்ளீஸ்..' அவன் மேற்கொண்டு பேச முனைவதற்குள் ரீமிக்ஸ் பாடல் ஒன்றை பாடியபடி கதறியது செல். ஒரு நிமிடம் டியர் நீ செலக்ட் பண்ணு.''

''ஹலோ..''

விமல் காதை தழுவிய பெண் குரலின் இனிமையில் ஸந்தனாவிடம் இருந்து சற்று தள்ளியே வந்தான்.

''யாரு..?''

''விமல்தானே..''

''யெஸ். நீங்க?''

''இத்தனை சீக்கிரமா என் குரலை மறந்திட்டியே டியர்.. அத்தனை மறதியா?''

''ஹலோ மிஸ்.. முதல்ல நீங்க யாருன்னு?''

''நீரஜா.. உன்னோட ஸ்வீட் லவ்வர்.''

''நீயா..?''

''நானேதான். என்ன விமல் வேர்க்குதா..? பக்கத்திலே வருங்கால மனைவி இருக்காளோ... சும்மா சொல்லக் கூடாது நல்ல மேட்ச்தான்.''

''நீ.. நீ.. எங்கே இங்கே?''

''உன் பக்கத்திலேதான் இருக்கேன். நானெல்லாம் உன் கண்ணுக்குத் தெரிவேனா?''

''உனக்கு என்ன வேண்டும் இப்போது?'' எரிச்சலோடு கேட்க,

''நீதான் வேண்டும்.''

''நீரஜா..''

''கத்தாதே. உன் வுட்பீ உன்னைத் தேடுறா பாரு. போ அவளையும் ஏமாத்து நான் எங்கேப் போகப் போறேன். அப்புறமா பேசலாம்..' ஏளனத்துடன் லைனை கட் செய்யவும், விமல் குழப்பமடைந்தான்.

யாரிது உண்மையிலே இவள்தானா? இல்லை வேறு யாராவது அவள் பெயரில் குழப்புகிறார்களா? யோசனை யோடு டிஸ்பிளேயில் எண்ணைப் பார்த்தான். ரெஸ்டக்டர் நெம்பர் என்று வந்தது. நீரஜாவைப் பற்றி அவன் விசாரித்ததில் அவள் மெண்டல் ஹோமில் இருப்பதாய் நண்பர்கள் சொன்னார்களே..

இந்த இரண்டு வருடமாய் அவளைப் பற்றி எந்த செய்தியும் இல்லாததால் அதை எண்ணிக் கூடப் பார்க்கவில்லை. அதுவும் சந்தனச் சிலையென சகல வசதியோடு பெண் கிடைக்கும்போது, பழைய காதலியைப் பற்றி அவனுக்கு எப்படி நினைவிற்கு வரும். இத்தனை நாள் இல்லாமல் இப்போ போன் பேசுகிறாள். ஒருவேளை கல்யாணத்தில் வந்து கலாட்டா பண்ணுவாளோ? பிரமை பிடித்தவனைப் போல் நின்றிருந்தவனை உலுக்கினாள் ஸந்தனா. ''என்ன விமல், பேயறைஞ்ச மாதிரி நிக்குறீங்க?''

''நந்திங் டியர்.. நீ செலக்ட் பண்ணிட்டியா?''

''ம்..! இங்கே வா..'' வெளிறிய ஆரஞ்ச் வண்ணத்தில் புல்வெளி போன்ற பச்சைப் பார்டரில் நீல நிற மயில்கள் நிற்பதைப் போல் அட்டகாசமாய் இருந்தது.

''பைன்!'' விமல் இரண்டு புடவைகளுக்கும் பணம் தந்துவிட்டு கீழிறங்கினான்.

''விமல் ஏன் ரொம்ப டல்லா இருக்கீங்க.. வரும்போது இருந்த உற்சாகம் இப்போ இல்லையே ஏன்? அப்படி யாரு போன் பண்ணது ஏதாவது பிரச்சனையா?'' அக்கறையாய் கேட்பது போல் கேட்டாலும், விமலிற்கு ஏதோ நெருடத்தான் செய்தது.

''என் பிரண்ட் ஒருத்தனுக்கு உடம்புக்கு முடியாம ஹாஸ்பிட்டலில் இருக்கிறானாம். அதான்..''

''அடக் கடவுளே, வா விமல் நாம போய் பார்த்திட்டு வரலாம்.''

''நோ.. நோ. வேண்டாம்.. ஸந்தனா. உன்னோடு முதன் முதலா போற இடம் இதுவா இருக்கவே கூடாது. ஒண்ணு செய். நீ இப்போ வீட்டுக்குப் போ.. நாம இன்னொரு நாள் வருவோம்.''

''என்ன விமல், நான் வரலைன்னு கோபப்படறே. இப்போ நான் வந்திருக்கிறேன். நீ போகலான்னு சொல்றீயே! அட்லீஸ்ட் லஞ்ச்சையாவது முடிச்சிட்டு போகலாமே!''

''வேண்டாம் டியர்! ப்ளீஸ் இப்போ நீ வா. உன்னை வீட்டில் விட்டுட்டு நான் கிளம்பறேன்!''

அதற்கு மேல் மேற்கொண்டு ஏதும் பேசாமல் தொங்கிய அவன் முகத்தை ரசித்தபடியே காரினுள் ஏறினாள். அவளை வீட்டில் இறக்கி விட்டு ஏறத்தாழ வேகமாய் கிளம்பினான் விமல்.



உதடுகளில் ஏளனமான புன்னகையோடு காரில் ஏறி செல்வாவின் இருப்பிடம் நோக்கி விரைந்தாள் ஸந்தனா.

''வாங்க மிஸ்.. ஸந்தனா..'' வரவேற்ற பிரபு பெர்மடாஸும் கைவைத்த பனியனுமாய் காட்சியளித்தான்.

''செல்வா இல்லையா?''

''இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்திடுவான். நாளை ஞாயிறு இல்லையா? அந்தந்த பிராஞ்சிற்கு டெலிவர் பண்ண வேண்டிய பத்திரிகைகளை பண்டல் பண்ணனும். வேலை நடக்கிறது. வந்திடுவான்.. உட்காருங்க.''

அவன் காட்டிய பிரம்பு நாற்காலியில் அமர்ந்தவள், பார்வையை சுழற்றினாள்.

பேச்சிலர்ஸ் ரூம் கொஞ்சம் அப்படியிப்படி இருக்குமென்று சொல்லுவாங்க. இங்கே இத்தனை நீட்டா இருக்க. ஜன்னலில் கட்டம் போட்ட திரைச் சீலைகள், நாளிதழ்கள், மேகஸின்ஸ் எல்லாம் அலமாரி ஒன்றில் வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தது.

டீபாயின் மேல் சிகப்பு நிற போன் அதனடியில் சின்ன குறிப்புப் புத்தகம். உட்புறம் கட்டியிருந்த கொடியில், லுங்கி டவல் என்று அத்தனையும் அழகாய் ஒதுக்கப்பட்டு இருந்தது.

''என்ன ஸந்தனா, இந்த வீட்லே ஏதாவது குண்டு வைக்கப் போகிறீர்களா? இப்படி பார்வையால் அளக்கிறீர்களே?''

''இல்லே பிரபு. இந்த வீடு இத்தனை சுத்தமாய் இருக்குதே என்றுதான்.''

''டோன்ட் பீல் நான் வேணுமானால் எல்லாவற்றையும் கலைத்து விடட்டுமா?''

''ம...! கிண்டலா?''

''சரி முதன் முதலா எங்க இருப்பிடம் வந்து இருக்கிறீர்கள்? என்ன சாப்பிடுகிறீர்கள். ஹாட் ஆர் கோல்டு?''

''நானே சூடான விஷயத்தோடுதானே வந்திருக்கிறேன். அதனால் குளிர்ச்சியாகவே சாப்பிடுவோம்.''

''ஏன் விமலிடம் போனில் பேசின விஷயம் அதற்குள் தங்கள் காதிற்கு வந்து விட்டதா?''

''இன்பேக்ட் அந்த போன் வரும் சமயம் நானும் விமல் பக்கத்தில்தான் இருந்தேன். கல்யாண புடவை எடுக்கப் போயிருந்தோம். அத்தனை நேரம் கலகலப்பாய் இருந்தவன், போனில் பேசிய பிறகு சுத்தமாய் ஆப் ஆயிட்டான். யார் பிரபு பேசியது?''

''எனக்கு ரொம்பவும் வேண்டிய ஒரு ஆள், மிமிக்ரி நன்றாய் செய்வார். நான் பக்கத்து மேன்சனில் தங்கியிருந்தபோது ரூம்மெட்..''

''அப்படின்னா அவருக்கு?''

''எதுவும் தெரியாது? எங்கள் நண்பன் ஒருவனைக் கலாட்டா செய்கிறோம். இதுவும் ஒரு விளையாட்டு என்று சொல்லி யிருக்கிறேன்.''

''பார்த்து பிரபு! இத்தனை நாள் விமல் ஆட்டத்தில் இல்லை. இந்த போனிற்குப் பிறகு அவன் உஷாராயிருப்பான். எச்சரிக்கை.''



''சரி அடுத்த ஸ்டெப் என்ன?''

''இரண்டு நாள் விட்டு மறுபடியும் அவனுக்கு போன் பண்ணி என்னிடம் சொல்லப் போவதாய் சொல்லி மிரட்டுங்க. இப்போதைக்கு அதுவே போதும்.''

அதே நேரம் செல்வாவும் மனோஜும் உள்ளே நுழைந்தனர்.

''குட் ஈவ்னிங் மேடம்.''

''வாங்க மனோஜ் உங்க இரண்டு பேரையும் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீங்க இரண்டு பேரும் வரும்போது...!''

''யாரும் பார்க்கலை. பஸ் ஸ்டாண்டில் இருந்துதான் கூட்டி வந்தேன்.''

''இவர்?''

''மனோஜ்..'' - பிரபு.

''எங்க மெடிக்கல் ஃபேக்டரியில் சூப்பர்வைசர்.''

அந்த மனோஜ் பத்து நிமிடங்கள் எடுத்துக் கொண்டு தான் சேகரித்த விவரங்களைப் பற்றிக் கூறினான்.

''சோமசுந்தரம் இத்தனை மோசமான ஆளா?''

''அப்பாவைப் போலத்தான் மகனும் வந்திருக்கிறான்.''

''கரெக்ட். இப்போசொல்லுங்க செல்வா என்ன செய்யலாம்? முதல்ல இந்த போதை மருந்து விஷயத்தை தடைசெய்யணும்.''

''ஏன் மனோஜ்..! பெரிய மனுஷங்க இந்த மாதிரி வில்லங்கமான காரியத்தில் ஈடுபடும் போது..! நேரடியா

''இதுக்கெல்லாம் நீங்கதான் காரணம் செல்வா. உங்க அறிமுகம் கிடைச்ச பிறகுதானே இத்தனை நல்லது செய்யத் தோணிருக்கு..''

''அது உங்க நல்ல மனசு. உங்களைப் பார்த்தாலே ரொம்பவும் பிரமிப்பா இருக்கு.''

''செல்வா, இப்போ ஆம்புலன்ஸ் வந்திடும்.''

''எதுக்கு?''

''நீரஜாவை என்னோட ஆஸ்பிட்டலுக்கு கூட்டிட்டுப் போய் ட்ரீட்மென்ட் கொடுக்கலாம்னு இருக்கேன். அதுக்கு உங்க அனுமதி வேணும். ஜெயில் வாழ்வு போலில்லாம இயல்பாக வும், இயற்கையான சூழ்நிலையிலே மருத்துவம் பார்த்தா அவ சீக்கிரம் குணமடைய வாய்ப்பிருக்குன்னும் நினைக்கிறேன்.''

''இதுக்கு என் அனுமதி வேணுமா ஸந்தனா. எத்தனை பெரிய உதவி இது?''

''உதவின்னு பெரிய வார்த்தை சொல்லி பிரிச்சுப் பேசாதீங்க செல்வா. நானும் உங்க தோழிதான். உண்மையைச் சொல்லப் போனா, தோழியோட வாழ்க்கைக்காக இத்தனை போராடும் உங்க நட்பு கிடைக்க நானில்லை கொடுத்து வைச்சிருக்கணும்.''

''நீரஜா சீக்கிரம் குணமடையணும்.''

''நிச்சயமா செல்வா... சரி அவ குணமடைஞ்ச பிறகு என்ன செய்யப் போறீங்க?''

''அவளோட மனப்புண் ஆறிய பிறகு அவ விரும்புற மாதிரி ஒரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தித் தரணும்..''

''ஆம்புலன்ஸ் வந்திட்டு போல'' வார்ட் பாயின் உதவியோடு மயக்க நிலையிலேயே நீரஜாவை அதில் ஏற்றினார்கள். கூடவே ஸந்தனாவும் செல்ல, வண்டி கண்ணில் இருந்து மறையும் வரை பார்த்த வண்ணம் இருந்தான் செல்வா.

**வி**மலுக்கு குழப்பமாய் இருந்தது. இத்தனை நாள் இல்லாமல் திடீரென்று எங்கிருந்து முளைத்தாள். இது ஸந்தனாவிற்கு தெரிந்தால் என்னாகும்? நண்பன் கிரியின் வீட்டிற்கு சென்றான்.

அன்று வாரக் கடைசி நாள் என்பதால் வெகு சோம்பலாய் இருந்த கிரி விமலின் வருகையால் சுறுசுறுப்பு அடைந்தான்.

''விமல் நீயா? ஆச்சரியமா இருக்கே.''

''உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும் கிரி. நான் பைனல் இயர் படிக்கும்போது வந்தாளே ஒரு பொண்ணு. அதுதாண்டா நீரஜா. அவ ஏதோ ஹோமில் இருப்பதா சொன்னீயே?''

''ஆமா! ஏன் விடிஞ்சும் விடியாததுமா அவளைப் பத்தி கேக்குறே? பழைய நினைப்பா?'' கண்ணடித்தான் கிரி.

''ச்சீ! அவ திடீர்னு போன் பண்ணினா?''

''என்னடா சொல்றே?''

''நேத்து கல்யாண புடவை வாங்க கடைக்குப் போயிருந் தோம். அங்கேதான் போன் வந்தது. நீ வா அது எந்த ஹோம், என்று பார்க்கணும் வாடா போகலாம்!''

''வேண்டாம் விமல். கல்யாண சமயத்திலே நீயேன் அங்கேயெல்லாம் போயிட்டு நானே போய் பார்த்திட்டு வந்து சொல்றேன்.''

''எப்போ?''

''இன்னைக்கு சண்டே ஈவ்னிங் போயிட்டு போன் பண்றேன்.''

மனமில்லாமல் விமல் கிளம்பினான். மூளைக்குள் ஆயிரம் வண்டின் குடைச்சல்.

ஸந்தனாவும், செல்வாவும் அந்த டாக்டரின் முன் அமர்ந்திருந்தார்கள். ''கவலைப்படாதீங்க! மிஸ்டர் செல்வா, நீரஜா இஸ் பெட்டர் கண்டிஷன். அவங்களோட மூளையும் மனமும் ரொம்பவும் அமைதியாத்தான் இருக்கு. பொதுவா மனநிலை பாதிக்கப்பட்டவங்க பதட்டமான நிலையில் இருப்பாங்க. ஆனா இவங்க அப்படியில்லை. திடீர்னு ஏற்பட்ட பாதிப்பினாலேதான் அவங்க இந்த நிலைமையை அடைஞ்சிருக்காங்க. சில மருந்து மாத்திரைகள் தருகிறேன். டாக்டர்ஸ் மூலமா மெடிடேசன் ஒர்க்குக்கு ஏற்பாடு பண்றேன்.''

''அப்புறம் மூணு சிட்டிங்ஸ் எலக்ட்ரிக் ஷாக் ட்ரீட்மென்ட் தர்றதால கண்டிப்பா க்யூர் ஆக வாய்ப்பிருக்கு. அதனால நம்பிக்கையோட காத்துக்கிட்டு இருங்க. நிச்சயமா நீரஜா குணமாகிட வாய்ப்பிருக்கு!''

''தேங்க்யூ டாக்டர்..''

''கவலைப்படாதீங்க.. கடவுள் இருக்கிறார் எல்லாம் நல்லபடியா நடக்கும்.''

நன்றியுரைத்து அவர்கள் வெளியே வந்த சமயம் அருகில் இருந்த கார்டனில் நீரஜா அமர்ந்திருந்தாள்.

எங்கோ வெறித்த பார்வை ஆனால் அவள் கண்களில் இருந்து நீர் பெருகியது.



அவள் பக்கம் செல்ல முயன்ற செல்வாவின் கைப்பற்றி தடுத்தாள் ஸந்தனா.

''வேண்டாம், அவ மனசு கொஞ்சம் கொஞ்சமா இயல்பு நிலைக்கு மாறிகிட்டே வருது. இந்த அழுகை அவ மனசோட பாரத்தை குறைக்கும். அழட்டும்.''

செல்வா அவளையே பார்த்தபடி இருந்தான். எத்தனை குறும்பும், ரசனையும் நிறைந்த பெண் இப்படி கறைபடிந்த ஓவியமாய் மாறி விட்டாளே. ஸந்தனா.. அவன் தோளில் கை வைத்தாள்.

''செல்வா விமல் அரண்டு போயிட்டான்.''

''எப்படி?''

''மேகலா மேடம் இப்போ போன் பண்ணாங்க. யாரோ ஒருத்தன் நீரஜாவைப் பற்றி விசாரிச்சானாம்.''

''இவங்க என்ன சொன்னாங்களாம்.''

''நீரஜா குணமாகி சொந்த ஊருக்கே போயிட்டான்னு சொல்லச் சொன்னேன். அட்ரஸ் கேட்டானாம்.''

''பேஷண்ட் இங்கே இருக்கும் வரைதான் எங்க பொறுப்பு. அதற்கு பிறகு எதுவும் தெரியாதுன்னு அவங்க கைவிரிச்சிட் டாங்களாம்.''

''அப்போ விமல் தன்னோட தேடுதல் வேட்டையை துவங்கிட்டான்.''

''இனிமே நாம காய்களை ரொம்ப ஜாக்கிரதையா நகர்த்தணும் செல்வா. நாளைக்கு அந்த குடோனில் சோதனை நடந்தே ஆகணும்.''

''இனிமே விமலிற்கும் அவங்க அப்பாவிற்கும் எப்பவுமே நிம்மதி கிடைக்கப் போவதில்லை.''

அவள் சொன்னதைப் போல அங்கே விமலும் நிம்மதி யில்லாமல் இரவைக் கழித்துக் கொண்டிருந்தான்.

வெளிச்சப் பூக்களை பூமி மீது தூவியவாறே நகர்வலம் வந்தான் சூரியன். கட்டிலில் தூங்கியபடி இருந்த விமல் ஸந்தனாவுடன் டூயட் பாடியபடி இருக்க நில நடுக்கம் ஏற்பட்டதைப் போல் படபடவென்று உலுக்கப்பட்டான்.

''விமல் எழுந்திருடா.''

''என்னப்பா?'' சோமசுந்தரம் டென்ஷனாய் இருந்தார். இரவு உடையிலே!

''விமல், நம்ம குடோனை போலீஸ் சீஸ் பண்ணிட்டாங் களாம்!''

ஒட்டியிருந்த கொஞ்ச நஞ்ச தூக்கமும் விலகி எழுந்தான் பிள்ளை. ''என்ன டாடி சொல்றீங்க? எப்படி எப்படி நடந்தது?''

''அங்கே ஏதோ வெடிகுண்டு இருக்குன்னு யாரோ புரளியை கிளப்பிகிட்டு போலீஸ் செக் பண்ண வர சரக்கை சீஸ் பண்ணிட்டாங்களாம். வா உடனே போகலாம்.''

பதறியவரைத் தடுத்தான் விமல் ''டேடி டென்ஷனில் யோசிக்காமல் பேசறீங்க. அது பினாமி பேரில் இருக்கிற குடோன் இப்போ நீங்க போய் பார்த்தா உங்களுக்கும் அதுக்கும் என்ன சம்பந்தமா இருக்குன்னு போலீஸோட சந்தேகப் பார்வை நம்ம மேலே விழும்.''

''ஆமாம். விமல் இப்போ என்னடா பண்றது. ஒன்றரை கோடி ரூபாய் சரக்கு உள்ளே இருக்குடா..''

''அந்த பினாமி என்ன ஆனான்?''

''அவன் எங்கே இருக்கான்னு தெரியலை!''

''சரி நம்ம ஆபீஸில் யாராவது ஒருத்தரை அனுப்பி நிலவரம் மட்டும் பார்த்துக்க சொல்லுங்க. ஆனா விவரம் தெரியக் கூடாது.''

சோமசுந்தரம் சரிந்து உட்கார்ந்தே விட்டார்.

''அப்பா கவலைப்படாதீங்க. அந்த பினாமியை கண்டுபிடிச்சு அவன் மூலமாகவே ஏதாவது செய்யலாம். ஆ.. நம்ம சூப்பர்வைசர் அவன் பேரு என்ன?''

''மனோஜ்..''

''அவனையே அனுப்புறேன். நீங்க ரெஸ்ட் எடுங்க. நான் போய் பார்த்துட்டு வரேன்.'' சொல்லியவன் சட்டென தயாராகவும் ஆனான்.

''என்ன மனோஜ் என்னாச்சு?''

''ஸார் யாரோ ஒரு பெரிய மனிதராம். பினாமி பெயரில் சொத்து வாங்கினாராம். அந்த ஆள் அண்டர்கிரவுண்ட் வேலைகள் செய்து இவரை மாட்டிவிட பாம் இருக்குன்னு போன் பண்ணிட்டு கம்பி நீட்டிட்டான்.''

''பாம் இருக்குன்னு பார்க்க வந்த போலீஸ் கண்ணில் ட்ரக்ஸ் மாட்டிகிட்டது. குடோன் சொந்தக்காரன் யாருன்னு போலீஸ் தீவிரமா விசாரிச்சுட்டு இருக்காங்க. ஏன் சார்?''

''இல்லே நான் ஆபீஸ் வரும் போது அங்கே ஒரே கூட்டம் போலீஸ் வேறயா? அதான் என்ன ஏதுன்னு விவரம்

தெரிஞ்சுக்கலாமேன்னு! சரி நீங்க போய் வேலையைக் கவனிங்க.''

''சார் பெரியய்யா கிட்டே ஒரு விவரம் கேட்கணும்.''

''அப்பாவுக்கு கொஞ்சம் பர்சனல் வேலை எல்லாம் இருக்கு. நாளைக்கு வருவார். அப்போ பேசிக்கலாம்..'' அங்கிருந்து போன மனோஜ் யாரும் அறியா வண்ணம் செல்வாவிற்கு போன் பண்ணி விமலின் நடவடிக்கைகள் பற்றிச் சொன்னான்.

தலையைப் பிடித்தபடி அமர்ந்திருந்த விமலின் அலுவலக தொலைபேசி அழைக்க, ''ஹலோ..''

''என்னப்பா? அதுக்குள்ளே தலையிலே கை வைச்சுட்டே இன்னும் எவ்வளவோ இருக்கே..'' ஏளனமான பெண் குரல் ஒன்று தொலைபேசியில் வழிய,

''யாரு நீ..?''

''நானேதான். ஊரே சிரிக்குது. இன்னமும் நீயும், உங்கப்பனும்தான் காரணமின்னு யாருக்கும் தெரியாது. பார்த்தியா? உனக்கு பி.பி. ஏறுறா மாதிரி ஒரு விஷயம் சொல்லட்டா? இந்த வெடிகுண்டு வதந்தியை கிளப்பியதே நான்தான்.''

''நீயா? ஏன்?''

''ஏன்? இத்தனை நாள் உள்ளேயே இருந்திட்டேனா.. என் கூட விளையாடிய உன்கூட விளையாட ஆசையா இருக்கு. அதனாலதான். சரி விமல் அடுத்த விளையாட்டுக்கு ரெடி ஆக வேண்டாமா கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கிறேன்'' போனை கட் பண்ணி விட்டாள்.



''யூ.. பிட்ச்!'' இவள் எங்கிருந்து முளைத்தாள். முதலில் இதற்கு ஒரு வழி பண்ணியே ஆக வேண்டும். முஷ்டியை பற்றியபடி கிளம்பினான் விமல்.

''ஸந்தனா எத்தனை முயற்சி பண்ணியும் அந்த டாக்குமெண்ட்ஸ்..''

''கிடைக்கல செல்வா, அந்த குடோன் சீல் வைச்சதற்குப் பிறகு அங்கிள் முன்னே மாதிரி எங்கேயும் வர்றதில்லை. பெரிய அடி, பணம், பார்ட்டிகிட்டே கெட்ட பேருன்னு அறைக்குள் ளேயே இருக்கிறார். நானும் முயற்சி பண்ணிட்டேன். லாக்கர் சாவியை மட்டும் என்னால கைப்பற்ற முடியலை.''

''அப்படின்னா..''

''இந்தக் கல்யாணம் நடக்கணும், அப்போதான் யாருக்கும் சந்தேகம் வராதபடி நான் அந்த வீட்டிலே வளைய வர முடியும்.''

''எல்லாம் சரி ஸந்தனா, மோசமான விமல் கிட்டே உங்க வாழ்க்கையையே இழந்திடுவீங்களே.''

''செல்வா என்னை தற்காத்துக் கொள்ள எனக்குத் தெரியும். விமல் என்னும் கொடிய மிருகத்துக்கிட்டே இருந்து தப்பிக்க என்னிடம் சில வழிகள் எல்லாம் இருக்கு.''

''அப்புறம்..''

''முடிவெடுத்தாச்சு இனிமே நான் பின்வாங்கமாட்டேன். இன்னொரு முக்கியமான விஷயம், நீரஜா குணமாயிட்டே வர்றா. நான் சொல்றதைப் புரிஞ்சி சில நேரம் பதில் பேசறா. சின்னச் சின்ன வேலைகள் செய்யுறா. ஆனா சில நேரம் கனத்த அமைதியோட இருக்கா.''

''ஏற்கனவே இரண்டு சிட்டிங் ட்ரீட்மென்ட் முடிஞ்சிருக்கு. அடுத்த முறை கட்டாயம் பழைய நீரஜாவை பார்க்கலாம்.''

''நன்றி ஸந்தனா!''

''அதை கடவுளுக்குச் சொல்லுங்க. நாளைக்கு, எனக்கு கல்யாணம் செல்வா. அவசியம் நீங்களும் பிரபுவும் வரணும்..'' ஸந்தனா சொல்லிவிட்டு விலக, செல்வா செய்வதறியாமல் நின்றான்.

## 12

வெகு விமரிசையாய் நடந்தது விமல் - ஸந்தனாவின் திருமண வைபவம். கணக்கில் வராத பணத்தையெல்லாம் வாரியிறைத்து திருமணம் செய்திருந்தார் சோமசுந்தரம்.

ஸந்தனா உதடுகளில் ஒட்ட வைத்த இன்ஸ்ட்டட் புன்னகையோடு மண்டபத்தில் அமர்ந்திருந்தாள். அவர்களைச் சுற்றி நண்பர்களின் கூட்டம். அலைகடலாய் ஆர்ப்பாட்டமாய், ஆனால் விமலின் மனம் மட்டும் எதிலும் ஈடுபடாமல் தனித்து நின்றது.

காலையில், வாழ்த்துச் செய்தி என்று கிரி கொண்டு வந்து தந்த பொக்கேயைப் பார்த்ததில் இருந்தே மனம் அரித்துக் கொண்டு இருந்தது.

''என்ன கிரி இது பொக்கேயெல்லாம் கொண்டு வந்திருக்கே?''



''இது நான் அனுப்புன பொக்கே இல்லைடா! காலையிலே கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் சரியான்னு பார்க்க வந்த என்கிட்ட ஒரு சின்னப் பையன் கொண்டு வந்து கொடுத்திட்டு, போனதா வாட்ச்மேன் தந்தான்.''

''சரி வெறும் வாழ்த்துதானே அதையேன் மெனக்கெட்டு என்கிட்டே கொண்டு வந்திருக்கே!''

''முட்டாள் இதை அனுப்பியது யார் தெரியுமா? அது..!''

''நீரஜாவா..?''

''ஆமாம்!'' கிரி இடமும் வலமுமாய் பெரிதாய் தலையசைத்தான்.

விமலின் கைகள் தன்னையும் மீறி அதை பற்றியது.

'திருமண வாழ்த்துக்கள் விமல், இன்று முழுவதும் நான் உன் அருகிலேயேதான் இருக்கப் போறேன்.' அழகழகாய் கோர்த்தாற் போல் கையெழுத்து.

''இப்போ என்னடா செய்யறது?''

''நீ கவலையேப் படாதே, கல்யாண மண்டபத்தில் எங்கே இருந்தாலும் அவளை கண்டுபிடிச்சு இல்லாம பண்றது என் வேலை.''

''முடியுமாடா..?''

''உன் நண்பன் நான் இருக்கிறேன்டா. ஒரு பொம்பளை இந்த ஆட்டம் ஆடறா, அவளை ஒரு கை நான் பார்க்கிறேன்.''

அதன் பிறகு எந்த தகவலும் இல்லை. திருமணமும் நல்லபடியாய் நடந்தேறியது.

எப்போது என்ன நடக்குமோன்னு மனம் பதைத்த பதைப்பில், விமலால் இயல்பாய் வளைய வரமுடியவில்லை.

''விமல் இவங்க எல்லாம் என்னோட கல்லூரி நண்பர்கள்'' என்று சிலரை அறிமுகப்படுத்தினாள் ஸந்தனா.

சுவாரஸ்யம் இல்லாமல் உச்சு கொட்டினான் விமல்.

இவர்களுக்குள் நடந்த அனைத்தையும் முதல் வரிசையில் அமர்ந்திருந்த செல்வாவும், பிரபுவும் பார்த்தனர்.

''பிரபு இவனையெப்படி ஸந்தனா சமாளிக்கப் போறா?''

''அவ மனசிலே பெரிய பிளான் இருக்கு. அதையெப்படி நிறைவேற்றப் போறான்னு தான் தெரியலை!''

''சரி வா செல்வா நாம் ஆபீஸுக்கு வேற போகனும். ஸந்தனா ரொம்பவே பிஸி இப்போ பேச முடியாது..'' நண்பர்கள் இருவரும் கிளம்பும்போது ஸந்தனா செல்வாவைப் பார்த்து உறுதியாய் தலையசைத்தாள்.

இரவு நேரம்...

அதுவரையில் விமல் படபடப்புடன் இருந்தாலும், அதன் பின் நீரஜாவிடம் இருந்து எந்த தகவலும் இல்லாமல் இருந்ததால், அவனும் இயல்பாய், முதலிரவை நோக்கிக் கொண்டிருந்தான் விமல்.

அவன் பிறப்பின் லட்சியமே முதலிரவுதானே. அவன்மேல் வந்து விழுந்ததும், அவன் விரட்டிப் பிடித்த பெண்களும் அநேகம். என்றாலும், ஸந்தனாவின் மேல் முதலில் இருந்தே இருந்த கிறக்கம் போதை கொள்ள வைத்தது.

வானத்து விண்மீன்களை போன்ற பளீரென்ற சிரிப்பில் உள்ளே நுழைந்தாள். ஸந்தனா கையில் ஒரு பால் செம்போடு!

''என்ன ஸந்தனா இப்படி வர்றே?''

''ஏன் நான் ஒண்ணும் பறந்து வரலையே நடந்துதானே வந்தேன்.''

''இல்லே பர்ஸ்ட் நைட் சில பெண்களோடு...''

''அட இதென்ன சினிமாவா?'' அவள் கேள்வி கேட்டபடியே ரிலாக்ஸாக வந்தாள். கட்டிலின் அருகில் அமர்ந்து டேபிளின் மேல் பாலை வைத்துவிட்டு, ''உட்காருங்க விமல் ஏன் நிக்குறீங்க?''

ஏதோ மனமாற்றத்தோடு அருகில் அமர்ந்தவன், மனைவியை தப்பான பார்வை பார்க்க, ''பாலைக் குடிங்க விமல்! அப்புறம் பேசலாம்..'' அவனும் பல்லைக் கடித்தபடி, பாலை டம்ளரில் ஊற்றினான்.

அவன் கண்களில் அவள் உடலின் போதை விமல், ''நீரஜா யாரு?'' பொன்னிற வளையல்களை அளந்தபடியே கேட்க.. பொறையேறியது விமலுக்கு.

''என்னாச்சு பார்த்து தலையைத் தட்டி விட்டவள் எனக்கு போன் பண்ணினா?''

''என்னன்னு?''

''ஜஸ்ட் மேரேஜ் விஷ் பண்ணினா.. உங்களோட பெஸ்ட் பிரண்ட்ஸ்ன்னு சொன்னா. அதான் கேட்டேன்.''

''காலேஜில..''

''சரி... சரி.. அப்புறம் விமல், காலையில் இருந்து ஒரே அலுப்பு..'' உடலை நெளித்து நெட்டி முறித்தாள். மெல்ல அவளை அணைத்தான் விமல்.

''ப்ளீஸ்ப்பா.. இன்னைக்கு வேண்டாமே எனக்கு டயர்டா இருக்கு..''

''என்ன ஸந்தனா விருந்து வைச்சிட்டு இலையை மூடுறீயே.. இது நியாயமா?''

''டோன்ட் பீசில்லி விமல் எதிலும் ஒரு இன்வால்வ்மென்ட்.. வேண்டாமா? பேசாம படு இதென்ன கிடைக்காததா..'' சொல்லியவள் அதற்கு மேல் பேச இடம் கொடாமல் படுத்தும் விட்டாள்.

விமலால் இருப்புக் கொள்ள முடியவில்லை. நீரஜா போன் செய்ததாய் சொன்னாளே என்னைப் பற்றி ஏதும் தப்பாய் சொல்லி இருப்பாளோ! அதனால்தான் விலகிப் படுத்து விட்டாளோ!

இல்லை, உண்மையிலேயே அலுப்போ! ச்சே! எத்தனை எதிர்பார்ப்போடு காத்து இருந்தேன். ஏமாற்றி விட்டாளே! எழுப்பி விடலாமா என்று நினைத்தவன் உடனே அந்நினைப்பை மாற்றிக் கொண்டான்.

முதலிரவு ஸந்தனாவின் வீட்டில் வைக்கப்பட்டு இருந்தது. இங்கே ஏதும் சச்சரவு என்றால் அதை தந்தையும் விரும்ப மாட்டார். அதிலும் வாழ்வின் முதல்நாள் இன்றே ஸந்தனாவிடம் கெட்ட பெயர் வாங்கி விடக் கூடாது என்ற முடிவில் அமைதியாய் படுத்தான். ஆனால், மனம் மட்டும் விடாமல் ஊளையிட்டது.

மறுநாள் மறு வீடு. காலையிலேயே விமலின் வீட்டிற்கும் வந்தாகிவிட்டது. விளக்கேற்றி வந்தவர்கள் செல்கையில் சோமசுந்தரம் மருமகளின் கையில் கொத்தாய் சாவி ஒன்றைத் தந்தார்.

''இதெல்லாம் எதுக்கு மாமா?''

''இல்லே ஸந்தனா.. இனிமே இந்த வீட்டுக்கு நீதானே எல்லாம். ரொம்ப நாள் பெண் நடமாட்டமே இல்லாத வீடு இனிமே உன்னால சுபீட்சமா இருக்கணும்.''

அவர் லாக்கர் சாவியை ஸந்தனாவிடம் தந்தது விமலிற்குச் சற்றும் பிடிக்கவில்லை. ஏற்கனவே ஆயிரத்தெட்டு கண்டிஷன் போடுவா. இப்போ மொத்த பொறுப்பும் அவகிட்டே போனா எல்லா செலவிற்கும் இல்லே பதில் சொல்லணும். இந்த அப்பாவிற்கு புத்தியேன் இப்படி போகுது. அதை தந்தையிடம் தனிமையில் கொட்டவும் செய்தான்.

''முட்டாள் இந்த கணக்கெல்லாம் உனக்குப் புரியாதுடா. இதெல்லாம் சின்ன மீனைப் போட்டு பெரிய மீனை பிடிக்கிற கதை! உனக்கென்ன பணம்தானே வேணும். நான் தாரேன்..''

''எனக்கு உங்க லாஜிக்கே புரியலையே?''

''விமல், ஸந்தனா முதல்ல உன்னையும் என்னையும் முழுசா நம்பணும். நாம பண்ற த்ரேடுரேட் பிஸினஸால ஏதாவது பிரச்சனை வந்தாக் கூட அவ நம்ம பக்கம் இருக்கணும். அப்போதான் நாம பிரச்சனையில் இருந்து தப்பிக்க முடியும். சாவிதானே ஏதாவது ஒரு சாக்கு சொல்லி நாளைக்கே வாங்கிட்டா போது..!'' தகப்பன் மகன் இருவரின் சம்பாஷணைகளையும் கேட்ட ஸந்தனா தன்னை மீறி ஒரு முறை சிரித்துக் கொண்டாள்.

அடுப்படிக்குள் நுழைந்தாள். ''வாங்க சின்னம்மா...'' பவிசுடன் பதுங்கினாள் வேலைக்காரி.

''உங்க பேரென்ன?''

''செல்வி..!''

''எத்தனை வருஷமா இங்கே வேலை பாக்குறீங்க?''

''ஐஞ்சு வருஷம்மா.. காபியாவது, ஜூஸாவது தரட்டுமா'' குழைவாய் கேட்டாள்.

''வேண்டாம். உங்களுக்கு வேலை நேரம் எப்போ முடியும்?''

''நைட்டுதாம்மா.. ஒரு வாரமா சொந்த பந்தமின்னு வேலை செய்து இடுப்பே உடைஞ்சு போச்சு. எம்புள்ளைக் கூட உடம்புக்கு முடியலை.''

''என்ன செய்யுது?''

''காய்ச்சல். பிரைவேட்டு ஆஸ்பத்திரியில் காட்ட நமக்கு என்ன வசதி இருக்கு. தர்மாஸ்பத்திரி கூட்டிட்டுப் போனா, ஒரு மாத்திரை ஒவ்வொண்ணும் கடப்பாரை கணக்கா இருக்கு..''

ஸந்தனா புன்னகைத்து விட்டு, தன் மெடிக்கல் கிட்டைத் திறந்து, ''இந்தா செல்வி இந்த மாத்திரையை உன் பிள்ளைக்கு கொடு. இதை நீ சாப்பிடு. உனக்கு உடம்பு வலியெல்லாம் சரியா போயிடும்.''

''நீ நல்லாயிருப்பேம்மா.. பெரிய இடத்துப் பெண்ணாச்சே எப்படி இருப்பீங்களோன்னு நினைச்சேன்.''

''செல்வி நீ சாப்பாட்டை முடிச்சிட்டு போ. நான் பரிமாறிக்கிறேன்.''



''அய்யா சத்தம் போடுவாங்களே..''

''நான் சொல்லிக்கிறேன். ஆனா காலையிலே சீக்கிரமா வந்திடு செல்வி. உன்னையும் சேர்த்து இன்னும் எத்தனை வேலைக்காரங்க இருக்காங்க.''

செல்வி பாத்திரங்களை கழுவியபடியே, சப்தமிட்ட பால் குக்கரை இறக்கி வைத்த செல்வி, ''மொத்தம் நாலு பேரும்மா. டிரைவர் ஒருத்தர் பெரியய்யாவுக்கு மட்டும். சின்னவரு அவரே ஓட்டிகினு போயிடுவார். அதேமாதிரி தோட்ட வேலைக்கு கணேசுன்னு ஒருத்தன். நானு, வாட்ச்மேன் அவ்வளவுதாம்மா.''

ஸந்தனா கையில் ஒரு டம்ளர் கிரேப் ஜூஸை எடுத்துக் கொண்டு சோமசுந்தரத்தின் அறைக்குள் நுழைந்தாள்.

''மாமா.. ஜூஸ்..''

''ஏம்மா நீ இந்த வேலை எல்லாம் செய்யுறே செல்வி இல்லியா..''

''இருக்கா.. ஏன் மாமா நான் உங்களுக்கு எடுத்து வரக் கூடாதா?''

''உனக்கு எதுக்கும்மா சிரமம்?''

''ஜூஸ் ரெடியானது மிக்சியில் அதை ஊற்றி தந்தவ செல்வி. நான் கொண்டு மட்டும்தான் வந்தேன். இதிலென்ன சிரமம்.''

''உட்காரும்மா. நீ குடிச்சியா?''

''ஆச்சு!''

''விமல் அம்மா இல்லாம வளர்ந்த பையன். பெண் அன்புக்கு ஏங்கியவன். நீதாம்மா இனிமே எந்தக் குறையும் இல்லாம பார்த்துக்கணும்.''

''உங்களையும் விமலையும் பார்த்துக்கத் தானே மாமா நான் வந்திருக்கிறேன்.''

''சரி முதல்ல உங்க மெடிசன்ஸ் சாட், தாங்க என்ன டேப்லஸ்.. எடுத்துக்கிறீங்கன்னு நான் வெரிபை பண்ணிட றேன்.''

''சரிங்க டாக்டரம்மா..'' அவர் சிரிக்க இவள் புன்னகையுடன் விலகினாள்.

## 13

நிலா காயும் நேரம். இரவில் உலகமே அமைதியின் மடியில் படுத்திருக்க, ஏக்கம் நிறைந்த மனதோடு தன் அறைக்குள் நுழைந்தான் விமல்.

ஸந்தனா எதையோ ஆர்வமாய் படித்துக் கொண்டு இருந்தாள். கட்டிலில் கவிழ்ந்தபடி கால்கள் இரண்டையும் முன்னும் பின்னுமாய் ஆட்டியபடி, காலில் அணிந்திருந்த கொலுசு கெண்டைக் காலில் நிற்க, பொன்னிறமாய் மின்னிய அந்த பாதங்களை அணைக்க வேண்டும் போல் இருந்தது.

விமலின் பார்வை அவளின் உடல் மேல் படிந்தது. இறைவன் பெண்ணின் உடலை பூவின் மென்மையாகவும், அதை பாதுகாக்கும் முள்ளாய் ஆணின் உடலை கரடு முரடாகப்



படைத்திருக்கிறான் என்று இலக்கியம் சொல்லும். அந்த வன் உடலால் அவன் பெண்களை அடிமையல்லவா படுத்துகிறான்.

வெளித் தெரியும் உடலை ரசிப்பதைப் போல் மனதை ரசிப்பவர்கள் உலகில் எத்தனை பேர் உண்டு.

விமலும் அவ்வகையே சேர்ந்தவன் தான். முதலிரவிலேயே மனைவியின் ஒதுங்கல் அவளின் அழகு, வனப்பு விமலை வெறிப்பிடித்தவனாய் மாற்றி இருந்தது.

கட்டிலின் விளிம்பில் அமர்ந்தவன் சிவந்திருந்த கால்களை அழுந்தப் பற்றினான். பதறி விலகினாள் ஸந்தனா.

''ஏய் என்ன டியர் பயந்திட்டியா?''

மேலும் பேசியபடி அருகில் வந்து இழுத்து அணைத்துக் கொண்டான்.

கணவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட ஸந்தனா, ''என்ன அவசரம் விமல்? நான் உங்க மனைவிதானே, எங்கே போயிடப் போறேன்.''

''ஸந்து டியர் ஐ லவ் யூ ஸோ மச். என் அவசரம் உனக்குப் புரியலை. ஆனா என்னாலே கண்ட்ரோல் பண்ணவே முடியலையே! அந்த அளவுக்கு உன் அழகு என்னைத் தடுமாற வைக்குது'' அவளின் முந்தானையில் கை வைக்க.

கரடியாய் தட்டப்பட்ட கதவுக்கு வெளியே பணியாள் ஒருவனின் பதட்டமான குரல்!

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு, விமல் கோபமாய் கதவைத் திறந்த விமல், ''என்ன இந்த நேரத்திலே அறிவில்லை?'' அவன் மேல் பாய.

''சின்னய்யா பெரியவர் திடீர்னு மாரைப் பிடிச்சிட்டு சாஞ்சிட்டாரு. எனக்கு ரொம்பவே பயமாயிருக்கு'' அவனையும் பதற்றம் தொற்றிக் கொள்ள மூவரும் சோமசுந்தரத்தின் அறையை நோக்கி விரைந்தார்கள்.

நீச்சல் பழகுபவரைப் போல் கையை காலை உதறிக் கொண்டிருந்தவரை ஸந்தனா கவனித்தாள். ''விமல் போன் பண்ணி உடனே ஆம்புலன்ஸை கூப்பிடுங்க... இல்லே நம்ம காரை எடுக்கச் சொல்லுங்க..''

தன் மெடிக்கல் கிட்டில் இருந்து மருந்தை சிரஞ்சில் ஏற்றி, சோமசுந்தரத்தின் உடலில் வைக்க முயல அவரின் துடிப்பு கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கிப் போனது.

மறுநாள் தினசரிகளில்...

பிரபல தொழிலதிபர் சோமசுந்தரம் மரணம். நாளை உடல் தகனம் என்ற செய்தியோடு சில இன்ஞ் இடைவெளிகளில் புகைப்படமாகிப் போயிருந்தார். ஈமக்கிரியை காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்க, செல்வாவும், பிரபுவும் ஒரு மலர் வளையத்தோடு வந்து இருந்தனர். கருணாகரன் முன் நின்று எல்லாத்தையும் நடத்தினார்.

விமல் எப்போதும் உணர்வுகளை வெளிக்காட்ட மாட்டான் என்றாலும், அப்பா இதுவரை அவனை கண்டித்ததே இல்லை. சுதந்திரத்தில் தலையிட்டது இல்லை. ஒரு தந்தையாய் தன்னை திறம்படவே நடத்தினார் என்பதில் அவ்வப்போது அவன் கண்கள் கலங்கிய வண்ணம் இருந்தன.

ஸந்தனா ஒரு ஓரமாய் அமர்ந்திருந்தாள், மௌனச் சிலையாய்!

செல்வாவின் விழிகள் அவளைத் தொட்டன. கண்களை ஒருமுறை மூடித் திறந்தாள் ஸந்தனா! அதன் பிறகு மற்றவர்கள் காரியங்களைக் கவனிக்க இரண்டு மூன்று தினங்களுக்கு பின், அலுவலக வேளையில் முக்கியமாய் ஈடுபட்டு இருந்த செல்வாவின் மொபைல் சிணுங்கியது.

டிஸ்பிளேயில் ஸந்தனாவின் எண்களைக் கண்டதும் உடனே உயிர்ப்பித்தான்.

''ஸந்தனா உங்களை எப்படித் தொடர்பு கொள்றதுன்னு தெரியாம தவிச்சுப் போய் இருந்தேன். நல்லவேளை நீங்களே கூப்பிட்டீங்க!''

''என்ன விஷயம் செல்வா?''

''நீரஜாவுக்கு பழைய நினைவுகள் எல்லாம் திரும்பிடுச் சுன்னு டாக்டர்ஸ் சொல்றாங்க.''

''நீங்க அவளைப் பார்த்தீங்களா?''

''இல்லே ஸந்தனா. கொஞ்சம் தயக்கமாவே இருக்கு.''

''ஏன்?''

''தெரியலை! இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவளை தனியாவே சந்திக்க மனசு பயப்படுது!''

''தப்பு செல்வா! இப்போதான் நீரஜாவுக்கு உங்க அன்பும், ஆறுதலும் தேவை. நானும் வர்றேன். ஈவ்னிங் போகலாம். சரி! நான் முதலில் அடித்த அம்பு நல்ல வேலை செய்யுது செல்வா.''

''அப்படின்னா!''

''நீங்க கெஸ் பண்ணினது உண்மைதான். சோமசுந்தரத்தின் மரணம் இயற்கையானது இல்லை. அவர் 5 மணி நேரத்திற்கு

முன்பு குடித்த ஜூஸில் இரத்த அழுத்தம் அதிகமாகும் அளவிற்கு மாத்திரையை கலந்திட்டேன். அது கொஞ்ச கொஞ்சமா தன் வேலையை காட்ட ஆரம்பிச்சிடுச்சு.''

''இருந்தாலும் இது அதிகப்படி ஸந்தனா..''

''இல்லை செல்வா. நான் நல்லா யோசிச்சு தான் இந்த முடிவிற்கு வந்தேன். லாக்கரில் உள்ள டாக்குமெண்டில் ஒரு புது பிஸினஸ் டீல் நடந்து இருக்கு.''

''என்னது?''

''பச்சை குழந்தைகளுடைய மருந்துகளில் தப்பான பார்மூலாவை மிக்ஸ் பண்ணி போலி மருந்து தயார் செய்யப் போறாங்க. இது நடந்தா எத்தனை உயிர்கள் போகும். அதுக்கு இந்த மாதிரி தேசத் துரோகியோட உயிர் போறது பெரிய தொண்டு இல்லையா?''

''அது சரி ஸந்தனா, இதனால் உங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்திட்டா அப்புறம்..''

''விமல்.. இப்போ பல் பிடுங்கின பாம்பு. அவனை எப்படி அடிக்கிறதுன்னு எனக்குத் தெரியும். ஈவ்னிங் ஹாஸ்பிட்டலில் பார்க்கலாம்..'' இணைப்பைத் துண்டித்து விட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

''அண்ணா...'' செல்வத்தைக் கண்டதும் துக்கத்தில் அலறினாள் நீரஜா.

''கவலைப்படாதே நீரு.. நான் இருக்கேன்மா உனக்கு..''

''இல்லேண்ணா அம்மாவும், அப்பாவும் எனக்கு எத்தனை நல்லது செய்தாங்க. எல்லாத்தையும் என் தப்பான நடத்தை யால.. பெற்றவங்களுக்கு நான் செய்த துரோகம் தான் அண்ணா என்னை இந்த அளவுக்கு அனுபவிக்க வைச்சிட்டது.''

''அழாதே! நீரஜா இதில் தப்பு உன் பக்கம் மட்டுமில்லே.. உன்னை மாதிரி எத்தனையோ பெண்கள் ஏமாந்து போய் தன்னையும் தொலைச்சு, தன்னைச் சார்ந்தவங்களையும் தொலைச்சிடறாங்க..''

''நீங்க?''

''பேரு ஸந்தனா. நமக்கு ரொம்பவும் வேண்டியவங்க. இன்பேக்ட் நீ இப்போ முழுமையா குணமாக காரணமான வங்க!''

''நன்றி மேடம்.''

''ஸந்தனா கூப்பிடு நீரு.. உனக்கு யாருமில்லேன்னு நினைக்காதே. உன் மனக் காயங்கள் ஆறும் வரையில் இங்கே இருக்கிற மற்ற நோயாளிகளுக்கு ஆறுதலா இரு. கூடிய விரைவில் உனக்கு ஒரு நல்ல வேலைக்கு ஏற்பாடு செய்யறேன்.''

''வேண்டாம் ஸந்தனா.. நான் இங்கேயே இருந்திடறேன். துரோகம் நிறைஞ்ச முகமூடி அணிந்த மனித மிருகங்களை விடவும், மனசால குழந்தையாய் இருக்கிற இவங்க தேவலை.''''சரி.. நீரு கேட்க கஷ்டமாத்தான் இருக்கு. விமல் உன்னை விரும்பலைன்னாலும், நீ அவனை விரும்பியது நிஜம். உன் காதல் பொய்யில்லை. இனிமேல் அவனை ஒருவேளை உன்னை ஏற்றுக் கொள்வதாய் இருந்தால்..''

''ச்சீ.. இனியொரு முறை அந்த மனுஷ மிருகத்தை

சந்திக்கவே கூடாதுன்னு இருக்கிறேன்..''

''இந்த உறுதிதான் பெண்களுக்கு முக்கியம். கல்யாணம் அவசியம்தான். ஆனா அதுவே விலங்கா மாறிடக் கூடாது. ஒரு அழகான பூவைப் பிச்சு அதை நுகர்ந்து கசக்கிப் போட்ட ஒரு அரக்கனை, பூஜிக்கணுமின்னு அவசியம் இல்லை. நீ எடுத்த முடிவுதான் சரி. நான் உனக்கு எப்பவுமே துணையாய் இருப்பேன்.''

ஸந்தனாவின் ஆறுதலான பேச்சில் கண்களைத் துடைத்தபடி உள்ளே சென்றாள் நீரஜா.

''செல்வா, நீரஜா இப்போ எடுத்த முடிவுதான் நல்லது. கொஞ்ச நாள் மெடிடேசன், யோகான்னு அவ மனசு பாரம் நீங்கிய பிறகு ஒரு நல்ல வாழ்வைப் பற்றி யோசிப்போம்.''

''அப்போ விமலைப் பற்றி..!''

''அவ எதையும் தெரிஞ்சுக்கவும் தயாராயில்லை. தேவையில்லாததை சொல்லி ஏன் குழப்பணும். அவளே மறக்க நினைக்கிற ஒரு விஷயத்தை நினைவூட்டுவதில் எந்த லாபமும் இல்லை.''

''நீங்க ரொம்பவும் தெளிவா அழகா யோசிக்கிறீங்க ஸந்தனா. ஆனா விமலை நீங்க எப்படி சமாளிக்கப் போறீங்க?''

''அதைப் பற்றிதான் யோசிக்கிறேன்..'' அவர்கள் பேசிக் கொண்டு இருக்கும் போதே அரக்கப் பரக்க பிரபுவும், மனோஜும் ஓடி வந்தார்கள்.

''செல்வா ஒரு முக்கியமான விஷயம்.''



''என்னடா.?''

''போதை மருந்து கேஸ்ல ஒரு கும்பலை சீஸ் பண்ணினாங் களே அந்த ஆள் மாட்டிக்கிட்டாங்க..''

''இஸிட்..!''

''இப்போ நம்ம கஸ்டடியில்தான் இருக்கான். மனோஜோட உதவியாலதான் அவனைப் பிடிக்க முடிஞ்சது.''

''ரொம்ப நன்றி மனோஜ்.''

''என்ன மேடம் இது. இது சோறு போடற முதலாளிக்கு துரோகம் பண்ண முடியுமா. இது என் கடமை இதுக்குப் போய் நன்றியா?''

''பணத்துக்கு பங்களாவே அடிமை ஆகும் போது, நீங்க நேர்மையா நடக்குறீங்களே செல்வா. அந்த ஆள்கிட்டே வாய் மூலமாகவும், எழுத்து மூலமாகவும் வாக்குமூலம் வாங்கிடுங்க.''

''அப்போ அவனை போலீஸ்ல ஹேண்ட் ஹவர் பண்ண வேண்டாமா?''

''விமல் பண பலம் உடையவன். அண்டர்கிரவுண்ட் வேலை பண்றவன். யாரை எல்லாம் கைக்குள்ளே வைச்சிருக்கானோ தெரியாது. அதனால நம்ம சைட் ஸ்ட்ராங் எவிடன்ஸ் வேணும். அதுக்கு பிறகு போலீசில் விடலாம். நாளைக்கு காலையிலே விடியல் நிச்சயமா விமலுக்கு நல்லதா இருக்கக் கூடாது.''

அங்கு நிலவிய அமைதி மற்றவர்களின் மனதில் இருந்த உறுதியை தெரியப்படுத்தியது.

# 14

இரவு நேரம். இத்தனை நாட்களும் உறவினர் கும்பலும் கூட்டமும் இருந்ததால் விமல் ஸந்தனாவை நெருங்க முடியவில்லை. பிஸினஸ் லாஸ், தந்தையின் ம்ரணம் என்று படிப்படியாய், அடிபட்டு போய் இருந்த விமல் ஒருவித ஆறுதலுக்காய் மனைவியை நெருங்கினான்.

அவள் ஆல்பம் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தாள். விமல் உள்ளே நுழைவதைப் பார்த்துவிட்டு, ''வா விமல், நானே உன்னைக் கூப்பிடணுமின்னு நினைச்சேன். இது நம்ம கல்யாண ஆல்பம்.''

அவனும் அவள் அருகில் அமர்ந்தான். கல்யாண மாலை மாற்றுவது, சில சடங்குகளில் நடந்தவை, மண்டபம் என அனைத்து நிகழ்ச்சிகளும் இடம் பிடித்து இருந்தன. பின் நண்பர்கள் பட்டாளம், ஒவ்வொன்றாய் திருப்பியபடி கூறிக் கொண்டே வந்த விமல், அடுத்த போட்டோவைக் கண்டதும் ஷாக் அடித்ததைப் போல் நின்று விட்டான்.

''இது யார் விமல்? இந்த பொண்ணு ரொம்ப அழகா இருக்கா இல்லே!''

''யாராவது ரிலேஷனா இருக்கும்'' விட்டேத்தியாய் சொன்னவன் அதன் பின்னர் எழுந்து விட்டான். நீரஜா எப்போது கல்யாணத்திற்கு வந்தாள். தான் அறியாமல் எப்படி ஸந்தனாவுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டாள். ஒன்றும் புரியாமல் தவித்தான். மறுபடியும் மனம் குழம்பிய



குட்டையாய் ஆனது. ஸந்தனா வெற்றி பெற்றதை எண்ணி புன்னகைத்தாள்.

கன்னத்தில் கை வைத்தபடியே சோகத்தில் குளித்தாற்போல் அமர்ந்திருந்தான் விமல். எல்லாமே அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமாய் ஆகிவிட்டது. என்றுமில்லாமல் காலையில் இருந்தே மனம் பாரமாய் இருந்தது. ஏதோ நடக்கப் போவதாய் எச்சரிக்கை மணி அடித்தபடியே இருந்தது.

அதேபோல் விடிந்ததும் விடியாததுமாய், குடோனின் பினாமி மாட்டி இவர்களுக்கு எதிராய் தகவலும் தந்து, தந்தை மகனும் இத்தனை நாள் திரைமறைவில் நடத்திய அனைத்தும் வெளிச்சத்திற்கு வந்தது.

என்ன ஏதென்று விசாரிப்பதற்குள் கைது செய்து கொண்டு போய் விட்டார்கள். மூன்று மணி நேர விசாரணையில் முழி பிதுங்கிப் போனான் விமல். நல்லவேளை கம்பெனி லாயர் வந்து மீட்டு வந்துவிட்டார்.

தலைகவிழ்ந்தபடி அமர்ந்திருந்த விமலை நெருங்கினாள் ஸந்தனா. அவமானம் அவனைத் தின்று கொண்டிருந்த வேளையில் ''என்ன விமல், அப்பாவும் நாமும் சேர்த்து வைச்ச சொத்தை எல்லாம் ஒரே நாள்ல தூக்கிட்டுப் போயிட்டாங் களேன்னு கவலையா?''

''ஸந்தனா என்ன உளர்றே?''

''உளறலை. விமல் உண்மையைச் சொல்றேன்!''

''இதெல்லாம் கட்டுக்கதை ஸந்தனா. பிஸினஸில் நம்ம எதிரிகள் எல்லாம் செய்யும் வேலை இது!'' மனைவியின் நம்பகமில்லாத பார்வையில் எரிச்சல் அடைந்தவன். ''அப்படி என்ன உண்மையைக் கண்டுபிடிச்சிட்டே?'' எகத்தாளமாய் கேட்டான்.

''நீரஜா..!'' அழுத்தமாய் சொல்லிவிட்டு கணவனைப் பார்த்தாள். அவன் முகம் வெளிறியது தெரிந்தது.

''உன்னை முழுசா நம்பி நீ உண்மையான காதலோட பழகுறேங்கிறதை எண்ணி உன் காமப் பசிக்கு பலியானாளே அந்த அப்பாவிப் பொண்ணு, இன்னும் நினைவு வரலையா விமல்?''

''அதுக்கென்ன இப்போ.. என்னை மாதிரி பணம் படைத்த அழகான ஆண்கள் பின்னாடி ஏராளமான பெண்கள் சுத்தத்தான் செய்வாங்க.''

''நம்பியவங்களுக்குத் துரோகம் செய்யறதுதான் உனக்கும் உங்கப்பனுக்கும் கைவந்த கலையாச்சே! உண்மையான நண்பனா மதிச்ச என் தந்தைக்கே துரோகம் பண்ணவங்கதானே நீங்க!''

''அதெல்லாம்..''

''மறுக்காதே விமல். நான் குழந்தையில்லை. அந்த டாக்குமென்ட்ஸ், குடோனின் ரெய்டு, உன்னுடைய கைது இதுக்கெல்லாம் பின்னணியில் யார் இருக்காங்கன்னு தெரியுமா விமல்.,

''யாரு?''

''நானேதான். நம்ம கல்யாணமே ஒரு கண்கட்டு வித்தைதான்.''

''துரோகி.''

''நான் செய்தது துரோகமின்னா, நீயும் உங்கப்பாவும் செய்தது என்ன தேசத் தியாகமா. விட்டா,, நடுரோட்ல உனக்கு சிலை வைக்கச் சொலலுவே போலயிருக்கே!''



''ஏய்! நாங்க ஒண்ணும் போதை மருந்தை வீட்டுக்கு வீடு சப்ளை செய்யலை, வேணுங்கிறவங்க தான் எங்க கையைக் காலைப் பிடிச்சு வாங்கிட்டுப் போறாங்க...''

''அதுதான் அவங்க தப்பு. பெத்தவங்க எத்தனையோ நாள் பட்டினி கிடந்து, கஷ்டப்பட்டு பிள்ளைங்களுக்குப் பின்னாடி இரண்டு எழுத்தில் ஒரு தகுதி வரணுமின்னு பாக்குறாங்க. ஆனா அது இந்த இளைய சமுதாயத்திற்கு தெரியலையே!''

''எத்தனையோ மாணவர்கள் படிப்பில் கண்ணுங் கருத்துமாய் இருக்க சிலர் மட்டும் வழி தவறி உங்களை மாதிரி கயவர்களிடம் சிக்கி சீரழிஞ்சு போயிடறாங்க. என்ன செய்யறது கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரங்கிற மாதிரி கெட்ட பிறகுதானே புத்தி வருது.''

''வீண் வாக்குவாதம் ஏன்? ஸந்தனா. இன்னமும் நீ என் மனைவிதான். என்னை எதிர்த்த யாரையும் நான் விட்டது இல்லை'' விமலின் வயிற்றில் ஏதோ சுருக்கென்றது.

''அதுவரையில் நீ உயிருடன் இருந்தால்தானே?'' என எதிர்க் கேள்வி கேட்டாள் ஸந்தனா.

''என்னடி? என்னைக் கொல்லப் போறீயா? அது உன்னால் முடியுமா?'' எகத்தாளமாய் சிரித்தவன் அடுத்த நிமிடம் வயிற்றைப் பிடித்துக் கொண்டு படுக்கையில் விழுந்து துடித்தான்.

ஸந்தனா வசதியாய் நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். ''என்ன விமல் வயிறு எரியுதா? எரியட்டும் எத்தனை பெத்தவங்க தன் பிள்ளை அழியறதைப் பார்த்து வயிறு எரிஞ்சிருப்பாங்க. அதெல்லாம் சும்மா விடுமா என்ன அனுபவி!''

''அம்மா..'' வலியில் முனகினான் விமல்.

''இன்னும் கொஞ்ச நேரம்தான் விமல். பொறுத்துக்கோ, உங்கப்பாவிடம் போய் சொல்லு இனி ஒரு பிறவி நமக்கு வேண்டான்னு..''

''ச்சீ! நீயும் ஒரு பெண்ணா, புருஷன் துடிக்கிறதை வேடிக்கைப் பாக்குறீயே?''

''புருஷன் என்ன செய்தாலும் பொறுத்துப் போறது அந்தக் காலம் விமல், இது கம்ப்யூட்டர் யுகம். பெண்களை ஏமாற்ற முடியாது. தாலி ஒரு பெண்ணுக்கு பாதுகாப்புதானே தவிர கழுத்தை நெறிக்கக் கூடாது. புருஷன் செய்யுற துரோகத்தைக் கூட தாங்கிப்பா. ஆனா, தன் தாய்நாட்டுக்கு செய்யற துரோகம் என்றால் அது எவ்வளவு பெரிய உறவானாலும் மன்னிக்க மாட்டா. உன்னை மாதிரி சுயநலப் பிசாசுகள் இனியும் இந்தப் பூமியில் இருக்கவே கூடாது.''

''நோ.. ப்ளீஸ்.. ஸந்தனா என் மேல் இரக்கம் காட்டு. நான் உனக்கு தாலி கட்டினவன் இல்லையா?''

''இந்த தாலியை நான் வாங்கிட்டதற்கு காரணமே உன்னை மேல அனுப்பத்தான் விமல்..''

''போலீஸ் உன்னை சும்மா விடாது..''

''அதைப்பற்றி நீ கவலைப்படாதே விமல். ஏற்கனவே அப்பா இறந்த சோகம் பிஸினஸில் அடி.. இப்போ கைது செய்யப்பட்டு அவமானம் எல்லாம் சேர்ந்து, நேரம் காலம் பார்க்காம.. குடிச்சார்ன்னு சொல்லுவேன்..''

''ஒரு சின்ன மாத்திரைதான் உன் குடலை அழுக வைக்க, ஆல்கஹால் அதிகமானதால் இந்த ப்ராளமின்னு ஏற்கனவே



டாக்டர்கிட்டே செக் பண்ண போலி ரெக்கார்டும் கைவசம் வைச்சு இருக்கேன். அதனால எனக்கு எந்தப் பாதிப்பும் வராது. நீ கவலைப்படாதே. உன் கடைசி பயணத்திற்கு என் வாழ்த்துக்கள் விமல்'' அவள் பேசி முடிக்கவும் விமல் தன் கடைசி மூச்சை விடவும் சரியாய் இருந்தது.

ஆயிற்று, விமலின் மரணம் இயற்கையானது. அளவிற்கு அதிகமான ஆல்கஹால் அவன் குடலை அழுக வைத்து உயிரைப் பறித்து விட்டது என்று டாக்டர் ரிப்போர்ட் வந்தது. கருணாகரன் பதறினார். ''ஒரே மகள்ன்னு எத்தனை செல்லமா வளர்த்தேன்...

படுபாவிங்க, தொழில்லதான் ஏமாத்தினாங்கன்னு பார்த்தா இப்படி சீக்காளி பிள்ளையை கட்டி வைச்சு என் பொண்ணே பட்ட மரமாக்கிட்டாங்க. பூக்க ஆரம்பிக்கும் போதே என் மக கருகிட்டாளே.. கடவுளே நான் யாருக்கு என்ன தவறு செய்தேன்..''

''விடுங்கப்பா.. என் தலையில் இப்படி ஆவணுமின்னு இருந்திருக்கு, நீங்களும் வருத்தப்பட்டு நாளைக்கு உங்க உடம்பிற்கு ஏதாவது ஒண்ணுன்னா நான் அநாதை ஆயிடுவேன்..'' ஸந்தனாவின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் அவர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

நீரஜாவின் முன் விமலின் மரணச் செய்தி பத்திரிகை நீட்டப்பட்டது. அவள் முகத்தில் எந்த சலனமும் இல்லை.

''நீரு..! உனக்கு வருத்தம்..''

''இல்லேண்ணா, என்னைக்கு என் அன்பைக் கொச்சைப் படுத்தினானோ, அப்பவோ இவன் செத்திட்டான். இவனை மாதிரி ஆளுங்க செத்ததுக்கெல்லாம் கவலைப்படவே கூடாது.''

''குட் நீரஜா, இப்படித்தான் ஸ்போட்டிவ்வா இருக்கணும். உனக்கு நான் நீரஜா. இனி இந்த ஆஸ்பிட்டல் முழுவதும் உன் பொறுப்பு. உன் சேவையை விரிவுபடுத்து.''

''நன்றி ஸந்தனா..''

''கலர் உடை அணிந்திருந்த போதும் ஸந்தனாவின் நெற்றியின் வெறுமை செல்வாவின் மனதைப் பிளந்தது. என்ன இருந்தாலும் உங்களோட இந்த நிலைமைக்கு நானும் ஒரு காரணம்.''

''ப்ளீஸ் செல்வா.. கல்யாணத்தினால் மட்டும் ஒரு பெண் முழுமை அடைந்து விடுவதில்லை. நான் எதார்த்தனமானவள். என் வாழ்வு என் கையில்!''

ஸந்தனாவை உயர்ந்த இடத்தில் வைத்தான் செல்வா.

''ஆமாண்டா மேடம் கையில் அவங்க வாழ்க்கை மட்டு மில்லை, நம் வாழ்வும்தான். தாயே ஏதாவது பிரச்சனைன்னா பேசித் தீர்த்துப்போம். போட்டுகிட்டு தள்ளிடாதேம்மா.. எனக்கு இன்னும் ஒருமுறை கூட கல்யாணமே ஆகலை..'' பிரபு சொல்ல,

''நீங்க ராமனா இருக்கிற வரையில், நாங்களும் சீதைதான். ராவணனா மாறினா எச்சரிக்க மாட்டோம் எரிச்சிடுவோம் ஜாக்கிரதை.'' விரல் நீட்டி எச்சரித்தாள் ஸந்தனா.

ஸந்தனா செல்வாவின் கண்களுக்குப் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக! அரக்கனை வதம் புரிந்த துர்க்கையாய் தோன்றினாள்.

★